# போராட்டம்

இதழ் - 24 2016 பங்குனி    மக்கள் போராட்ட இயக்கத்தின் வெளியீடு    20 ரூபா




பக்கம் 07

**மருந்து வியாபாரத்தில் புதிய விளையாட்டு**




பக்கம் 08

**உறங்கிக் கிடப்போமா, அன்றேல் உரிமைக்காய் எழுவோமா?**

பக்கம் - 11



**தண்ணீருக்குத் தவிப்போர்**




**பேராசிரியர்கள் கேவலம் மட்டுமே கட்ட வேண்டும்**

பக்கம் - 15

# ஆட்சியாளர்கள் அடக்குமுறைக்குத் தயார் எதிர்கொள்ள மக்கள் தயார்!

நவதாராளமய உபாயங்களுக்கேற்ப பொருளாதாரத்தை சீர்படுத்த அரசாங்கம் எடுக்கும் அனைத்து முயற்சிகளின் போதும் மக்கள் எதிர்ப்பு அதிகரிப்பதினால் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டிருக்கும் இன்றைய கூட்டரசாங்கம் அவற்றை அடக்குவதாக அச்சுறுத்தல் விடுக்கின்றது. ஜனநாயகம் குறித்து இதுவரை போர்த்திக் கொண்டிருந்த பசுத்தோலை நீக்கிவிட்டு போராடும் சக்திகள் மீது அடக்குமுறையையும், அச்சுறுத்தலையும் விடுத்துக் கொண்டிருக்கின்றது. பிரதமர் ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றத்தில் விடுக்கும் அறிக்கைகள் போராடும் சக்திகளுக்கு விடுக்கும் எச்சரிக்கையாகவே அமைந்திருப்பதாக கட்சி கூறுகின்றது. யார் எதிர்த்தாலும் திட்டமிட்டபடி வெட்டுகள் தொடருமெனவும், வீதிப் போராட்டத்தில் இறங்கும் சக்திகளுக்கு எதிராக வீதியிலிறக்க அரசாங்கத்திடமும் நபர்கள் இருப்பதாக கூறும் பிரதமரின் கூற்று, எதிர்காலத்தில் கட்டவிழ்த்துவிடப்படவிருக்கும் அடக்குமுறைக்கான எதிர்வுகூறலாகுமென கட்சி பலமுறை சுட்டிக்காட்டியுள்ளது.

நாளுக்கு நாள் உக்கிரமடையும்

தொடர்ச்சி 2ஆம் பக்கம்

## போராட்டத்தின் பொய்க் குழிகள்

**தொழிலாளர் போராட்ட மத்திய நிலையத்தின் எச்சரிக்கை**

கடந்த வரவு செலவு திட்டத்தின் வாயிலாக ஆரம்பிக்கப்பட்டு படிப்படியாக நடைமுறைக்கு கொண்டுவர தயாராகும் நவதாராளமய மறுசீரமைப்புகளுக்கு எதிராக தொழிலாளர் வர்க்கத்திடமிருந்து கிளம்பும் போராட்டத்தை காட்டிக் கொடுக்க தயாராவதாக தொழிலாளர் போராட்ட மத்திய நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. கடந்த வரவு செலவு திட்டத்தின் மூலம் முன்வைக்கப்பட்ட அரச ஊழியர்களினது ஓய்வூதியம் வெட்டப்படுதல், தனியார் துறை ஊழியர்களின் 8 மணி நேர வேலை நாளை இரத்துச் செய்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு எதிரானதும், பொதுவாக அரசாங்கம் ஆலோசித்துள்ள தொழிலாளர் உரிமைகளை இரத்துச் செய்யும் சட்டத் திருத்தங்களுக்கு எதிரானதுமான போராட்டத்தை தவறாக வழிநடத்தி, காட்டிக் கொடுக்க அரசாங்க

தொடர்ச்சி 2ஆம் பக்கம்




பெண்கள் விடுதலை இயக்கம் வீதிகளில்

இம்முறை சர்வதேச பெண்கள் தினத்தையொட்டி சம்பிரதாய நினைவூகூரல் விழாக்களுக்குப் பதிலாக, சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய

தொடர்ச்சி 2ஆம் பக்கம்

அன்னையரே, புதல்வியரே,
சகோதரிகளே, தோழியரே...

மேலும் ஒரு நாள்
மீளவும் வந்தது மார்ச 8
என்றும்போல்
சமைப்பது, அழகுபடுத்துவது
ஆடைகளைத் தயார்படுத்துவது
மேலும் பல
பெண்களுக்கு அதுதானே வேலை!

பிள்ளைப் பெறுவாள் பிள்ளை வளர்ப்பாள்
வேறு வேலை இல்லை போலும்
தொலைக்காட்சிகளிலும்
எப்.எம். அலைவரிசைகளிலும்
எப்போதும் கேட்பது ஒரே கதை தான்

ஆனால், யாருமே கதைக்காத
மேலும் வேலைகள் பல உண்டு பெண்களுக்கு,
தேயிலைத் தோட்டத்தில் கண்ணீர் சிந்தி
பாலைவனத்தில் வாழ்வை அழித்து
குறைந்த கூலிக்குப் பட்டாடைகளைத் தைத்து
வெளிநாட்டு முதலீட்டாளனை மகிழ்வித்து,
வாழ்க்கையில் எதுவுமே உரிமையில்லா
பெண்கள் எத்தனைபேர், துன்பத்தை மட்டுமே
சுமக்கும்
பொருளாதார செயற்பாட்டின் பங்காளியாக
எந்த மதிப்புமற்ற
எப்போதும் விலைபோகும் சரீரம் அவளது

இலாபம் தேடும் இந்தக் கொடூரச் சமூகம்
பச்சிளம் பாலகி தொட்டு பாட்டி வரை
யாரோ ஒருவனால் பலிக்கடாவாகி
வீசிடுவான் பாதையிலே வாழ்வுதனைப் பாழாக்கி

இந்தக் கொடுமையெல்லாம்
எவனோ ஒருவனின் தவறால் தானென எண்ணி
அதனை விதியிடம் சுமத்தி
பார்த்திருப்பதற்கல்ல,

பொருளாதாரத்திடமும் பலியாகி
பெண்ணென்றதனால் படும் துன்பமும்...
காலத்தை வெல்ல இருமுனைப் போராட்டம்
போராட்டம்... ஆம் போராட்டம் மட்டுமே
இக்கொடூரச் சமூகத்தை எதிர்த்து
உடனே துவக்க வேண்டும்
போராட்டமதை...

உன்னையும், என்னையும்,
நம் எல்லோரையும்
«மனிதப்பிறவி» யாக மதிக்கும் சமூகத்தை
நாம் உருவாக்க
இனி, முன்னிலை வகிக்க வருவீர் துணிந்து
**நாம்,**
**எதிர்காலத்திற்காகப் போராடுவோம்!**

பெண்கள் விடுதலை இயக்கம் FREE WOMEN!



படிப்பகம்

1ம் பக்க தொடர்ச்சிகள்

## ஆட்சியாளர்கள் அடக்குமுறைக்குத்.....

நெருக்கடியிலிருந்து மீள எதிர்கால திட்டங்கள் இல்லாமையினாலும், உலக மூலதனத்தின் தேவையின் முன்பாக மண்டியிடுவதைத் தவிர மாற்றுவழி இல்லாமையினாலும் மக்கள் விரோத – சமூக விரோத உபாயங்களை தெரிவு செய்திருக்கும் ஆளும் வர்க்கத்திற்கு, தமது பயணத்திற்கு பாட்டாளி வர்க்கம் உட்பட மக்கள் சக்திகளிடமிருந்து கிளம்பும் எதிர்ப்புகள் குறித்து பித்துப்பிடித்திருப்பதாகவும், இவ்வாறான அறிக்கைகள் அதன் வெளிப்பாடாகுமெனவும் கூறும் கட்சி, தொடுக்கப்படும் எந்தவொரு அடக்குமுறையையும் எதிர்கொள்ள வர்க்கத்தை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டுமெனவும் கூறுகின்றது. ஏற்கனவே போராட்டத்தில் குதித்திருக்கும் தொழிலாளர், விவசாயிகள், மீனவர்கள், மாணவர்கள், வேலையற்றவர்கள், நகரங்களிலிருந்து விரட்டப்படும் ஒடுக்கப்பட்டவர்கள் உட்பட அனைத்து சக்திகளும் இந்த அடக்குமுறையை கண்டு பின்வாங்காது, அடக்குமுறைக்கு எதிரான அனைத்து சக்திகளையும் ஒன்றிணைக்கும் நடவடிக்கையிலும் கட்சி ஈடுபட்டிருக்கின்றது.

---------------------------------------------

## பெண்கள் விடுதலை...

நிகழ்ச்சியொன்றை பெண்கள் விடுதலை இயக்கம் நடாத் தியது . பெண்கள் எதிர் கொண்டுள்ள பிரச்சினைகள், சமத்துவமின்மை மற்றும் பெண் விடுதலை குறித்த பிரச்சினைக்கு சரியான தீர்வூ சம்பந்தமாக சமூகக் கரு-த்தாடலை தொடங்குவதற்காக, “எதிர்காலத்திற்காக போராடு-வோம்” என்ற தொனிப்பொருளிலான நிகழ்ச்சிகள் நாட்டின் பல பாகங்களிலும் மார்ச் 6 தொடக்கம் 8 வரய் நடை பெற்றது.

---------------------------------------------

## போராட்டத்தின் பொய்க்...

சார்பு தொழிற்சங்கங்கள் நடவடிக்கை எடுத்தன. இம்முறையும் அரசத்துறை ஊழியர்களுக்கு வழங்குவதாக வாக்குறுதியளித்த 2500 ரூபா சம்பள அதிகரிப்பை வழங்காததற்கு எதிராக உழைக்கும் மக்கள் எதிர்ப்பை தனிப்பட்ட போராட்மாக சித்தரித்து, ஓய்வூதிய வெட்டுக்கு எதிரான போராட்டத்தை மூடிமறைக்க சூழ்ச்சி செய்யப்படுவதாக கூறும் தொழிலாளர் போராட்ட மத்திய நிலையம், இது குறித்து உழைக்கும் மக்களுக்கு விளக்கமளிக்கும் நிகழ்ச்சிகளை மார்ச் மாதத்தில் செயற்படுத்த திட்டமிட்டுள்ளதாகக் கூறுகின்றது.

# இன்னுமாடா இந்த உலகம் ஐக்கிய நாடுகள் சபையை நம்புது!!!

முதலாம் உலகப் போருக்குப் பின் உலக நாடுகள் சங்கம் என்ற அமைப்பை இனி ஒரு போதும் போர் நடக்கக்கூடாது, உலகில் சமாதானம் நிலவவேண்டும் என்று அந்த நாளைய பெருந்தலைகளான பிரித்தானியாவும், பிரான்சும் முன்னுக்கு நின்று 10.01.1920 அன்று தொடங்கினார்கள். (League of Nations, Wikipedia).

«ரம்பையின் காதல்» படத்தில் «சமரசம் உலாவும் இடமே, நம் வாழ்வில் காணா சமரசம் உலாவும் இடமே» என்ற சீர்காழி கோவிந்தராஜன் பாடல் சுடுகாட்டில் ஒலிப்பது போல தங்களால் கொல்லப்பட்டவர்களின் மேல் ஏறி மிதித்துக் கொண்டு இந்த கொலனித்துவ கொலைகாரர்கள் «சமாதானம் உலவும் இடமே» என்று உலக நாடுகள் சங்கத்தில் நின்று பாடினார்கள்.

பழைய வல்லரசுகள் சண்டையிட்டுச் சாகட்டும் அதன் பிறகு நாம் தான் வருத்தப்படாத வல்லரசாக இருப்போம் என்பதற்காக ஒதுங்கியிருத்தல் (isolationism) என்ற தந்திரத்தை கடைப்பிடித்த அமெரிக்கா உலகநாடுகள் சங்கத்தில் சேரவில்லை.

ஜேர்மனி தான் முதலில் சண்டையைத் தொடங்கியது என்பதால் முதலாம் உலகப் போரிற்கான முழுப்பழியையும் ஜேர்மனியில் தலையில் போட்ட உலகின் பாதிநாடுகளை அடிமைகளாக வைத்திருந்த «ரொம்ப நல்லவர்களான» பிரித்தானியாவும், பிரான்சும் ஜேர்மனியை சங்கத்தில் சேர்க்கவில்லை.

பொதுவுடமைக் கட்சியின் ஆட்சி நடக்கிறது் ரஸ்ய அரசபரம்பரையினரான ரோமனோவ் குடும்பத்தினரை கொலை செய்து விட்டார்கள் என்ற காரணங்களிற்காக அகிம்சாவாதிகளான பிரித்தானியாவும், கருணைக்கடல்களான பிரான்சும் சோவியத் யூனியனை சங்கத்தில் சேர அனுமதிக்கவில்லை. தங்களது நாட்டில் கொடுங்கோல் ஆட்சி செய்த கொடியவர்களான ஜார் அரசகுடும்பத்திற்கு சோவியத் அரசு மரணதண்டனை விதித்தது அநியாயம் என்று கண்ணீர் விட்ட இவர்கள் தான் தங்களிற்கு துளியும் சம்பந்தம் இல்லாத நாடுகளை எல்லாம் அடிமைப்படுத்தி வைத்துக் கொண்டு இருந்தார்கள். இவர்களை எதிர்த்த பகவத் சிங் போன்ற தேசபக்தர்களை இலட்சக்கணக்கில் கொன்றார்கள்.

அடிமைப்படுத்திய நாடுகளில் இவர்கள் அடித்த கொள்ளைகளினால் பல லட்சம் மக்கள் பட்டினியால் இறந்தார்கள்.

ஆர்.ஆர் எஸ்காரர்களின் ஆதர்ச புருசனான கிட்லரும், நாசிகளும் இரண்டாம் உலகப்போரைத் தொடங்கியதால் சங்கம் கலகத்துப் போய் விட்டது.

போரின் முடிவில் 20.04.1946 அன்று சங்கத்திற்கு முடிவு கட்டப்பட்டு விட்டது. அதே நேரத்தில் பிரித்தானியா, பிரான்சு போன்ற வல்லரசுகளும் தம் பலம் இழந்து வளர்ந்து வந்த அமெரிக்காவிற்கு வழி விட்டன. புது நாட்டாமைக்கு புதுப்பஞ்சாயத்து தேவைப்பட்டது.

அமெரிக்க ராஜாங்க திணைக்களத்தினால் புதிய அமைப்பிற்கான திட்டங்கள் 1939 இலேயே தயாரிக்கப்பட்டன. பிராங்லின் ஷரூஸ்வெல்ட், வின்ஸ்டன் சேர்ச்சிலினால் 1941 இல் வெள்ளைமாளிகையில் வைத்து «ஐக்கிய நாடுகளிற்கான பிரகடனம்» என்னும் முன்வரைவு வெளியிடப்பட்டது.

«இந்தியாவிற்கு சுதந்திரம் கொடுக்க முடியாது, ஏனெனில் இந்தியர்களிற்கு தம்மைத் தாமே ஆளத் தெரியாது» என்று திமிர்த்தனமாக சொன்ன வின்ஸ்டன் சேர்ச்சில் என்னும் இந்த கொழுத்த பன்றியும், அமெரிக்காவும் தான் ஐக்கிய நாடுகள் சபையை சேர்ந்து தொடங்க திட்டம் போட்டது என்றால் ஐக்கிய நாடுகள் சபை யாருக்காக தொடங்கப்பட்டது, யாருடைய நலன்களிற்காக தொடங்கப்பட்டது என்பதை இதற்கு மேல் விளக்கத் தேவையில்லை.

உலக சமாதானத்திற்காகவும், ஜனநாயகத்திற்காகவும் கண்ணீர் விடும் இவர்கள் தான் உலக நாடுகள் சங்கத்தின் பாதுகாப்புச்சபையில் அமெரிக்காஇ



பிரித்தானியா, பிரான்ஸ், அந்நாளைய சோவியத் யூனியன் (ரஸ்சியா), சீனக்குடியரசு எனப்படும் தாய்வான் என்பவை தான் எனப்படும் தடுப்பு ஆணை அதிகாரம், நிரந்தர அங்கத்துவம் கொண்ட நாடுகள்.ஆம், மாவோ சேதுங் தலைமையிலான பெரும்பகுதி சீனாவையும், பெரும்பகுதி சீனமக்களையும் கொண்ட மக்கள் சீனக்குடியரசிற்கு 1971 வரை நிரந்தர அங்கத்துவம் கொடுக்காமல் அமெரிக்காவின் கைப்பொம்மையான தாய்வானிற்கு நிரந்தர அங்கத்துவம் கொடுத்ததுதான் இவர்களின் ஜனநாயகம்.

உலக நாடுகளிம் பாதுகாப்பை இந்த ஐந்து நாடுகளும் மட்டுமே முடிவு செய்வார்களாம், அதிலும் அமெரிக்காஇ பிரித்தானியா, பிரான்ஸ், தாய்வான் போன்ற அமெரிக்காவும் மூன்று கள்ளர்களும் பெரும்பான்மையாக இருந்து கொண்டார்கள்.

கொரியா, வியட்நாம், லாவோஸ், கம்போடியா, கொங்கோ, தென் அமெரிக்க நாடுகள் தொடங்கி இன்று அப்கானிஸ்தான், ஈராக்இ சிரியா வரை அமெரிக்காவும் அடிப்பொடிகளும் செய்து வரும் அத்தனை அநியாயங்களிற்கும் ஐக்கிய நாடுகள் சபை ஒத்து ஊதும். அமெரிக்காவிற்கு ரஸ்சியா, சீனா போன்ற நாடுகள் எதிர்ப்புக் காட்டும் போது அது ஐக்கிய நாடுகள் சபையை கால்தூசியை தட்டுவது போல தட்டிவிட்டு போர் தொடங்கும். இராக்கின் எண்ணெய் வயல்களை கொள்ளையடிப்பதற்காக, ஈராக் பேரழிவு ஆயுதங்களை வைத்திருக்கிறது என்று பொய் சொல்லி ஈராக்கை ஆக்கிரமிக்க வெளிக்கிட்டபோது, உள்ளூர் கொலைகாரன் சதாம் குசைனின் வியாபார பங்காளிகளான ரஸ்சியாவின் பூட்டினும், சீனாவும் எதிர்த்த போது ஐக்கிய நாடுகள் சபையின் ஒப்புதல் என்னும் சிறுசடங்கை கூட ஒதுக்கி தள்ளிவிட்டு ஜோர்ஜ் புஸ்சும் அவனின் வளர்ப்புப்பிராணியான ரொனியும் இராக்கை மரணபூமியாக்கியது சமீபத்திய உதாரணம்.

இலங்கையில் தமிழ்மக்கள் இலங்கை அரசுகளால் படுகொலை செய்யப்பட்டபோது தமிழ்மக்களின் பேரழிவைத் தடுத்து நிறுத்த ஐக்கிய நாடுகள் சபை என்ன செய்தது?. வன்னிப்போர் நடந்து கொண்டிருந்த போது சபை அனுப்பிய பிரதிநிதி விஜய் நம்பியாருக்கும், மகிந்த ராஜபக்சவின் கொலைகார அரசுடன் கூட நின்று தமிழ்மக்களைக் கொன்ற இந்திய அரசிற்கும் இருந்த தொடர்புகள் வெளிப்படையானவை. தமிழ்மக்களின் இனப்படுகொலையின் பின் இலங்கை வந்த பான் கி-மோன் முகாம்களில் கொலைகாரன் ராஜபக்சவினால் சிறைப்பிடிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்த எம்மக்களிற்கு என்ன ஆறுதலைக் கொடுத்தார்?. ஆயிரக்கணக்கான அப்பாவிமக்களைக் கொன்ற கொலைகாரர்களுடன் கைகுலுக்கி விட்டுச் சென்றதைத் தவிர வேறென்ன புடுங்க முடிந்தது?.

இலங்கையில் நடைபெற்ற போரில் நடந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டு குறித்து விசாரணை நடத்தும் வெளிநாட்டு நீதிபதிகளை பயன்படுத்துமாறு எந்த சந்தர்ப்பத்திலும் அழுத்தம் கொடுக்கப்படாது என ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் செய்யத் ராட் அல் ஹூசைன் தெரிவித்துள்ளாராம். கொழும்பில் வைத்து ஊடகவியலாளர் பிரகித் எக்னலிகொட ராஜபக்ச கொலைகாரர்களினால் கடத்தப்பட்டு காணாமல் போகச்செய்யப்பட்டார். சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க இவர்களால் கொலைசெய்யப்பட்டார். ஊடகவியலாளர்களான சிங்கள மொழி பேசுபவர்களின் கடத்தல்களிற்கும், மரணங்களிற்குமே நீதி கிடைக்காத போது ஒடுக்கப்படும் தமிழ்மக்களின் இனப்படுகொலைகளிற்கு இலங்கையின் ஆட்சியாளர்கள் விசாரித்து நீதி வழங்குவார்களாம் ஆணையாளர் சொல்கிறார். இதைச் சொல்லத்தான் இவர் இலங்கை வந்தாரா?

இலங்கையில் புதிய பொருளாதாரக் கொள்ளையின் அடுத்த கட்டம் நடைமுறைக்கு வந்திருக்கிறது. அதற்காகவே சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஏகாதிபத்தியங்களால் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளனர். தமிழ்மக்களின் அழிவுகளின் மேல் தமது ஆயுதவிற்பனை இலாபவேட்டையை நடத்தி முடித்த வல்லரசுகள் தற்போது அடிக்கவிருக்கும் கொள்ளைக்கு அமைதியான சூழல் வேண்டும். தமது வாழ்வை இழந்து நிற்கும் தமிழ்மக்களை அரசிற்கு எதிர்ப்பு காட்ட வேண்டாம் இலங்கை அரசு விசாரணை செய்து நீதி வழங்கும் என்று அமைதிப்படுத்துவதற்கே ஐக்கிய நாடுகள் சபை இந்த நாடகம் போடுகிறது.

ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் செய்யத் ராட் அல் ஹூசைன் இன் வருகையை தமிழ் தேசியக் கூட்டமைப்பு பெரிதாகக் காட்டுகிறது. அவரிடம் பேசுவதன் மூலம் நீதி கிடைக்கும் என்று கூட்டமைப்பு தமிழ் மக்களிடம் தெரிவிக்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவரைஇ ஐக்கிய நாடுகள் சபையை நம்பச் சொல்கிறது. ஹூசைன் இலங்கை அரசு விசாரணை நடத்தி நீதி வழங்கும் என்று நம்புகிறார். அதாகப்பட்டது மக்களைக் கொல்லும் இலங்கையின் அரசுகள் நீதி வழங்கும் என்று இலங்கை அரசு, ஐக்கிய நாடுகள் சபை, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என எல்லோரும் சேர்ந்து ஒத்த குரலில் சொல்கிறார்கள்.

எரிநெருப்பில் விழுந்து கிடக்கும் எம் மக்களின் மேல் ஏறி மிதித்து இவர்கள் சொல்லும் பொய்களை ஒரு நாள் எம்மக்கள் எதிர்த்து நின்று போர் புரிவர். அன்று காலத்தச்சன் வெட்டி முறிக்கும் மரம் போல இவர்களின் பொய்களும் சரிந்து விழும்.



படிப்பகம்

# கோலஞ்செய் யாழ்ப்பாணத்து பிரின்சிபலே நீயெனக்கு ஆறாம் வகுப்பு அட்மிசன் ஒன்று தா

*« பணமும் பாரிஸ் சென்ட்டும், சென்ற் மைக்கல் சேர்ட்டும் நாலு பேர் அறியாமல் கலந்துனக்கு நான் தருவேன் - கோலஞ்செய் யாழ்ப்பாணத்து பிரின்சிபலே நீயெனக்கு ஆறாம் வகுப்பு அட்மிசன் ஒன்று தா. »*



பாட்டைக் கெடுத்ததிற்கு அவ்வையார் மன்னிக்கவும். பிள்ளையார் என்று ஒருவர் இருந்தால் அவருக்கு அவ்வைக்கிழவி சொன்னபடி பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை நாலும் கலந்து கொடுத்தால் போதும். ஆனால் யாழ்ப்பாணத்து பாடசாலைகளிற்கு ஆயிரக்கணக்கில், இலட்சக்கணக்கில் பணம் கொடுத்தால் தான் ஒரு பதினொரு வயது பச்சைக்குழந்தைதக்கு பள்ளிக்கூட அனுமதி கிடைக்கும். அந்தச் சிறுவனோ, சிறுமியோ ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசு தேர்வில் நல்ல புள்ளிகள் பெற்றாலும் பணமில்லாவிட்டால் பாடசாலைக் கதவுகள் திறவாது.

ஏழைகளிற்கும் பணக்காரர்களிற்குமான பொருளாதார இடைவெளி மிக அதிகமாக இருக்கும் இன்றைய இலங்கைச் சூழலில் ஏழைப்பெற்றோர் தமது குழந்தைகளின் எதிர்காலத்திற்கான ஒரே வெளிச்சமாக இலங்கைமக்களின் அடிப்படை உரிமையான இலவசக் கல்வியை நம்பியிருக்கிறார்கள். இலங்கையின் மக்கள் விரோத அரசுகள் கல்வியையும் தனியாருக்கு விற்று காசு பார்க்க முயற்சிப்பதை எதிர்த்து மாணவர்கள் இடைவிடாது தீரத்துடன் போராடி வருகிறார்கள். இலங்கை முழுவதும் உள்ள ஏழைமாணவர்களின் எதிரி இலங்கை அரசாங்கம் என்றால் யாழ்ப்பாணத்து ஏழை மாணவர்களிற்கு இலங்கை அரசு, பாடசாலை நிர்வாகம் என இரு எதிரிகள் இடை மறிக்கிறார்கள்.



இலங்கை அரசு தமிழ்மக்களை ஒடுக்குகிறது, இரண்டாந்தரக் குடிமக்களாக நடத்துகிறது என்றால் இந்த பச்சைத்தமிழர்களான யாழ்ப்பாணத்து பாடசாலை நிர்வாகிகள் ஏழைத்தமிழ் மாணவர்களை ஏறி மிதிக்கிறார்கள். பாடசாலைக்கு கட்டிடம் கட்ட, பாடசாலை அபிவிருத்திக்கு என்று ஒவ்வொரு ஆண்டும் புதிதாக சேர்பவர்களிடம் கொள்ளை அடிக்கிறார்கள்.

இந்த பிரபல பாடசாலைகளின் வெளநாடுகளில் இருக்கும் பழைய மாணவர் சங்கங்கள் பெரும் பணம் செலவழித்து தமிழ்ச்சினிமாவின் ஆசாமிகளை கூப்பிட்டு ஆண்டுவிழா கொண்டாடுவார்கள். போரும், வறுமையும் கழுத்தை நெருக்கும் சூழலில் எமது குழந்தைகளின் எதிர்காலம் என்பது கானல்நீராக இருக்கும் போது இவர்கள் தமிழ்ச்சினிமாவில் கோடிக்கணக்கில் சம்பாதிக்கும் ஏழைகளிற்கு பணத்தை அள்ளிக் கொடுக்கிறார்கள். ஏன் இப்படி அநியாயம் செய்கிறீர்கள் என்று இவர்களைக் கேட்டால் தமிழ்ச் சினிமாவின் உலக அதிசயங்களைக் காட்டினால் தான் பணம் சேரும் அந்தப் பணத்தில் பாடசாலைக்கு கட்டிடம் கட்ட உதவி செய்கிறோம் என்று ஒரு விஞ்ஞான விளக்கம் கொடுப்பார்கள்.

பாடசாலை நிர்வாகிகளும், பழைய மாணவர் சங்கங்களும் சொல்வது போல சேர்க்கும் பணத்தில் கட்டிடங்கள் கட்டியிருந்தால் இந்தச் சின்ன யாழ்ப்பாணத்தில் நிற்பதற்கு கூட இடமில்லாமல் பாடசாலைக்கட்டிடங்கள் மட்டும் தான் இருக்க வேண்டும். அதிகமான பாடசாலைகள் அன்றிருந்த மாதிரியே தான் இன்றைக்கும் இருக்கின்றன. ஆகவே இந்த கட்டிடங்கள் எங்கே கட்டப்படுகின்றன என்பதை யாராவது கண்டுபிடித்து சொல்ல வேண்டும்.

மாணவர்களிடம் பணம் இருந்தால் தான் படிப்பிப்போம் என்று இவர்கள் கல்வியை விற்கிறார்கள். ஆனால் பணத்தைப் பற்றிய சிந்தனை இல்லாமல் மாணவர்களிற்கு கல்வியை அள்ளி வழங்கிய காலம் ஒன்று இருந்தது. யாழ்ப்பாண வாலிபர் சங்கம், இலங்கை கம்யூனிஸ்ட்டு கட்சி போன்றவற்றின் அங்கத்தினர்கள் அமைப்புகள் எதிலும் அங்கத்துவம் வகிக்காவிட்டாலும் மாணவர்களின் எதிர்காலத்தில் அக்கறை கொண்ட ஆசிரியர்கள் என்று மாபெரும் மனிதர்கள் அன்றிருந்தார்கள். அவர்கள் வீட்டிற்கு போகும் சிந்தனையே இல்லாமல் மாலைநேரங்களில் கற்பித்தார்கள். தமது வீடுகளிற்கு மாணவர்களை வரவைத்து கற்பித்தார்கள். ஊர்களில் உள்ள வாசிகசாலைகளில், சனசமுகநிலையங்களில் ஆசிரியர்களும். ஊர்களில் உள்ள உயர்கல்வி கற்றவர்களும் இரவுநேரங்களில் கற்பித்தார்கள்.

அதனால் தான் அந்த நாட்களில் ஒரு வருடத்தில் படிப்பிக்க வேண்டியதை ஒரு தவணையான மூன்று மாதங்களில் அவர்கள் படிப்பித்து முடித்ததாகவும் இலங்கையிலேயே மிக அதிகளவான மாணவர்களை பல்கலைக்கழகங்களிற்கு அனுப்பி வைக்கக் கூடியதாகவும் இருந்ததாக கந்தரோடை ஸ்கந்தவரோதயா கல்லூரியின் முன்னாள் அதிபரும், யாழ்ப்பாண வாலிபர் சங்கத்தின் அங்கத்தவருமான காலம் சென்ற ஒரேற்றர் சுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிடுகிறார்.

**மாணவர்களிடம் பணம் இருந்தால் தான் படிப்பிப்போம் என்று இவர்கள் கல்வியை விற்கிறார்கள். ஆனால் பணத்தைப் பற்றிய சிந்தனை இல்லாமல் மாணவர்களிற்கு கல்வியை அள்ளி வழங்கிய காலம் ஒன்று இருந்தது. யாழ்ப்பாண வாலிபர் சங்கம், இலங்கை கம்யூனிஸ்ட்டு கட்சி போன்றவற்றின் அங்கத்தினர்கள் அமைப்புகள் எதிலும் அங்கத்துவம் வகிக்காவிட்டாலும் மாணவர்களின் எதிர்காலத்தில் அக்கறை கொண்ட ஆசிரியர்கள் என்று மாபெரும் மனிதர்கள் அன்றிருந்தார்கள். அவர்கள் வீட்டிற்கு போகும் சிந்தனையே இல்லாமல் மாலைநேரங்களில் கற்பித்தார்கள். தமது வீடுகளிற்கு மாணவர்களை வரவைத்து கற்பித்தார்கள். ஊர்களில் உள்ள வாசிகசாலைகளில், சனசமுகநிலையங்களில் ஆசிரியர்களும். ஊர்களில் உள்ள உயர்கல்வி கற்றவர்களும் இரவுநேரங்களில் கற்பித்தார்கள்.**

இன்றைக்கு அந்த ஆசிரியர்களும் இல்லை. ஊரவர்களும் இல்லை. கோவில் கோபுரத்தை மற்ற ஊர் கோயில் கோபுரத்தை விட எவ்வளவு உயரமாக கட்ட வேண்டும் என்ற போட்டி தான் இன்றைக்கு நடக்கிறது. பாராளுமன்ற உறுப்பினர்களிற்கும், வட மாகாணசபையிற்கும் ஒதுக்கப்படும் நிதியில் பெரும்பகுதி செலவழிக்கப்படாமல் திருப்பி அனுப்பப்படுகிறது. வீணாக திருப்பி அனுப்பும் நிதியை ஏழைக்குழந்தைகளின் கல்விக்கு பாவிக்கக் கூடாதா் பாடசாலைகளில் நன்கொடை என்ற பெயரில் நடக்கும் கல்விக்கொள்ளையை தடுத்து நிறுத்தக் கூடாதா என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்காரர்களிடம் யாரும் கேட்டு விடாதீர்கள். சரத் பொன்சேகா, ரணில் விக்கிரமசிங்கா, மைத்திரி சிறிசேனாவுடன் கூட்டுச் சேர்ந்து தமிழ்மக்களின் இனப்படுகொலைக்கு தீர்வு காண்பது போல இந்த கல்விக்கொள்ளைக்காரர்களுடன் சேர்ந்து ஒரு தீர்வு ஒன்றைக் கண்டு பிடித்தாலும் பிடிப்பார்கள்.

யாழ்ப்பாணத்தில் நன்கொடை கேட்டு ஏழைமாணவர்களின் கல்வியை அழிக்கிறார்கள். வன்னியில், கிழக்கு மாகாணத்தில் போரினால் அழிந்த வாழ்வும், வறுமையும் ஏழைக்குழந்தைகளிற்கு எதிர்காலம் என்பதை எண்ணிப் பார்க்க முடியாமல் தடை போடுகின்றன. வாழ்வு என்பது வறுமை என்பதாகிப் போன மலையகத்தில் ஏழைச்சிறுவர்கள் பசி காரணமாக குழந்தை தொழிலாளர்களாகி தேயிலைச் செடிக்கு உரமாகின்றார்கள். முதலாளித்துவக் கொள்ளையர்களான இலங்கை அரசினால் முழு நாடுமே வறுமையில் மூழ்கிறது.

இலங்கை அரசின் கல்விக் கொள்ளைக்கு எதிராக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தொடர்ந்து போராடுகின்றது. அது போல மற்ற மாணவர்களும் அமைப்பாகி போராட முன் வர வேண்டும். நன்கொடை கேட்கும் அதிபர்களிற்கு எதிராக அந்தப்பகுதி மக்களும், மாணவர்களும் போராட வேண்டும். இன்று மக்களிற்கு கிடைத்திருக்கும் உரிமைகள் யாவும் போராடிப் பெற்றவையே அன்றி இந்த மக்கள் விரோத அரசுகள் தாமாக கொடுத்த சலுகைகள் அல்ல. போராட்டம் இன்றி வாழ்க்கை இல்லை.



படிப்பகம்



# மித்திரனில் இருந்து யாழ்ப்பாண இணையத்தளம் வரையான ஊடகப்பொறுக்கிகள்

தேசத்தின் முதன்மையான தமிழ்ப்பத்திரிகை என்று சொல்லிக் கொண்டு வரும் வீரகேசரி நாளிதழின் வாலான மித்திரன் தொடங்கி யாழ்ப்பாணத்தின் «பண்பாட்டை» காப்பாற்ற அவதாரம் எடுத்திருப்பதாக ஊளையிடும் இந்தப் பொறுக்கி இணையத்தளங்கள் வரையான வரலாறு ஊடக வரலாறு அல்ல. இலங்கையின் மஞ்சள் பத்திரிகைகளின் வரலாறு. பெண்களை இழிவு செய்து பத்திரிகை விற்று பணம் சம்பாதிக்கும் வியாபாரிகளின் வரலாறு. உள்ளாடைகளை தேடி அலையும் ஊனம் பிடித்த ஆபாசப் பொறுக்கிகளின் வரலாறு.

மேற்படி வருத்தம் அல்லது கோளாறு உலக அளவில் புதிதானது அல்ல. இந்த நோய், மேற்குநாடுகளில் அமெரிக்காவில், வலதுசாரியம் சார்ந்த கிறீஸ்தவ கொன்சர்வேட்டிசம், ஜேர்மன் அடிப்படைவாதம், அமெரிக்க கிறீஸ்தவ அடிப்படைவாதம், கத்தோலிக்க பிற்போக்குவாதம் என்ற பெயர்களால் அழைக்கப்படுவதைக் கவனித்து இருப்பீர்கள். மேற்கூறிய இந்த பழமைவாத சக்திகள் அந்தந்த நாடுகளின் சமூகத் தன்மைகேற்ப, அவரவர் சமூகத்தில், அரசியலில் ஆதிக்கத்தை செலுத்தி வருகின்றனர். இக்கும்பல்களை உள்ளார்ந்து கவனித்தால் இவர்கள், எல்லாவகையான அடிப்படை மனித உணர்வுகளுக்கும், உரிமைகளுக்கும், நியாயமான சந்தோசங்களுக்கும் எதிரானவர்களாக இருப்பதை அவதானிக்கலாம்.

உதாரணமாக, மேற்குநாடுகளில் பெண்கள் சார்ந்த அனைத்து உரிமைகளையும் மறுப்பவர்களாகவும், பெண்ணடிமைத்தனத்தை ஆதரிப்பவர்களாகவும் இவர்கள் இருப்பதைக் காணலாம். கருக்கலைப்பு, ஆடை அணிகலன் எதிர்ப்பு, சமப்பாலுறவு எதிர்ப்பு, பெண்களுக்கு அரசியல் மற்றும் தொழில்சார் நிறுவனங்களில் அதிகார மறுப்பு என இவர்களின் எதிர்ப்புகளை அடுக்கிக் கொண்டே போகலாம் என மணலைமைந்தன் முகப்புத்தகத்தில் தூ யவாதிகள் என்று சொல்லிக்கொண்டு பிற்போக்கு பழமைவாதம் பேசுபவர்களைக் குறிப்பிடுவது இந்த ஊடகப்பொறுக்கிகளிற்கும் அப்படியே பொருந்துகிறது.

மிகச் சிறு வயதிலேயே சாதிவெறியர்களாலும், காவல்துறையினராலும் பாலியல் வல்லுறவுக் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட பூலான்தேவி என்ற வட இந்தியாவின் உத்தரப்பிரதேசத்தை சேர்ந்த ஏழைப்பெண்ணின் கதை மித்திரனில் தொடராக வந்தது. பூலான்தேவி மல்லா எனப்படும் படகோட்டிகளான கடற்தொழிலாளர் சமுகத்தை சேர்ந்தவர். சிறுவயதில் மணம் செய்து வைக்கப்பட்டவர். அவரது கணவரால் உடலாலும், உள்ளத்தாலும் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டவர். அவரது ஊரின் ஒடுக்கும் சாதியான தாக்குர் எனப்படும் சாதிவெறியர்களின் பாலியல், சாதிக் கொடுமைகளில் இருந்து தப்புவதற்காக ஊரை விட்டு ஓடிய போது சம்பல் பள்ளத்தாக்கு கொள்ளைக்காரர்களிடம் சிக்கி அவர்களாலும் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டார்.

இந்தப் பரிதாபத்திற்குரிய பெண்ணின் கதை மித்திரனில் வந்தது என்றதும் பூலான்தேவியின் வறுமை, பாலியல் வன்கொடுமையினல் சிதைந்து போன வாழ்க்கை என்பவற்றை எழுதினார்கள் என்று எண்ணி விடாதீர்கள். அவர்கள் பூலான்தேவிக்கு நேர்ந்த பாலியல் வன்முறையை வருணித்து எழுதினார்கள். கொள்ளைக்காரர்களிடம் சிக்கிய போது அவரிடம் பரிவு காட்டிய ஒருவனிடம் அவரிற்கு வந்த காதலை காமசூத்திரமாக எழுதினார்கள்.

தமிழ்ப்பண்பாடு அழிகிறது, தமிழரின் மானம் போகிறது என்று சொல்லிக் கொண்டு தமிழ்ப் பெண்களை இழிவுபடுத்தி இந்த இணையத்தளங்கள் கதைகள் எழுதுகின்றன. இப்போது புகைப்படத்தை

**உதாரணமாக, மேற்குநாடுகளில் பெண்கள் சார்ந்த அனைத்து உரிமைகளையும் மறுப்பவர்களாகவும், பெண்ணடிமைத்தனத்தை ஆதரிப்பவர்களாகவும் இவர்கள் இருப்பதைக் காணலாம். கருக்கலைப்பு, ஆடை அணிகலன் எதிர்ப்பு, சமப்பாலுறவு எதிர்ப்பு, பெண்களுக்கு அரசியல் மற்றும் தொழில்சார் நிறுவனங்களில் அதிகார மறுப்பு என இவர்களின் எதிர்ப்புகளை அடுக்கிக் கொண்டே போகலாம் என மணலைமைந்தன் முகப்புத்தகத்தில் தூ யவாதிகள் என்று சொல்லிக்கொண்டு பிற்போக்கு பழமைவாதம் பேசுபவர்களைக் குறிப்பிடுவது இந்த ஊடகப்பொறுக்கிகளிற்கும் அப்படியே பொருந்துகிறது.**

போட்டு ஒரு பெண்ணின் வாழ்வை அழிக்கிறார்கள். இங்கு கவனிக்க வேண்டிய விடயம் என்னவெனில் இந்தப் பரிசுத்தமானவர்களைப் பொறுத்தவரை தமிழ்ப்பண்பாடு பெண்களால் தான் அழிக்கப்படுகிறது. பெண்களால் தான் தமிழரின் மானம் போகிறது. எந்தவொரு தார்மீக உணர்வோ, ஊடக தர்மமோ அற்ற இந்த மஞ்சள் பத்திரிகை பொறுக்கிகள் தமிழரின் வாழ்வைப் பற்றிக் கவலைப்படுகிறார்களாம்.

«இலங்கை வரலாற்றில் இப்படி ஒரு ஜனாதிபதியா» என்று மைத்திரி சிறிசேனா யாழ்ப்பாணம் போய் இடம்பெயர்ந்த மக்களை சந்தித்தது குறித்து புல்லரிச்சுப் போய் புராணம் பாடும் இந்த புல்லுருவிக் கூட்டம் தான் தமிழ் மக்களைப் பற்றிக் கவலைப்படுகுதாம். தமிழ்மக்களைக் கொன்ற, தமிழரின் வாழ்வை அழித்த, தமிழ்மக்களை சிறை வைத்திருக்கும் இலங்கை அரசை போற்றிப் பாடும் இந்தப் பொறுக்கிகளிற்கு தமிழரின் வாழ்வைப் பற்றி பேச என்ன அருகதை இருக்கிறது?

எல்லாவற்றையும் வியாபாரமாக, எல்லாவற்றையும் பணமாக பார்க்கும் வலதுசாரிகளின், முதலாளித்துவவாதிகளின் ஊடகங்கள் இப்படித்தான் இருக்கும். குமுதம், ஆனந்தவிகடன் போன்று இந்திய நாட்டுப்பற்று, இந்து மதப்பெருமை பேசிக் கொண்டு பெண்களின் படங்களை போட்டு பணம் பார்க்கும். தமிழ்த்தேசியம் பேசிக் கொண்டு, ஈழதேசம் பற்றிப் பேசிக் கொண்டு கிசுகிசு.கொம் நடத்தி சினிமா பெண்களின் ஆடை குறைந்த படங்களை (ா ழவ ி ாழவழள) என்ற தலைப்பில் தந்து காசு சேர்க்கும்.

«வித்தியா என்ற புதுமலர் கசங்கிய போது»....என்ற தலைப்பில் «பூசைக்கு போகும் முன்னே வித்தியா என்ற புதுமலர் சில காமுகர்களின் காம இச்சை ஆசைக்கு பலியாகி, புங்கை மண்ணில் கசக்கி வீசப்பட்ட பொழுது» என்று தமிழ்த் தேசியத்திற்காக அவதாரம் எடுத்த (துஸ்ரீ நெறள) என்னும் இணையத்தளம் வித்தியா கொலை குறித்து 25.12.15 வெளியிட்ட செய்தி இது. புதுமலர், பூசைக்கு போகும் முன்னே என்று அருவருப்பான பாலியல் அர்த்தம் தரும் சொற்களை வைத்து பாலியல் வன்முறை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட வித்தியாவின் கொலையை வியாபாரம் செய்கிறார்கள். ஒரு பெண்ணின் அவலத்தை எழுதும் போது இவ்வளவு வக்கிரமாக எழுதுபவர்கள் தம்மை தமிழ்த்தேசியத்தின் குரல் என்று சொல்வதைப் போல் கேவலம் எதுவுமில்லை.

பெண்களை இப்படி பொதுவெளியில் கேவலப்படுத்துவதற்கான அடிப்படையை எவை கொடுக்கின்றன? கணவனை இழந்த பெண்கள் மொட்டை அடிக்க வேண்டும், வெள்ளைச்சேலை உடுக்க வேண்டும், சதி என்று சொல்லி சிதையில் எரிக்க வேண்டும் என்ற இந்து மதம் கொடுக்கிறது. கர்ப்பகாலத்தில் பெண் இறக்கும் நிலை வந்தாலும் கருச்சிதைவு செய்யக்கூடாது பெண் மதகுருவாகவே வர முடியாது என்ற கிறிஸ்தவ மதம் கொடுக்கிறது. கண்ணைத் தவிர வேறே ஒன்றும் வெளியே தெரிய உடை உடுத்தக்கூடாது, பள்ளிவாசலில் ஆணிற்கு பக்கத்திலும் வரக்கூடாது என்ற இஸ்லாமிய மதம் கொடுக்கிறது. இந்த பெண்ணடிமைத்தனங்களை வளர்க்கும் மதங்களை விடுத்து பெண்ணும், ஆணும் சரிநிகர் சமானம் என்னும் புதிய பண்பாட்டை கட்டி எழுப்ப முற்போக்கு சிந்தனை கொண்ட பெண்களும், ஆண்களும் சேர்ந்து உழைத்திடுவோம். பொருளாதாரம், பண்பாடு, குடும்பம் எங்கும் சமத்துவம் பேணும் பொதுவுடமைத் தத்துவத்தின் புரட்சிக்கொடியை தூக்கிப் பிடிப்போம்.




முன்னிலை சோசலிசக் கட்சி, போலிச் சுதந்திர தினத்தை எதிர்த்து உண்மையான மக்களுக்கான சுதந்திரம் கோரி, 04.02.2016 அன்று எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை கொழும்பில் நடாத்தியது.



படிப்பகம்

# 'சீபா' இல்லை 'இட்கா' யானைகள் போதாதென்று மாடுகள்




கடுமையான எதிர்ப்பிற்கும் குழப்பத்திற்கும் காரணமான சீபா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட மாட்டாதெனவும், அதற்குப் பதிலாக இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையில் 'இட்கா' என சுருக்கமாக அழைக்கப்படும் இந்திய - இலங்கை பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுமெனவும் அரசாங்கம் உத்தியோகரீதியில் அறிவித்திருக்கின்றது. 2015 செப்டம்பர் 14ம் திகதியிலிருந்து 16ம் திகதி வரை பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் இந்திய பயணத்தின்போது இது சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாயின. இந்தப் பயணத்தின்போது சீபா ஒப்பந்தத்தை வேறு பெயரில் ஒப்பமிட இந்தியாவுடன் இணங்கியிருப்பதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. இலங்கைக்கு வந்த பின்னர் செப்டம்பர் 23ம் திகதி நாடாளுமன்றத்தில் விஷேட அறிக்கையொன்றை வெளியிட்ட பிரதமர் ரணில் விக்ரமசிங்க இந்திய - இலங்கை பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம் குறித்து பகிரங்கமாக ஏற்றுக் கொண்டார். பின்னர் டிசம்பர் 21ம் திகதி சில உயர்மட்ட அதிகாரிகள் அதற்கான அடிப்படை கொள்கைகளை தயாரிப்பதற்காக இந்தியாவிற்கு சென்றனர். அதன்படி 2016 பெப்ரவரியில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுமெனவும், இவ்வருடம் மே அல்லது ஜுன் மாதமளவில் முதற்கட்ட கொள்கைகள் தயாரிக்கப்பட்டுவிடுமெனவும் தெரிய வருகின்றது. உண்மையிலேயே இந்த 'இட்கா' ஒப்பந்தம் என்பது என்ன, அதனை எல்லோரும் எதிர்ப்பதற்கு என்ன காரணம் என்பது குறித்து பேசுவதே இந்த ஆக்கத்தின் நோக்கம்.

பொதுவாக இரு நாடுகளுக்கிடையில் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படும்போது பொருட்கள் விற்பனை சார்ந்த உடன்பாடுகள். அவற்றில் உள்ளடக்கப்படும். ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு அனுப்பும் பொருட்களுக்கு சுங்கவரி நிவாரணம் வழங்கல் போன்ற நிபந்தனைகள் உள்ளடக்கப்படுகின்றன. உதாரணத்திற்கு 1998ல் இந்தியாவுடன் செய்து கொள்ளப்பட்ட சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை எடுத்துக் கொள்ள முடியும். அந்த ஒப்பந்தத்தின்படி இந்தியாவுக்கு அனுப்பும் பொருட்களுக்கும், இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அனுப்பப்படும் பொருட்களுக்கும் சுங்க வரியிலிருந்து விலக்களிக்கப்படும். அந்த ஒப்பந்தத்தினால் இலங்கைக்குத்தான் நட்டம். ஒப்பந்தத்திற்கு முன்பு இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு அனுப்பும் பொருட்களின் மூலம் கிடைக்கும் வருமானத்திற்கும், இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கொண்டுவரும் பொருட்களிலிருந்து கிடைக்கும் வருமானத்திற்குமிடையில் இடைவெளி அல்லது வர்த்தக நிலுவை 460 மில்லியன் டொலராக இருந்தது. அது ஒப்பந்தத்திற்குப் பின்பு 4675 மில்லியன் டொலர் வரை பத்து மடங்காக அதிகரித்தது. அதாவது, இலங்கையிலிருந்து இந்தியா இழுத்துக் கொள்ளும் அளவு பத்து மடங்காக அதிகரித்தது. தவிரவும் இந்தியாவிலிருந்து குறைந்த சுங்கவரியின் கீழ் இலாபம் தரும் பொருட்கள் இறக்குமதியினால் இலங்கையின் ஊதுபத்திகள், மெழுகுவர்த்திகள் போன்ற கைத்தொழில்கள் சரிந்தன. இந்த நிலையில்தான் இலங்கை அரசாங்கம் இந்தியாவுடன் இட்கா ஒப்பந்தத்தில் ஒப்பமிடவிருக்கின்றது.

இட்கா ஒப்பந்தம் சாதாரண வர்த்தக ஒப்பந்தத்தைவிட மாறுபட்டது. அதற்குள் பொருட்கள் வியாபாரம் மாத்திரமல்ல, உழைப்பாளர்களும் பரிமாற்றம் செய்யப்படுகின்றார்கள். உதாரணமாக இலங்கையிலிருந்து செல்பவர்களுக்கு நீண்டகால விசா பெற்றுக்கொடுக்க இந்தியா கட்டுப்பட்டிருப்பதுடன், இந்தியர்களுக்கு வேலைவாய்ப்பு பெற்றுக் கொடுப்பதற்கு நீண்டகால விசா வழங்க இலங்கை அரசாங்கம் ஒப்பந்தத்தின் மூலம் கட்டுப்பட்டுள்ளது. இந்தியா எமது வேலைவாய்ப்பு சந்தையை ஆக்கிரமித்துவிடும், எமது வேலை பறிபோய்விடும் என எதிர்ப்புகள் தலைதூக்குவதும், ஆர்ப்பாட்டங்கள் நடப்பதும் அதனால்தான். இந்த இட்கா ஒப்பந்தத்தில் இது சம்பந்தமான அடங்கியுள்ள ஒதுக்கீடுகள் குறித்து ஆராய்ந்து பார்ப்போம்.

2015 செப்டம்பர் 23ம் திகதி நாடாளுமன்றத்தில் பிரதமர் வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு கூறினார்.

'இலங்கை மற்றும் இந்தியாவிற்கிடையிலான பொருளாதார ஒத்துழைப்பை மேலும் விருத்தி செய்ய எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாகவும், இந்திய - இலங்கை பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடுவது சம்பந்தமாகவும் நாங்கள் பேசினோம். 2016 மே அல்லது ஜுன் மாதமளவில் அந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவது சம்பந்தமாக இரு நாடுகளும் அத்தியாவசியமான நடவடிக்கைகள் எடுப்பதற்கு இந்தியப் பிரதமர் இணங்கினார். இந்தியாவிற்கும், இலங்கைக்குமிடையில் நிலவும் பொருளாதார ஒத்துழைப்பு எமது இரு நாடுகளுக்கும் புதிதல்ல என்பதை நாம் அறிவோம். 2500 வருடங்களாக இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையில் வர்த்தக நடவடிக்கைகள் நடக்காதிருந்தால் புத்த பெருமானின் தலைமுடியை எடுத்துக் கொண்டு தபஸ்ஸு பல்லுக என்ற வியாபாரிகளின் வருகை இலங்கையில நடந்திருக்காது.''

இவ்விடத்தில் ரணில் வேண்டுமென்றே விடயங்களை குழப்புகின்றார். தபஸ்ஸு பல்லுக செய்த வியாபார நடவடிக்கைகளுடன் இட்கா ஒப்பந்தத்தை சமப்படுத்த முடியாது. இந்த ஒப்பந்தத்தின்படி 16 முதல்தர துறைகளைச் சேர்ந்த பலவிதமான தொழில்நிபுணர்களும், தொழிலாளர்களும் இலங்கைக்கு வரவிருக்கின்றார்கள். அவர்களில் மருத்துவ சேவை, வழக்குரைஞர் சேவை பொறியியல் சேவை, பற்சிகிச்சை சேவை, மிருகவைத்திய சேவை, மருத்துவ சிகிச்சை சேவை, தாதியர் சேவை, மகப்பேற்று மருத்துவச்சி சேவை, மசாஜ் கிளினிக் சேவை, கணனி சார்ந்த தொழில்கள், கணக்காளர் மற்றும் கணக்கெழுதுதல், கட்டடக்கலை நிபுணர் சேவை, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி சேவை, சொத்து விற்பனை, கூலி மற்றும் குத்தகை சேவை, முகாமைத்துவ ஆலோசனை சேவை, தொழில்நுட்ப சோதனை மற்றும் பகுப்பாய்வு சேவை, இயந்திராதிகள் பழுதுபார்த்தல் சேவை, மீன்பிடி நடவடிக்கைகள், பொதி செய்யும் பிரிவு, விழா ஏற்பாட்டு சேவை, பிரச்சாரச் சேவை, தொலைக்காட்சி மற்றும் வானொலிச் சேவை, கட்டிட ஒப்பந்தங்கள்



மற்றும் அவை சார்ந்த சேவைகள், தரகுப்பண (கொமிஸன்) பிரதிநிதித்துவ சேவை, மொத்த வியாபார சேவை, கல்விச் சேவைகள் (தனியார் பாடசாலை, பல்கலைக் கழகங்கள் மற்றும் ஆசிரியர்கள் உட்பட) சுற்றாடல் நடவடிக்கைகள் சம்பந்தமான சேவைகள் (சுத்திகரிப்பு தொழிலாளர்கள் உட்பட), சுகாதார மற்றும் சமூக சேவை (அழகியல் மற்றும் முடிதிருத்தும் நிலையங்கள், சுற்றுலா மற்றும் சுற்றுலா போக்குவரத்து சேவை, (பீச் போய், சேவை உட்பட), பொழுதுபோக்கு – கலாச்சார மற்றும் விளையாட்டுச் சேவை ( முச்சக்கர வண்டி, பேருந்து, இரயில் ஊழியர்கள், கப்பல், படகு உட்பட) போன்ற பல்வேறு தொழில்துறைகள் உள்ளன. பொதுவாக இந்தியாவின் சம்பள மட்டம் இலங்கை சம்பள மட்டத்தை விடவும் குறைவாக உள்ளதனால், இந்தியாவிலுள்ள வேலையில்லாத பாரிய படையணி குறைந்த ஊதியத்தில் வேலைசெய்ய விரும்புவதினால், ஆகக்குறைந்த சம்பளத்திற்கு இலங்கையில் வேலை செய்வார்கள். அதனால் இலங்கையர்கள் வேலை இழக்க நேரிடும் அல்லது குறைந்த சம்பளத்திற்கு வேலை செய்ய இணங்க வேண்டும். இந்த ஒப்பந்தம் தபஸ்ஸ பால்லுகவிக்கு சமப்படுத்த முடியாது.

இதற்குத் தோன்றிய எதிர்ப்பின் காரணமாக அவற்றில் பல அம்சங்கள் நீக்கப்பட்டு தகவல் தொழில்நுட்பமும், கப்பல் கட்டும் பொறியியல் துறையும் மாத்திரம் இதில் அடங்கியுள்ளதாக அரசாங்கத்திற்கு கூற நேர்ந்தது. சமீபத்தில் நடந்த ஊடக சந்திப்பின்போது மலிக் சமரவிக்ரம இதனை உறுதி செய்தார். ஆகவே, தகவல் தொழில்நுட்பம் மற்றும் பொறியியல் சேவைகளை சார்ந்தவர்கள் இப்போது களத்தில் குதித்துள்ளனர். இதற்கிடையில் விமல் வீரவன்சவின் வழிகாட்டலுடன் இந்திய எதிர்ப்பு திட்டமொன்று (உண்மையை சொல்வதாயிருந்தால், இந்தியர்களுக்கு எதிராக இனவாதத்தை தூண்டும்) உருவாக்கப்பட்டுள்ளது. இது குறித்து எமது நிலைப்பாட்டை உறுதி செய்து கொள்வதற்கு நடக்கும் விடயங்களைப் பற்றிய விளக்கமொன்றை பெற்றுக் கொள்ள வேண்டும். இந்த இட்கா போன்ற ஒப்பந்தங்களின் ஊடாக அரசாங்கம் எதிர்பார்ப்பது என்ன? இந்த அரசாங்கத்தினதும், எதிர்க்கட்சிகளினதும் பிரதான பொருளாதார தந்திரோபாயம் வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவர்வதுதான். தற்போது இந்தியாவிற்கும், பங்களாதேசத்திற்கும், நேபாளத்திற்கும் செல்லும் முதலீட்டாளர்களை இலங்கையின் பக்கம் கவர்ந்திழுக்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி(JVP) ஆகிய கட்சிகளின் கொள்கை விளக்கங்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. தமிழ் தேசிய கூட்டணியின் கொள்கை விளக்கத்தில் அதைப்பற்றி விஷேடமாக குறிப்பிடப்படாவிட்டாலும், அவர்கள் அந்த பொருளாதாரக் கொள்கையை ஏற்றுக்கொள்வதாக கூறினார்கள். ஆகவே, இந்த அனைவரினதும் பொருளாதார உபாயமானது இந்தியாவிற்கும், பங்களாதேசத்திற்கும், தாய்லாந்திற்கும் செல்லும் முதலீட்டாளர்களை இலங்கையின் பக்கம் கவர்ந்து கொள்வதுதான்.

அது குறித்து பேசுவதற்கு முன்பு இந்த முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வராமல் அந்த நாடுகளுக்கு செல்லும் காரணத்தை விளங்கிக் கொள்ள வேண்டும். இந்த நாடுகளின் தொழிற்சட்டங்கள் மிக பலவீனமாக உள்ளன. ஆதலால், கடுமையான நிபந்தனைகளை விதித்து ஒரு நாளில் அதிக நேரம் தொழிலாளர்களின் உழைப்பை சுரண்ட முடியும். தொழிலாளர்கள் விடயத்தில் யாருக்கும் பொறுப்பு கிடையாது. இன்னொரு விடயம் என்னவென்றால், அந்த நாடுகளில் உழைப்பின் விலை இலங்கையை விட குறைவு. சம்பளம் மிகமிகக் குறைந்த மட்டத்திலேயே உள்ளது. தொழிலாளர்களின் உழைப்பை குறைந்த கூலிக்கு சுரண்டவே முதலீட்டாளர்கள் அந்த நாடுகளுக்குச் செல்கின்றார்கள். அந்த நாடுகளில் சூழல் சட்டங்கள் பலவீனமாக உள்ளதினால் தமது இலாபத்திற்காக சூழலுக்கு முடிந்தளவு பாதிப்பை உண்டாக்கவும் முதலீட்டாளர்களுக்கு தடையில்லை. இனி, இந்த வியாபாரிகளை இலங்கை கவர்ந்து கொள்ள வேண்டுமாயின் தொழில் சட்டங்களை திருத்தி, தொழில் உரிமைகளை ஒழித்துக் கட்டவேண்டும். உழைப்பின் கூலியை குறைக்க வேண்டும். சூழல் சட்டங்களை வெட்ட வேண்டும். இது குறித்து இடதுசாரிகள் தேர்தல் காலங்களில் கூறினார்கள். குறிப்பாக முன்னிலை சோஷலிஸக் கட்சி போன்ற கட்சிகள் இது குறித்து எச்சரித்தனர். இப்போது அந்த தந்திரோபாயம்தான் செயற்படுத்தப்படுகின்றது. தொழில் உரிமைகளை பறிப்பதற்கு 17 சட்டங்களை திருத்த அரசாங்கம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துவிட்டது. இட்கா போன்ற ஒப்பந்தங்களினூடு உழைப்பின் கூலியை குறைக்கும் திட்டம் நடைமுறைக்கு வருகின்றது. எனவே, இந்த ஒப்பந்தம் தவறுதலாகவோ, அரசாங்கம் அறியாமலோ அல்லது இந்திய வற்புறுத்தலுக்கு அடிபணிந்தோ செய்யப்படும் ஒப்பந்தமல்ல. இதுதான் அரசாங்கத்தின் தந்திரோபாயம். பொய் கூச்சல் போட்டாலும் எதிர்க்கட்சியும் இணங்கியுள்ள தந்திரோபாயம்.

இந்தியாவிற்கு எதிராக இனவாத கோஷங்களை தூக்கிப்பிடித்து உண்மையான பிரச்சினையை மூடி மறைக்கவே முயற்சிக்கப்படுகின்றது. மக்கள் எதிர்ப்பு அரசாங்க தந்திரோபாயத்தின் பக்கம் திரும்புவதை தடுத்து அந்த எதிர்ப்பு இந்திய தொழிலாளரின் பக்கம் திருப்பிவிடப்படுகின்றது. ஒப்பந்தத்தையும் பிற்போக்கு திட்டத்தையும் ஒருசேர தோற்கடிக்க வேண்டும். தமது நாட்டில் வேலையில்லாப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதிலிருந்து விலகி, தனது பொருளாதார அரசியல் ஆதிக்கத்தை பயன்படுத்தி அந்தப் பிரச்சினையை இலங்கையின் தலையில் சுமத்துவதே இந்திய அரசின் நோக்கம். அதேபோன்று, இதனூடு இந்திய மூலதனத்தை வியாபிக்கச் செய்வதும் நோக்கமாக உள்ளது. எதிர்ப்பை காட்ட வேண்டியது இந்திய ஆளும் வர்க்கத்தின் மீதும், அந்த தந்திரோபயத்தை பின்பற்றும் இலங்கை ஆளும் வர்க்கத்தின் மீதேயல்லாது, இந்திய ஒடுக்கப்பட்டவர்களின் மீதல்ல. ஆகவே, இந்த தந்திரோபாயத்தை பற்றிய புரிதலுடனேயே இட்கா ஒப்பந்தம் குறித்து பேச வேண்டும்.



படிப்பகம்

மார்க்சியம் – உ௫

# செல்வத்துக்கு அடிமையா மனிதன்!?

மனித வாழ்வாக எதைக் கருதுகின்றோம்? இது அனைவரும் எம்மை நாம் கேட்க வேண்டிய கேள்வியாகும்.

பணம் தான் மனித வாழ்வா? பணத்துக்கு நாம் அடிமையா? பணம் வைத்திருப்பவனுக்கு மனித குலம் அடிமையானதா?

மனித வாழ்க்கையும், சிந்தனையும் பணத்தைத் தாண்டி இருக்க முடியாதா? அனைவருக்கும் சமமான அல்லது தேவையான செல்வத்தை தனிவுடமை வழங்கிவிடுமா?

வறுமையிலும் வாழ்க்கையைச் சுற்றிய அவலங்களுடனும் உழைத்து வாழ்கின்ற மக்கள் வாழ்கின்ற இந்த தனிவுடமை அமைப்பு அவர்களுக்கு ஒரு தீர்வாக இருக்க முடியுமா? ஆள்வோரை (தேர்தல் மூலம்) மாற்றுவதன் மூலம் மனித குலம் தன் பிரச்சனைக்கு தீர்வு காண முடியுமா?

சிலர் செல்வத்தைக் குவிக்கும் தனிவுடமையிலான இன்றைய சமூக அமைப்பு, அரச அமைப்பு முறையைக் கடந்து, பொதுவுடமையைக் கொண்ட அனைத்து மனிதர்களின் மனித தேவைகளை பூர்த்தி செய்யக் கூடிய சமூகமாக மனிதன் வாழ முடியாதா?

ஆளுவோரை மாற்றுவது பிரச்சனைக்குத் தீர்வா?

தனிவுடமையில், அரசு என்பது செல்வத்தைக் குவிப்பதற்கு உதவுகின்ற ஒரு உறுப்பு. சிலர் செல்வத்தைக் குவிக்க பலர் செல்வத்தை இழத்தலே தனிவுடமையின் விதியாக இருக்க, அரசுகள் என்பது அதற்கு உதவுவதற்கே. இந்த அடிப்படையில் அரசுகள் முதல் ஊடகங்கள் வரையான அனைத்தும், தனிவுடமையை பாதுகாக்கும் அமைப்பாக இயங்குகின்றது.

முன்னர் தேச எல்லைகள் கொண்ட தனித்தனியான அரசுகள், இன்று தனிச்சொத்துடமையை குவித்தலுக்கு தடையாக இருந்தால், அதை தகர்ப்பதற்காக உலகமயமாதல் முன்வைக்கப்பட்டது. உலகமயமாதல் என்பது தேசிய பொருளாதாரத்திற்கு பதில், தேசம் கடந்த நவதாராளமயமாதலை முன்வைத்தது.

அரசுகளின் துணையுடன் தனிச்சொத்துடமையைக் குவிக்கும் வரலாற்றுப் பின்னணியில் உருவான நவதாராளமயம் மூலம், உலகைச் சிலர் கொள்ளை அடிக்க முடிந்தது. உதாரணமாக உலகின் 99 சதவீதமான மக்களிலும் பார்க்க, ஒரு சதவீதமான செல்வந்தர்களிடம் அதிக செல்வத்தை உலகமயமாதல் குவியவைத்துள்ளது. அதாவது கிட்டத்தட்ட 7 கோடியே 30 இலட்சம் பேர், உலகின் ஏனைய மக்களின் ஒட்டுமொத்த செல்வத்திலும் பார்க்க அதிக செல்வத்துக்கு சொந்தக்காரர்களாக மாறிவிட்டனர். அதேநேரம் உலக சனத்தொகையின் அரைவாசியான 3.6 பில்லியன் (360 கோடி) அளவான வறிய மக்களின் ஒட்டுமொத்த செல்வத்திலும் பார்க்க, முதல் 62 பணக்காரர்களின் செல்வம் அதிகமாக மாறிவிட்டது.

இப்படி செல்வத்தை குவிப்பவர்கள் தங்கள் செல்வத்தில் ஏழரை ட்ரில்லியன் டாலர் (ஏழு லட்சத்து ஐம்பதாயிரம் கோடி டாலர்) மதிப்பிலான செல்வத்தை, தங்களின் தாய்நாடுகளுக்கு வெளியே, வரிசெலுத்துவதிலிருந்து தப்பிக்கக்கூடிய இடங்களில் குவித்துள்ளனர்.

இந்த பின்னணியில் உலகில் உள்ள அரசுகளும், அரசியல் கட்சிகளும் செல்வத்தைக் குவிக்கும் இந்த தனியார் நவதாராள பொருளாதாரக் கொள்கையே நாட்டின் வளர்ச்சியாகவும், நாட்டின் அபிவிருத்தியாகவும், மக்களின் வேலைவாய்ப்பாகவும் முன்வைக்கின்றனர். செல்வத்தைப் பெருக்கும் தனியார் உற்பத்திக் கொள்கை தான், மக்களின் வாழ்வாதாரத்தை தரவல்லது என்ற கூறும் அரசுகள், இதற்கு வெளியில் தனியார் அல்லாத உற்பத்திகளை அழித்துவிடுகின்றனர். பெரிய மூலதனம் சிறிய மூலதனத்தை விழுங்கிவிடுமாறு பொருளாதார கொள்கைகளையும், சட்டங்களையும் இயற்றுகின்றனர்.



முழு மக்களுக்கு எதிராக செல்வத்தை குவிப்பதற்காகவே உலக சட்டங்களும், பொருளாதாரக் கொள்கைகளும் முன்வைக்கப்படுவதுடன் உலகளவில் தொடர்ந்து அவை மாற்றி அமைக்கப்படுகின்றது.

மனித வாழ்வுடன் தொடர்புடைய அனைத்தையும் சந்தைப் பொருளாகவும், மனித உறவுகளை நுகர்வுப் பண்பாடாகவும் மாற்றி விடுகின்றது. இதனால் வாழ்வுக்கான மனிதப் போராட்டம் தவிர்க்க முடியாததாகி விடுகின்றது.

## போராட்டம் வாழ்வுக்கு முரணானதா?

தனிவுடமையிலான செல்வத்தைக் குவிக்கும் வர்க்கம், மனிதர்களிடையே சுயநலத்தைத் தூண்டிவிடுவதன் மூலம் மனிதனை நலமடித்து விடுகின்றது. போராட்டத்தை வாழ்விற்கு இடைஞ்சலாகவும், தனிப்பட்ட முன்னேற்றத்துக்கு போராட்டம் தடையாகவும் சிந்திக்கும் வண்ணம், அரசுகளும், ஊடகங்களும் கருத்துக்களையும் வாழ்க்கை முறைகளையும் உருவாக்குகின்றது. தனித்தனியாக செல்வத்தைக் குவிப்பதற்கு முயல்வதன் மூலம், செல்வம் குவிப்பதை கேள்விக்குள்ளாக்காதே என்பதே தனிவுடமைப் பிரச்சாரத்தின் பொதுச் சாரம்.

இதை மீறிய சமூக சாரம் இதற்கு முரண்படுவதால், எங்கும் போராட்டமே வாழ்க்கை முறையாகின்றது. இன்று இலங்கையில் மாணவர்கள் தங்கள் இலவசக் கல்வி உரிமைக்காகப் போராடுகின்றனர். பல்கலைக்கழகப் பட்டம் பெற்றவர்கள் வேலை கேட்டுப் போராடுகின்றனர். அரசியல் கைதிகள் தங்கள் விடுதலையைக் கோரி போராடுகின்றனர். காணாமல் போனவர்களின் உறவினர்கள், தங்கள் உறவுகள் எங்கே என்று கேட்டுப் போராடுகின்றனர். மீனவர்கள கடல் சார்ந்த தங்கள் வாழ்வுரிமையைப் பாதுகாக்கப் போராடுகின்றனர். நவதாராளமயத்திடமும், இலங்கை அரசு இயந்திரத்திடமும் தங்கள் நிலத்தை இழந்த மக்கள், நிலத்தைக் கோரிப் போராடுகின்றனர். நிலமும் நீரும் நஞ்சானதை எதிர்த்தும், இலவச மருத்துவத்தைக் கோரியும் போராடுகின்றனர். பிறப்புரிமையிலான பிரஜாவுரிமையை மறுக்கின்ற அரசின் சூழ்ச்சிக்கு எதிராக போராடுகின்றனர். விவசாயிகள் தங்கள் பொருளுக்குரிய விலையைக் கோரிப் போராடுகின்றனர். மொழிகளுக்கு சமவுரிமையை முன்னிறுத்தியும், அது சாந்த ஒடுக்குமுறைகளையும் எதிர்த்துப் போராடுகின்றனர். சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராக, சாதி ஒழிப்பு போராட்டங்கள் நடத்துகின்றனர். மலையக மக்கள் தங்கள் அடிப்படைக் கூலியைக் கோரியும், தங்கள் வீடு மற்றும் நிலவுரிமைக்காகப் போராடுகின்றனர். பழமைவாத அடிப்படைவாத மத-நிலப்பிரபுத்துவ பண்பாட்டு-கலாச்சாரத் திணிப்புக்கு எதிராகப் போராடுகின்றனர். தொடரும் ஆணாதிக்க பாலியல் வன்முறைகளுக்கு எதிரான போராட்டங்கள், அரச படைகளின் வன்முறைகளுக்கு எதிரான போராட்டங்கள்... எங்கும் எதிலும் வாழ்க்கையானது இன்று போராட்டமாகி இருக்கின்றது.

இப்படி நாளாந்தம் போராட்டமே மனித வாழ்க்கை முறையாக, நாட்டுக்கு நாடு வேறுபட்ட பல ஆயிரம் போராட்டங்கள் உலகெங்கும் நடக்கின்றது. செல்வத்தை குவிப்பவன் நலன் சார்ந்து மனிதகுலம் மீது திணிக்கப்பட்ட, திணிக்கப்படுகின்ற வாழ்க்கை முறைக்கு எதிராக, வாழ்வதற்கான போராட்டமாக வாழ்க்கையாக இருக்கின்றது.

உலக அரசுகளோ மக்களை ஒடுக்கும் கருவிகள் (ஊடக பயங்கரவாதம், சட்டங்கள் முதல் அரச பயங்கரவாதம் வரை) மூலம், சொத்துடமை வர்க்கத்தை பாதுகாத்து நிற்கின்றது. செல்வத்தைக் குவிக்கும் இந்த எதார்த்தம் என்பது மூலதனத்தினது பொது நடைமுறையாக இருக்கின்றது.

உழைப்பை மட்டும் நம்பி வாழும் மக்கள் கூட்டம், போராட்டத்தை தங்கள் வாழ்க்கையாகக் கொண்ட ஒரு பொது சமூகப் பின்னணியில் வாழ்கின்றனர். இருந்தபோதும் எல்லா மனிதர்களும் தாம் உணரும் எல்லா விடையங்கள் மீதும் கருத்துக்களைக் கொண்டிருந்த போதும் எதிர்வினையாற்றுவதில்லை. அதாவது தங்கள் கருத்துகளைக் கொண்டு நடைமுறையில் உண்மையாக வாழ்வதில்லை. பொய்யாக போலியாக கருத்தும், நடைமுறையும் இன்றி வாழ முற்படுகின்றனர்.

இந்த வகையில் செல்வத்தை குவிப்பவன் தனக்கு எதிராக மக்கள் போராடாத வண்ணம், தனது ஊடக பயங்கரவாதம் மூலம் சமூகத் தன்மையை நலமடித்து விடுகின்றான். தனித்தனியாக வாழ்வதே சுதந்திரம் என்னும் சுயநலத்தை, மனித பண்பாடாக மூளைச்சலவை செய்துவிடுகின்றான்.

இந்தப் பின்புலத்தில் தன் சுயநலத்தை மட்டும் முன்னிறுத்துகின்ற சாதாரண மனிதர்கள் முதல் தீவிரமான மாற்று அரசியல் - இலக்கியம் பேசுகின்றவர்கள் வரை, உண்மையான சமூக நடைமுறையை முன்னிறுத்தி அதற்காக வாழ்வதில்லை. எதன் மீதும் கருத்தற்ற செயலற்ற பண்ணைக்குரிய நுகர்வு மந்தையாக தன்னைப் குறுக்கி விடுவதா மனித இயல்பு?.

## மனிதன் ஒரு மந்தையா?

இறைச்சிக்காக, பாலுக்காக, விவசாய தேவைக்காக வளர்க்கப்படும் மந்தைகளின் (பண்ணை மிருகங்கள்) இயற்கையான அதன் சுதந்திரம் மறுக்கப்பட்டு, செயற்கையான சூழலில் வளர்க்கப்படுகின்றது. இங்கு லாபத்துக்காக திணிப்பதை மட்டும் வரைமுறையின்றி நுகர வேண்டும். லாபத்தை மட்டும் குறிக்கோளாகக் கொண்ட இந்த வளர்ப்பு முறையானது, சட்டங்களும் வரம்புகளும் கொண்ட ஒரு எல்லைக்குள், உயிர்கள் தங்கள் வாழ்க்கையை முடித்துக் கொள்ளுமாறு சந்தை தீர்மானிக்கின்றது. இதில் இருந்து மனிதன் விதிவிலக்காக வாழ்கின்றானா?

பணத்தைக் குவிப்பவன் எதைக் கொண்டு பணத்தை திரட்டுகின்றனோ, அதை நுகர்கின்ற, அதை ரசிக்கின்ற, அதை நியாயப்படுத்தி வாழ்கின்ற மனிதன் செல்வத்திற்கு அடிமையாக வாழ்கின்ற மந்தையாக மனிதனை செல்வம் முடமாக்கி விடுகின்றது.

பண்ணை விலங்கு மற்றும் தாவரத்தின் உயிர் வாழ்தலில் உள்ள இயற்கைத் தன்மை குறுக்கப்பட்டுள்ள பொதுச் சூழலுக்கு எதிராக, இன்று பழையபடி இயற்கை விவசாயம், இயற்கை கால்நடை வளர்ப்பு முறைமை வளர்ச்சி பெறுகின்றது. ஆனால் துரதிஸ்டம் இவை கூட சந்தைப் பொருளாகி வருகின்றது.

இரு வேறுபட்ட உற்பத்திக் கொள்கை செல்வத்தைக் குவிக்கும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு எதிரும் புதிருமாக இயங்குவதுடன், இந்த உற்பத்திக் கொள்கை மனித நுகர்வாகப்பட்டு இருக்கின்றது. அதாவது சந்தையை மையப்படுத்தியதே மனித நுகர்வாகி அதுவே

தொடர்ச்சி 8ஆம் பக்கம்

# மருந்து வியாபாரத்தில் புதிய விளையாட்டு அமைச்சர் ராஜித இது குறித்து என்ன சொல்கின்றார்?



ஔடத கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் லால் ஜயகொடி மற்றும் பிரதித் தலைவர் கிரிசாந்த வீரசூரிய ஆகியோர் அரசியல் வற்புறுத்தல் காரணமாக பதவி விலகியதை 'ஜனரல' என்ற சிங்களப் பத்திரிகை இரு வாரங்களுக்கு முன்னர் பிரதான தலைப்புச் செய்தியாக வெளியிட்டிருந்தது. சில மருந்துகளுக்கு அங்கீகாரம் வழங்குமாறு சுகாதார அமைச்சர் அதிகாரசபைக்கு உத்தரவிட்டதாகவும், அதனை மறுத்த அதிகாரசபை முக்கியஸ்தர்களை பதவி விலகுமாறு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன வற்புறுத்தியதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஜனரல பத்திரிகையின் கடந்தவார ஆசிரியர் தலையங்கமும் இந்த விடயத்திற்கு முக்கியத்துவமளித்திருந்தது. சுகாதார அமைச்சருக்கு அப்படி கோபம் பொத்துக் கொண்டு வந்தது ஏன் என்பது குறித்தே நாங்கள் அலசிப் பார்க்கின்றோம். இது விடயத்தில் அதிகாரசபை நிபுணர்கள் நடவடிக்கை எடுத்ததற்கான காரணத்தை ஆராய்ந்தால் இதனை அறிந்துகொள்ள முடியும்.

பொதுவாக இலங்கையில் இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப்படும் ஒவ்வொரு மருந்தும் பதிவு செய்யப்படல் வேண்டும். தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபை அமைக்கப்பட்டதன் பின்னர் பதிவுசெய்யும் அதிகாரம் அதிகாரசபையின் கைக்கு சென்றது. சில மருந்துவகைகளை பதிவுசெய்ய அதிகாரசபை மறுத்தமையால் இந்த கருத்து முரண்பாடு உருவானது. இதனை புரிந்துகொள்வதற்கு மருந்து வியாபாரம் குறித்தும் அறிந்து கொள்ள வேண்டும். ஒரே மருந்தை பல்வேறு பெயர்களில் மருந்துக் கம்பனிகள் விற்பனை செய்கின்றன. அவை பல்வேறு விலைகளில் விற்கப்படுகின்றன. இந்த விலைநிர்ணயத்தின் ஊடாகத்தான் சுரண்டல் நடக்கின்றது. உதாரணத்திற்கு, கொலஸ்டரோலுக்கு பயன்படுத்தப்படும் அவஸ்டசின் என்ற மருந்திற்கு பல்வேறு வியாபாரப் பெயர்கள் 172 உண்டு. எந்தப் பெயராக இருந்தாலும் மருந்து ஒன்றுதான். காஸ்ட்ரைடீஸுக்கு பயன்படுத்தும் ஓம்பிரசோல் 70 வகை உண்டு. நீரிழிவு நோய்கு பயன்படுத்தும் வீக்லசைட் என்ற மருந்து 70 பெயர்களில் விற்கப்படுகின்றது. பாலியல் பலவீனத்திற்கு பயன்படுத்தப்படும் சில்டெனிபல் இந்த வியாரத்திற்கு நல்ல உதாரணமாகும். அதைப்போன்று 70 வகையான மருந்துகள் இலங்கை சந்தையில் உள்ளன. பாலியல் பலவீனம் என்பது பொதுவாக காணப்படாததினால் அந்தளவு மருந்து வகைகள் அவசியமில்லை. ஆனால், பல வகைகள் உள்ளமையால் நோய் இல்லாதவர்களுக்கும் அந்த மருந்தை பருக்கும் கலாச்சாரத்தினை உருவாக்குகின்றார்கள். சில்டெனபில் பாலியல் சக்தியை அதிகரிக்கும் மருந்து என பொய் சொல்லி, எந்த நோயும் இல்லாதவர்களுக்கு இலங்கை பாமஸ ிகள் (மருந்து விற்பனை நிலையங்கள்) தொகையாக விற்பனை செய்கின்றன.

மருந்துகளின் விலையில் பல்வேறு வித்தியாசங்களும் காணப்படுகின்றன. உதாரணமாக, டைக்லொபெனெக் சோடியம் என்ற வலி நிவாரண மாத்திரை ஒரு ரூபாவிலிருந்து 40 ரூபா வரையில் விற்கப்படுகின்றது. மருந்துகளின் பெயர்களில் இறக்குமதி செய்ய 1 ரூபா 90 சதம் செலவாகும் அமொக்ஸ ிலீன் என்ற மருந்து, அமொக்ஸில் என்ற வியாபாரப் பெயரில் 16 ரூபாவிற்கு விற்கப்படுகின்றது. 30 ரூபாவிற்கும் அமொக்ஸின் வகைகள் விற்கப்படுகின்றன. மெடபோம் மாத்திரை 90 சதத்திலிருந்து 23 ரூபா வரை பல்வேறு விலைகளில் விற்கப்படுகின்றது. கம்பனிகள் நோயாளர்களை எப்படி சுரண்டுகிறார்கள் என்பது இதிலிருந்து தெரிகின்றது. இந்த பிரச்சினையை தவிர்ப்பதற்காக 1970களில் பேராசிரியர் சேனக பிபிலே மருந்து கொள்கையொன்றை அறிமுகப்படுத்தினார். அதில் மருந்துகளுக்கான விலைக்கட்டுப்பாடு, ஒரே மருந்து பல வியாபாரப் பெயர்களில் விற்கப்படுவதை கட்டுப்படுத்தல், அத்தியாவசிய மருந்துகளின் பட்டியலொன்றை தயாரித்தல், மருந்துகளை பரிந்துரை செய்யும்போது வியாபாரப் பெயர்களில் அல்லாது மருந்தின் பெயரையே குறிப்பிடுதல் போன்ற முற்போக்கான விடயங்கள் அதில் அடங்கியுள்ளன. ஆனால் ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை சட்டமூலத்தில் அந்த ஒதுக்கீடுகள் உள்ளடக்கப்படவில்லை. மருந்துகளின் தரத்தை மதிப்பிட்டு அவற்றை பதிவு செய்யும் அதிகாரம் மட்டுமே அதிகாரசபைக்கு கொடுக்கப்பட்டுள்ளது. என்றாலும், இந்த வரம்புகள் அடங்கிய ஔடத கட்டுப்பாட்டு அதிகாரசபையின் நிபுணர்கள் அத்தியாவசியமற்ற மருந்துகள் பதியப்படுவதை தடுக்கவும், விலை கூடிய வியாபாரப் பெயர்களை பதிவுசெய்வதை தடுக்கவும் முயன்றார்கள். இதனால்தான் அரசியல்வாதிகளுடன் மோத வேண்டிய நிலை ஏற்பட்டது.

சில உதாரணங்களை பார்ப்போம். கருத்து முரண்பாடு ஏற்பட்டதற்கு பிரதான காரணி புற்றுநோய்க்கு பயன்படுத்தப்படும் நிமோடுசுமப் (Nimotuzumab) என்ற மருந்து சம்பந்தமானதாகும். இந்த ஊசி மருந்து ஒரு குப்பியின் விலை 65,000 ரூபா. ஒரு முறை பயன்படுத்த 4 குப்பிகள் தேவைப்படுகின்றன. ஆறு முறை அந்த தடுப்பூசியை போட வேண்டும். அதற்கு 12 லட்சம் ரூபா செலவாகின்றது. அவ்வளவு பணம் அறவிட்டாலும் இந்த மருந்து இன்றும் பரீட்சார்த்த மட்டத்திலேயே (Clinical Trial) உள்ளதுதான் கவனிக்க வேண்டிய விடயம். இது மிருகங்களை கொண்டே பரீட்சிக்கப்பட்டது. மனிதர்களிடம் பரீட்சித்துப் பார்க்கப்படவில்லை. பொதுவாக க்ளினிகல் பரீட்சார்த்தத்தில் பல மட்டங்கள உள்ளன. முதலில் மிருகங்களுக்கு செலுத்தி பரீட்சிக்கப்படும். பின்பு சுகதேகியான ஒருவருக்கும் பின்னர் சுகதேசியான பலருக்கும் செலுத்தப்பட்டு பரீட்சிக்கப்படும். அதன் பின்பு நோயாளர்களுக்கு பரீட்சித்துப் பார்க்கும் போது குறித்த மருந்து கம்பனி அந்த நோயாளிக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பதோடு மட்டுமல்ல ஒரு தொகை பணமும் கொடுக்க வேண்டும். இந்த மருந்து உலகின் எந்தவொரு நாட்டிலும் அங்கீகரிக்கப்படவில்லை. ஏனைய நாடுகளில் நோயாளர்களுக்கு அந்த மருந்தை செலுத்தி பரீட்சித்துப் பார்ப்பதற்கு மருந்துக் கம்பனி பணம் கொடுக்கின்றது. இலங்கையை பொறுத்தவரை நோயாளர்கள் மருந்து வியாபாரிகளின் ஆய்வுகூட எலிகளாக

**சில உதாரணங்களை பார்ப்போம். கருத்து முரண்பாடு ஏற்பட்டதற்கு பிரதான காரணி புற்றுநோய்க்கு பயன்படுத்தப்படும் நிமோடுசுமப் (Nimotuzumab) என்ற மருந்து சம்பந்தமானதாகும். இந்த ஊசி மருந்து ஒரு குப்பியின் விலை 65,000 ரூபா. ஒரு முறை பயன்படுத்த 4 குப்பிகள் தேவைப்படுகின்றன. ஆறு முறை அந்த தடுப்பூசியை போட வேண்டும். அதற்கு 12 லட்சம் ரூபா செலவாகின்றது. அவ்வளவு பணம் அறவிட்டாலும் இந்த மருந்து இன்றும் பரீட்சார்த்த மட்டத்திலேயே டுஊடiniஉயட வுசயைட௃ உள்ளதுதான் கவனிக்க வேண்டிய விடயம். இது மிருகங்களை கொண்டே பரீட்சிக்கப்பட்டது. மனிதர்களிடம் பரீட்சித்துப் பார்க்கப்படவில்லை. பொதுவாக க்ளினிகல் பரீட்சார்த்தத்தில் பல மட்டங்கள உள்ளன. முதலில் மிருகங்களுக்கு செலுத்தி பரீட்சிக்கப்படும். பின்பு சுகதேகியான ஒருவருக்கும் பின்னர் சுகதேசியான பலருக்கும் செலுத்தப்பட்டு பரீட்சிக்கப்படும்.**



இருப்பதுடன், 15 லட்சம் பணமும் செலுத்துகின்றார்கள். ஆகவேதான், அதிகார சபையின் நிபுணர்கள் 'நிமொடுசுமப்' மருந்து பதிவு செய்வதை நிராகரித்தார்கள்.

இன்னொரு உதாரணம் புற்றுநோய்க்காக பயன்படுத்தும் சிமாவக்ஸ் (Simavax) இந்த மருந்தும் ஒரு குப்பியின் விலை 65,000 ரூபா. ஒரு நோயாளிக்கு 15 குப்பிகள் தேவைப்படுகின்றன. சுமார் 10 லட்சம் ரூபா செலவிட்ட பின்னர் நோயாளியின் ஆயுள் ஒரு மாதத்தினால் மாத்திரமே நீடிக்கும். சீமாவக்ஸ் பதிவுசெய்வதையும் அதிகாரசபை நிராகரித்தது. மேலும் பிரச்சினைகள் உருவாகின. நாட்டில் மலேரியா ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை நாம் அறிவோம். ஆனால் ஒரு வழங்குநர் மலேரியாவிற்கு பயன்படுத்தப்படும் 'ப்ரிமாக்வீன்' (Primaquine) மருந்தில் 60,000 இறக்குமதி செய்ய அனுமதி கோரி கடிதமெழுதியிருந்தார். அந்த மருந்து இலங்கைக்கு அவசியமற்றது என்பதனாலும், தற்செயலாக ஒரு மலேரியா நோயாளி இனங்காணப்படும் பட்சத்தில் குறிப்பிட்டளவு ஒரு தொகை மருந்து அரச ஆஸ்பத்திரிகளில் இருப்பதனாலும் அதிகாரசபையின் முக்கியஸ்தர்கள் அனுமதி கடிதம் கொடுக்க மறுத்துவிட்டனர். இன்னொரு விடயத்தையும் இங்கு கவனிக்க வேண்டும். 'லொரசிபம்' (Lorazepam) என்ற மருந்தை கொண்டுவர பதிவுசெய்யப்படாத ஒரு வழங்குநர் சுகாதார அமைச்சிடம் டெண்டர் சமர்ப்பித்திருந்தார். டெண்டரின் மதிப்பு 33 மில்லியன் (330 இலட்சம்) அந்த டெண்டரை பெற்றுக் கொள்வதற்காக மருந்துகள் இறக்குமதிக்கு அங்கீகார கடிதமொன்றை அதிகாரசபையிடம் கேட்டிருந்தார். அதிகாரசபை அங்கீகார கடிதம் வழங்காததினால் பதிவுசெய்யப்பட்ட இன்னொரு வழங்குநருக்கு டெண்டர் வழங்க வேண்டிய நிலை சுகாதார அமைச்சிற்கு ஏற்பட்டது. அதற்காக செலவளிக்கப்பட்ட தொகை 0.25 மில்லியன், அதாவது 2,50,000 ரூபா. நடக்கவிருந்த மோசடி நினைத்துக் கூட பார்க்க முடியாததாகும். அந்த மருந்துக்கு நிர்ணயித்த விலையை விட 132 மடங்கு அதிக பணம் மக்கள் பணத்திலிருந்து செலுத்த நேர்ந்திருக்கும்.

பேராசிரியர் லால் ஜயகொடி, விரிவுரையாளர் கிரிசாந்த வீரசூரிய உள்ளிட்ட நிபுணர்கள் இந்த மோசடியை தடுத்ததன் பின்பு அவர்களை பாராட்டுவதற்குப் பதிலாக அவர்களை கேட்டு விலகும்படி அச்சுறுத்திய பின்புதான் உண்மையான பிரச்சினை வெளிச்சத்திற்கு வந்தது. இந்தப் பிரச்சினையில் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன நோயாளர்களின் பக்கத்தை எடுப்பாரா, அல்லது மருந்து வியாபாரிகளின் பக்கத்தை எடுப்பாரா? குறிப்பாக ஊழல் மோசடி குறித்து சத்தம் போட்டு அதிகாரத்திற்கு வந்து, நல்லாட்சியை பற்றி அடிக்கடி கூறும் இந்த அரசாங்கம் இந்த மோசடி சம்பந்தமாக எதுவும் கூறாதது ஏன்? திருட்டை தடுக்கும் நிபுணர்களாக தம்மை அறிமுகப்படுத்தும் மக்கள் விடுதலை முன்னணி போன்ற கட்சிகள் வாய் திறக்காமலிருப்பது ஏன்? இந்த விடுகதைக்கு விடை தேடும் பொறுப்பை வாசகர்களாகிய உங்களிடம் ஒப்படைக்கின்றோம். அதோடு மனிதர்களை கொல்லும் ஆயுத வியாபாரம் மற்றும் மனிதர்களை வாழ வைக்கும் மருந்து வியாபாரம் ஆகியன உலகில் அதிக இலாபம் பெறும் வியாபாரங்கள் என்பதை நினைவுபடுத்துகின்றோம். இலாபத்தை மாத்திரமே நோக்காகக் கொண்ட கம்பனிகள் மருந்துகளை பயன்படுத்துவது மனிதர்களை வாழ வைப்பதற்கல்ல. இந்த முறையின் கீழ் மருந்து கம்பனிகள் நோயாளர்களை கொல்வதுடன், அவர்களது குடும்ப உறவுகளையும் கொல்லாமல் கொல்கின்றார்கள்.



படிப்பகம்

# உறங்கிக் கிடப்போமா, அன்றேல் உரிமைக்காய் எழுவோமா?




தேயிலை உற்பத்தியானது இந்த நாட்டின் தேசிய வருமானத்தை ஈட்டித் தருவதில் இன்றியமையாத பங்கு வகிக்கின்றது என்பதை எவராலும் மறக்கவோ மறுக்கவோ முடியாது. இந்த தேயிலை உற்பத்தியின் பின்னணியில் இருப்பது யார்? அவர்களின் வாழ்க்கை நிலை எவ்வாறு இருக்கிறது அவர்களின் சமூக, அரசியல் நிலவரங்கள் எவ்வாறு கட்டமைக்கப்பட்டுள்ளது. என்பது பற்றி ஆட்சியாளர்களோ அல்லது தோட்டக் கம்பனிகளோ கண்டுகொள்ளாது இருப்பது வேதனைக்குரிய விடயமாகும்.

75 வருடங்களுக்கும் அதிகமான தொழிற்சங்க வரலாற்றையும் பாரம்பரியத்தையும் கொண்ட தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம், காணி, வீடு, குடிநீர், சுகாதாரம், கல்வியென சகலவிதமான உரிமைகளும் புறக்கப்பட்ட ஒரு சூழலிலேயே அவர்கள் தமது வாழ்க்கையின் நாட்களை நகர்த்தி வருகின்றனர்.

மேலதிக நேரம் எனும் போர்வையில் வேலை நாட்களிலும் விடுமுறை நாட்களிலும் மிகக் குறைந்த கூலியைக் கொடுத்து தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்றி இலாபம் ஈட்டும் தந்திரோபாயத்தை தோட்ட நிர்வாகங்கள் தொடர்ச்சியாக செய்து வருகின்றன. மறுபுறத்தில் இவர்களின் சந்தா பணத்தை பெற்றுக் கொண்டு வயிறு வளர்க்கும் தொழிற்சங்கங்களும் காலத்துக்குக் காலம் இவர்களுக்கு துரோகம் இழைத்தும் இவர்களைக் காட்டிக் கொடுத்தும் சுக, போகங்களை அனுபவித்து வருகின்றன.

தொழிற்சங்கம் என்பது அடிப்படையில் தொழிலாளர்களின் நலன்களை வென்றெடுக்கவும் அவர்களின் தொழில்சார் உரிமைகளை வென்றெடுக்கவுமே தொடங்கப்பட்டது. என்ற போதிலும் தோட்டத் தொழிலாளர்களைப் பொருத்தவரையில் ஆரம்ப காலந்தொட்டு இன்றுவரை தொழிற்சங்கங்கத் தலைமைகளின் குறுகிய சுய விருப்பு வெறுப்புகளுக்காகவும் தமது அரசியல் இலாபங்களுக்காகவும் வெறும் பகடைக் காய்களாய் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகின்றன நிலைமைகளே நிலவுகின்றமை யாவரும் அறிந்த ஒன்றாகவே இருக்கின்றது.

தோட்டத் தொழிலாளர்களை மையமாகக் கொண்டு இயங்குகின்ற சகல தொழிற்சங்கங்கத் தலைமைகளும் தேர்தல் காலங்களில் மட்டுமே தொழிலாளர் உரிமைகள் பற்றி பேசுவதோடு வாக்கெடுப்பு முடிந்து பதவிகளில் அமரந்த மறுகணமே ஆளும் வர்க்கத்திற்கு ஆதரவாக செயற்படத் தொடங்கிவிடுகின்ற துர்ப்பாக்கிய நிலைமைகளே தொடர்ந்தும் அரங்கேறி வருகின்றன.

இன்றைய நிலையில் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு பிரச்சினை ஒருவருடத்தை கடந்திருக்கின்ற போதிலும அது இழுபறி நிலையில் இருப்பதற்கு தொழிற்சங்கங்களின் அசமந்த போக்கே காரணமாகும். ஒவ்வொரு ஈராண்டு முடிவிலும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்கான ஒப்பந்தமானது கைச்சாத்திடப்பட வேண்டுமென்ற சட்டங்கள் அமுலில் இருக்கின்ற போதிலும் அவை உரிய காலத்தில் அமுலுக்கு கொண்டுவரப்படாத நடைமுறைகளே பின்பற்றப்பட்டு வருகின்றது.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்கான ஒப்பந்தம் கடந்த வருடம் மார்ச் மாதத்துடன் முடிவடைந்த போதிலும் அது ஒரு வருடத்தை கடந்திருக்கின்ற நிலையிலும் முடிவு காணப்படாமல் இருக்கின்றது. இது தொழிற்சங்கங்களின் வஞ்சகமான செயற்பாடுகளையும் வங்குரோத்து நிலைமையையுமே பறைசாற்றி நிற்கிறது. தற்போதைய நிலைமைகளை நோக்கும்போது இந்நிலைமை வருடமொன்றை கடந்தாலுங்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

அரசாங்க ஊழியர்கள் உள்ளிட்ட ஏனைய துறைகளின் ஊழியர்களுக்கு கால மாற்றத்திற்கு ஏற்பவும் அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவுகளுக்கு ஏற்பவும் சம்பள உயர்வானது ஏதோ ஒரு வகையில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற போதிலும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விடயம் மாத்திரம் கவனிப்பாரற்றே கிடக்கிறது.

பதவிகளில் அமர்ந்த அமைச்சர்களும் சரி பாராளுமன்ற உறுப்பினர்களும் சரி தம்மையே நம்பி இருக்கின்ற இந்த அப்பாவி மக்களின் அடிப்படை உரிமைகளைக்கூட பெற்றுக் கொடுக்க வக்கனை இல்லாதவர்களாகவே இருப்பதோடு இன்றுவரை தமது இயலாமைகளை மறைத்தும் தாம் தான் அந்த மக்களின் விடுதலையை, சுதந்திரத்தைப் பெற்றுத் தரும் இரட்சகர்கள் என்று தம்பட்டமடித்தும் காலத்தை கடத்தி வருகின்றனர்.

உரிமைகளை பெற்றுத் தராத தொழிற்சங்கங்களில் தொடர்ந்தும் உறுப்பினர்களாக இருப்பதா அல்லது அவற்றிலிருந்து வெளியேறி சுயாதீனமாக தமது உரிமைகளுக்காய் போராடுவதா என்ற முக்கியமான தீர்மானத்தை தோட்டத் தொழிலாளர்கள் எடுப்பதற்கு இதுவே மிகவும் பொருத்தமான காலமாகும்.

அத்தோடு தோட்டப்புறங்களில் இருக்கின்ற படித்த, புத்திஜீவி மற்றும் சமூக மாற்றம் குறித்து சிந்தித்த வண்ணம் இருக்கின்ற இளைஞர்கள் யுவதிகள் வளர்ந்தவர்கள் யாவரும் இணைந்து இந்த அநீதிக்கு எதிராக தங்களின் இயலுமையின் எல்லைவரை சென்று இயக்கமுற்று ஏமாற்றுக்கார தொழிற்சங்கத் தலைமைகளைத் தோற்கடித்து தமது சமூகத்திற்கு விடிவைத் தேடித்தரும் வரலாற்றுப் பணியில் பங்கெடுக்க வேண்டும். இது தத்தமது அரசியல் நிலைப்பாட்டைத் தாண்டிய மலையக மக்களின்பால் உண்மையாகவே அக்கறை கொண்ட எண்ணப்பாட்டுடன் முன்னெடுக்கப்பட வேண்டும். அவ்வாறானதொரு நிலைமைகள் தோற்றுவிக்கப்படாத பட்சத்தில் தொடர்ந்தும் மேற்குறிப்பிட்ட அரசியல், தொழிற்சங்க தலைமைகளிடம் எமது சமூகம் ஏமாந்து போவதை எவராலும் தடுத்து நிறுத்திவிட முடியாது.

செல்வத்துக்கு அடிமையா... 6ம் பக்க தொடர்ச்சிகள்

வாழ்க்கை முறையாகி விடுகின்றது.

சந்தைக்குரிய பண்ணை மந்தைகள் எந்த நிலையில் இன்று உயிர் வாழ்கின்றதோ, அதே அடிப்படையில் மனிதனும், தான் நுகர்வும் வாழ்க்கை முறைக்குள், மனிதன் மந்தையாக்கப்பட்டு இருக்கின்றான்.

கூட்டாக சுதந்திரமாக இயங்கும் மனிதனின் சமூகத் தன்மைக்குப் பதில், தன்னை முதன்மைப்படுத்தும் தனிமனித வாழ்க்கை முறைக்குள் சிந்திக்குமாறும், வாழுமாறும் மனிதத் தன்மையை சந்தைக் கொள்கை முன்வைக்கின்றது.

சந்தையை மைய்யப்படுத்தாத எதையும் மனிதன் சிந்திக்கவும், செயற்படுத்தவும் முடியாத வண்ணம், மனிதனின் சமூக தன்மை இல்லாதாக்கப்படுகின்றது. பண்ணைக்குரிய மந்தை வாழ்வாக, மனித நுகர்வும் வாழ்வும் குறுக்கப்படுகின்றது.

இந்த பின்னணியில் எம்மைச் சுற்றிய நிகழ்வுகளில் தலையிடாத வாழ்க்கைமுறை, மனித வாழ்வாகி இருக்கின்றது. தேர்தலில் வாக்குப் போடுவதுடன் மனிதன் ஒதுங்கிக் கொள்வதை ஜனநாயகமாக்கி இருக்கின்றது.

இதை மீறி வாழ்வைச் சுற்றிய பொது அதிருப்தியை செயலற்ற கருத்தாக பதிவு செய்வதை ஜனநாயகமாக்கி இருக்கின்றது. அதாவது இந்த தனிவுடமைச் சமூக அமைப்புக்கு முரணான சமூகவுடமை அமைப்பைக் கோரும் நடைமுறைச் செயலில் இருந்தான விமர்சனமுறையை இல்லாதாக்கி வருகின்றது.

இன்றைய சமூக வலைத்தளங்கள் தொடங்கி இலக்கியங்கள் வரை செயலற்ற விமர்சனமாக முன்வைப்பதும், அதைக் கொண்டு சமூகத்தை அணுகுவதன் மூலம் சமூகத்தை முடமாக்குவதை தங்கள் எதிர்ப்பாக கட்டமைக்கப்படுகின்றது.

இந்த சமூகப் பின்னணியில் சமூகக் கேடானவைகள் வாழ்க்கை முறையாக இதற்குள் வாழ்வதே சட்டம் - ஒழுங்கு - நீதியாக முன்னிறுத்தப்படுகின்றது. இதற்குள் சமூக மாற்ற கருத்தை கலகமாக முன்வைக்கப்படுகின்றது.

இயற்கைக்கு வெளியில் மனிதன் எப்படி வாழ வேண்டும் என்பதைத் தீர்மானித்த மனிதன் , அதற்காக கொண்டு இருந்த சமூக அடிப்படையைக் கொண்டு இருப்பதில்லை. சமூக நலமற்ற தன்னலத் தீர்மானத்துக்கு ஏற்ப வாழ்வது மனித வாழ்க்கை முறையாக அதை தன் தன்னலமாக கொண்டு வாழ்வதுமாக வாழ்க்கை குறுகியிருக்கின்றது. தன்னலத்துக்கு உதவாத சமூகம் அவசியமற்றது என்று கருதுமளவுக்கு சக மனிதனை எதிராக மாற்றி இருக்கின்றான்.

குடும்பம் என்றளவில் இருந்த சமூகத் தன்மை கூட தகர்ந்து தன்னலத்துக்கு உதவும் வரை தான் குடும்பம். உதாரணமாக தாய்மை சார்ந்த சமூக உறுப்பாக நீடித்த ஆணாதிக்க குடும்பம் தன்னலம் கொண்டதாக குறுகிவிட்டது. பூட்டன்-பூட்டிகள், பாட்டன்-பாட்டிகள், தாய்-தந்தை, குழந்தைகள், வாழ்க்கைத் துணை, உறவுகள்.. என அனைத்தும் பரஸ்பரம் தன்னலத்தை முன்னிறுத்தி நிற்கின்றது. லாபமற்ற குடும்ப உறுப்புகள் அவசியமற்ற ஒன்றாக கழித்துவிடப்படுகின்றது. இதனால் வாழ்க்கை மகிழ்ச்சியாக மாறிவிடுவதில்லை, மாறாக தனிமையும் - இனம்புரியாத வெற்றிடமுமாக வாழ்க்கை வெற்றிடமாக மாறி நிற்கின்றது.

தனித்து வாழ முடியாத முரண்பாடுகளுடையவனாக மனிதன் தனிவுடமையும் சுயநலமும் கொண்ட பொருளாதாரம் சார்ந்து ஏற்படுத்துகின்ற வாழ்க்கை முறையானது தனிமையை உருவாக்கி விடுகின்றது. மகிழ்ச்சியற்ற, நிம்மதியற்ற வாழ்க்கையை, வாழ்வாக்கி விடுகின்றது.

தனித்து வாழமுடியாத சுய முரண்பாடாக, தனிவுடமைக்குள் புதிய வாழ்க்கையை தேடி அலைய வைக்கின்றது. உதாரணமாக நவீன தொழில்நுட்பங்களான தொலைபேசி முதல் சமூக வலைத்தளம் வரை, குறிக்கோள் இன்றி எதையோ தேடி அலைவது வாழ்க்கையாகின்றது. சக மனிதர்களிடம் கூட்டான இணக்கமாக புது வாழ்வைத் தேடிய போதும் தனிவுடமை முரண்பாடாக குறுக்கே நிற்கின்றது.

மனிதன் தன் பிரச்சனைகளுக்கு சமூகமாக இணைந்து விடை கண்டுவிடக் கூடாது என்பதற்காகவே உழைத்து வாழும் மக்களுக்கு எதிராக செல்வத்தைக் குவித்துவைத்துள்ள வர்க்கங்களும் அதற்கு சேவை செய்யும் அரசுகளும் தொடர்ந்து தனிதனித்தனியாக செயற்படுமாறு சுயநலத்தை தூண்டி விடுகின்றன. பணம் தான் எல்லாம், அந்தப் பணத்துக்கு அடிமையாக இருத்தல் மூலம் விடை காணமுடியும் என்கின்றது.

இந்த பின்னணியில் உண்மையான நேர்மையான மனித வாழ்க்கை என்பது போராட்டமாகவும் , இது வாழ்வில் தவிர்க்க முடியாததாக இருப்பதுடன், இது தான் உயிர்வாழ்தலின் இயற்கை விதியும் கூட. உலகத்திலும் இலங்கையிலும் அங்குமிங்குமாக நடக்கும் போராட்டங்கள் இந்த உண்மையின் பாலானது. இதுதான் மனித வரலாறும் கூட.



படிப்பகம்

# அரசியல் வியாபாரம் ஒழியட்டும் மக்கள் நல அரசியல் ஓங்கட்டும்



ஆங்கிலேயர் ஆட்சியிலும் சரி, பின்னர் வந்த சுதந்திர ஆட்சியிலும் சரி இலங்கை அரசியல் என்பது பணம்-பலம்-பொருள் கொண்ட மேற்தட்டு வர்க்க மேலாதிக்கவாத மேட்டுக்குடிகளின் போட்டியும் பங்குச் சண்டையுமாகும். அதன் ஆரம்பம் 1915ல் சிங்கள-முஸ்லீம் கலவரமாகத் தொடங்கி பின்னர் 1949ல் மலையகத் தமிழர்களை கொத்தடிமைகளாக்கித் தொடர்ந்து 1956லிருந்து சிங்கள-தமிழ் இனக் கலவரமாக வளர்ச்சி பெற்று இறுதியில் 2009ல் ஒரு பேரழிவை நடாத்தி முடித்து விட்டு மறுபடி ஆரம்பத்திலிருந்து பழைய பாணியில் நடைபோடத் தொடங்கியுள்ளது.

மக்களுக்கானது என்ற கொள்கைப் பிரகடனங்களுடன் புறப்பட்ட கட்சிகளின் தலைமைகள் அவர்களைப் பின்னணியில் நின்று ஆட்டுவிக்கும் ஆதிக்க சக்திகளின் விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்றபடி கோரிக்கைகளை முன்வைத்து அதற்காக மக்களை ஆவேசமூட்டி மோதவைத்தபடி தங்களது நலன்களை இன்றுவரை பாதுகாத்தபடியே வருகின்றனர்.

இன்றும் அதே கட்சிகள் உள்ளன. மக்களின் வாக்குகளை வென்றெடுக்கின்றன. பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுகிறார்கள். பாராளுமன்றம் அமைக்கிறார்கள். மக்கள் சிறைபிடிக்கப்பட்டாலென்ன, கொல்லப்பட்டாலென்ன, காணாமல் போனாலென்ன, பசி பட்டினி தாங்கமுடியாமல் தற்கொலை செய்தாலென்ன, வாழமுடியாமல் உயிரைப் பணயம் வைத்து நாட்டை விட்டு ஓடினாலென்ன, குடிக்க நீர் இன்றி தவித்தாலென்ன, தொழிலின்றி வறுமையில் வாடினாலென்ன, இருக்க இடமின்றி அலைந்தாலென்ன கட்சித் தலைமைகளுக்குக் கவலையே இல்லை. ஏனெனில் இவைகள்தான் இந்த அரசியலின் மூலதனங்கள். இன்றுவரை இலங்கை மக்களுக்கு இந்த அரசியல் வழங்கியது அடிமைத்தன வாழ்வே.

மக்களைப் பிளவுபடுத்தி வைத்தபடியே அவர்களைச் சாட்டித் தங்களையும் தங்களைச் சார்ந்த கூட்டத்தினரையும் சுகபோக வாழ்வுடன் பாதுகாப்போடு இட்டுச் செல்கின்றனர். இவற்றை மக்களாகிய நாம் அறிந்தும் அறியாதது போல் தொடர்ந்து இவர்கள் பின்னால் செல்வதற்கான காரணம் யாது?

நாம் ஒரு முரண்பாட்டு மனப்போக்கை கொண்ட சமூகமாகும். கற்றது ஒன்று. சொல்வது இன்னொன்று. கடைப்பிடிப்பது வேறொன்று. கல்வி-காசு-காணி-கல்வீடு என்பதுதான் எமது சிந்தனையாகும். இதற்காக அடுத்தவர் நலன்களை மறுத்து எமக்கு ஏற்றவாறு நீதி நியாயங்களை கற்பித்துக் கொள்கிறோம். இதன் அடிப்படையிலேயே நாம் இன்று வரை எமது அரசியல் தெரிவுகளை செய்து வருகிறோம்.

கடந்த காலங்களில் எமது அரசியல் தெரிவுகளால் எமது கிராமங்களிலோ அல்லது மாவட்டங்களிலோ அல்லது மாகாணங்களிலோ அல்லது நாட்டினிலோ ஏற்படுத்தப்பட்ட பொருளாதார அபிவிருத்திகள் யாவை எனப் பார்த்தால் எதுவுமேயில்லை. இன்று மக்களுக்கான அடிப்படை அத்தியாவசிய சேவைகள் யாவும் ஊழல் நிறைந்தவையாக ஆக்கப்பட்டுள்ளன. இன, மத, சாதி, பால் வேறுபாடுகளைக் கூர்மைப்படுத்தி அதன் அடிப்படையில் வாக்குகளைப் பெற்று நாட்டின் அரசியல் அதிகாரங்களில் பங்குபற்றுவோர் நாளும் பொழுதும் மக்களை மனநோயாளிகளாக மாற்றி வருகின்றனர். சிந்திக்க இடம் கொடுக்காத வண்ணம் தொடர்ந்து மக்களை நெருக்கடிகளின் மத்தியில் வாழும் வகையில் செயற்படுகின்றனர்.

இன்று நாட்டு மக்களின் நிலைமை என்ன? கொலை-களவு-காடைத்தனம்-கஞ்சா கடத்தல்-பாலியல் பலாத்காரம்-போதைவஸ்துப் பாவனை-இயற்கை வள அழிப்பு-சுற்றாடல்



மாசுபடுத்தல் என்பன நாளாந்த செய்திகளாகின்றன. இந்தச் செயற்பாடுகள் பற்றி மக்களாகிய நாமும் கவலைப்படவில்லை. மக்களது பிரதிநிதிகளும் கரிசனை கொள்ளவில்லை.

அன்று முதல் இன்று வரை நாட்டை இன்றைய நிலைமைக்கு ஆளாக்கிய சக்திகள்தான் இன்றும் நாட்டை ஆளும் அதிகாரக் கதிரைகளில் உட்கார்ந்துள்ளன. இவர்கள் இதுவரை செய்ய மறுத்தவற்றை இனிமேலும் செய்யப் போவதுமில்லை.

தென்னிலங்கை அரசியல் வியாபாரம் சிங்கள இளைஞர்களை சமூகநீதி கேட்டு ஆயுதம் தூக்க வைத்துக் கொன்றளித்தது. வட-கிழக்கு அரசியல் வியாபாரம் தமிழ் வாலிபர்களை தன்னாட்சி வேண்டி ஆயுதம் ஏந்தச் செய்து அழிய வைத்தது. நாட்டில் வன்முறை தோன்றுவதற்கு வழியமைத்துக் கொடுத்தவர்கள்தான் இன்றும் ஆட்சி புரிகின்றனர். அவர்களின் அரசியல்தான் இன்றும் தொடர்கின்றது.

நாட்டு மக்களுக்கு நல்லது செய்தவர்ளைத் துரோகிகள் என்கிறோம். நாட்டு மக்களின் நலன்களைச் சுருட்டுபவர்களை தலைவர்கள் ஆக்குகிறோம். இந்நிலை மாறாத வரை நாம் தொடர்ந்தும் பிச்சை எடுத்தபடி-அடுத்தவர்களைக் கெஞ்சியபடி-அடுத்து என்ன நடக்குமோ என அஞ்சியபடி வாழவேண்டியதுதான்.

இந்நிலையை மாற்ற வேண்டுமானால் நாம் சிந்திக்க வேண்டும். 68 வருட அரசியல் எங்களை எங்கே கொண்டு வந்து விட்டுள்ளது? உசுப்பி விட்டவர்கள்-உருவேற்றியவர்கள் சுகமாக வாழ உசுப்பப்பட்டவர்களும்-உருவேற்றப்பட்டவர்களும் அழிக்கப்பட்டது எப்படி? விடுதலைப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டதா? அல்லது விற்கப்பட்டதா? நேற்றைய இனவாத அரசுக்கும் இன்றைய இணக்க அரசியலுக்கும் உள்ள சம்பந்தம் என்ன? யாருக்காக புதிய அரசியல் சாசனம்? மக்களுக்கானதா? அல்லது ஆளும் வர்க்க அரசியல்வாதிகளுக்கானதா? மக்களுக்கானது என்றால் அதற்குரிய நடவடிக்கைகள் எங்கே? குற்றமிழைத்தவர்களும் குற்றம் இடம்பெறக் காரணமானவர்களும் ஒன்றிணைந்து கூட்டாக ஆட்சி நடாத்தும் அரசாங்கத்தின் கீழ் புதிய அரசியல் சாசனம் நிறைவேற நாட்டு மக்கள் ஒன்றுபட வேண்டிய தேவை-அவசியம் உண்டா? இல்லையா?

இவைகளுக்கான பதில்களில்தான் எமது ஒளிமயமான எதிர்காலம் தங்கியுள்ளது. மக்களை நேசிப்போம். மக்களோடு மக்களாக வாழ்ந்து அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளுவோம். மக்களே எமது வழிகாட்டிகள். அவர்கள் காட்டும் பாதையில் முன்னேறிச் செல்வதே மக்கள் நல அரசியல்.



## நூறு நாட்களாக தொடரும் போராட்டம்...

தோழர் குமார் குணரத்தினத்தின் அரசியல் உரிமைகளை பாதுகாக்குமாறு வலியுறுத்தி கொழும்பு கோட்டை இரயில் நிலையத்தின் முன்பாக நடைபெற்று வரும் தொடர் ஆர்ப்பாட்டம் நூறு நாட்களையும் தாண்டி விட்டது. நூறு நாட்கள் பூர்த்தியடைந்த கடந்த பெப்ரவரி 21ம் திகதியன்று இலங்கை இடதுசாரிய கட்சிகள், கலைஞர்கள், மனித உரிமை வழக்குரைஞர்கள் ஆகியோருடன் சர்வதேச தோழமையும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்ததை காண முடிந்தது.

எதிர்காலத்திற்காகப் போராடுவோம்!

படிப்பகம்

# பொறுத்தது போதும் பொங்கியெழு, மாவை சேனாதிராசா!!







அண்ணே, உங்களை ஒருமையில் «பொங்கியெழு மாவை சேனாதிராசா» என்று கூப்பிட்டு விட்டேன் என்று நினைக்க வேண்டாம். எங்களை ஊரில் கந்தையா அப்பு என்று ஒரு முடிவெட்டும் தொழிலாளி இருந்தார். நல்ல அன்பான மனுசன், எங்களிற்கு என்னவோ விதவிதமான ஸ்ரைல் என்று சொல்லி முடி வெட்டுவார். ஆனால் கடைசியில் பார்த்தால் எல்லோருடைய தலையும் சட்டியை கவிட்டு விட்டது போலவே இருக்கும். அவர் மருத்துவமும் பார்ப்பார். என்னவோ எல்லாம் சொல்லி மருந்து கொடுப்பார். ஆனால் அதுவும் அவரது முடிவெட்டும் கலை மாதிரித்தான். வருத்தம் கொஞ்சமும் மாறாது.

யாழ்ப்பாணத்து பிரபலமான வைத்தியர்களைப் பற்றி பேச்சு வந்தால் கந்தையா அப்பு திருவாசகம் மாதிரி ஒரு வாசகம் சொல்லுவார் «அவனும் என்னை மாதிரி ஒரு கெட்டிக்காரன் தான்», அவ்வளவு தான் பக்கத்தில் இருப்பவர்கள் எல்லாம் பேயறைஞ்சது மாதிரி பேச்சு, மூச்சில்லாமல் அதிர்ந்து போய் விடுவார்கள். ஈழத்தமிழர்களின் உலகத் தலைவரான உங்கடை வீரவசனங்களை கேக்கும் போது பொறி பறக்கும் வசனங்களை பேசுவதிலும், எழுதுவதிலும் உங்களை மாதிரியே கெட்டிக்காரரான உலகத்தமிழர்களின் தலைவரான கருணாநிதியின் ஞாபகம் தவிர்க்க முடியாமல் வந்து தொலைக்கிறது.

அது மட்டுமில்லை, நீங்கள் இலங்கையின் ஏழைமக்களைப் பற்றியே எந்தநேரமும் யோசித்துக் கொண்டிருப்பது போலவே அவரும் அழகிரி, ஸ்டாலின், தமிழரசு, கனிமொழி என்று தமிழ்நாட்டின் ஏழைமக்களைப் பற்றியே யோசித்துக் கொண்டிருப்பார். அவரின் «மனோகரா» படத்தில் சிவாஜி கணேசனை ஒரு பெரிய கருங்கல் தூணில் சங்கிலியால் கட்டிப் போட்டிருப்பார்கள். அதுவரை அவரை அடக்கி வைத்திருந்த அவரது தாயான கண்ணாம்பா «பொறுத்தது போதும், பொங்கியெழு மனோகரா» என்று சொன்னதும் சிவாஜி அந்தப் பெரிய கருங்கல் தூணை உடைத்துக் கொண்டு, இரும்புச் சங்கிலியை அறுத்துக் கொண்டு எதிரிகளை துவம்சம் பண்ணுவார்.

அண்ணே, இந்தக் கொஞ்ச நாளில் மட்டும் நீங்கள் கொழுத்திப் போட்ட வாணங்கள் கொஞ்சமில்லை. நஞ்மில்லை.

1. «இராணுவத்தை முழுமையாக வெளியேற்றி மக்களை உரிய முறையில் மீள்குடியேற்றுக!!»., (22.03.15).

2. «தேர்தல் முடிவடைந்த பின்னர் தமிழர்களின் பலத்தைக் கொண்டு மூன்று தொடக்கம் ஆறுமாத காலத்திற்குள் தீர்வு கிடைக்க எதிர்வரும் தேர்தல் வழி சமைக்கும் என சர்வதேச சமுகம் நம்புகிறது». (வலம்புரி, 10.07.15). (அண்ணே, நீங்கள் ஒரு ஆல் இன் ஆல் அழகுராஜா அண்ணே, சர்வதேச சமுகம் நம்புகிறதைக் கூட நீங்கள் கண்டுபிடிச்சு வைச்சிருக்கிறீங்களே)

3. «தமிழர்களின் இலட்சியத்தை தோற்கடிக்க நினைப்போருக்கு பாடம் புகட்டுவோம்». (சுடரொளி, 21.07.15)

4. «மகிந்த அரசைப் போல மைத்திரி அரசும் சிறுபான்மைமக்களை புறம் தள்ளி செயற்பட முடியாது. புறம் தள்ளினால் இந்த அரசிற்கு எதிராகவும் போராட்டங்களை முன்னெடுப்போம்».(யாழ் தினக்குரல், 24.06.15)

5. «காணிகளை விடுவிக்காவிடின் மீண்டும் வெடிக்கும் போராட்டம்». (உதயன், 16.12.15). (செய்திகளிற்கு நன்றி, தோழர் பாலனின் முகப்புத்தகக் குறிப்புகள்)

அண்ணே, அரண்மனைத் தூணில் சிவாஜியை கட்டிப் போட்டது போல இலங்கைப் பாராளுமன்ற தூணில் உங்களை கட்டிப் போட்டிருக்க, கண்ணாம்பாவில் இடத்தில் அய்யா சம்பந்தன் நின்று கொண்டு «பொறுத்தது போதும் பொங்கியெழு, மாவை சேனாதிராசா» என்றதும் நீங்கள் மேலே இருக்கும் முழக்கங்களை கஸ்டப்பட்டு ஞாபகம் வைச்சு பொறி பறக்க உறுமிக் கொண்டு எதிரிகளை பந்தாடுவதை நினைச்சுப் பார்க்கவே புல்லரிக்குதண்ணே!. ஆனா ஒரே ஒரு இடத்திலே மட்டும் இடிக்குது அண்ணே. «மனோகராவில் சிவாஜிக்கு வசந்தசேனை என்று ஒரு வில்லி இருந்தா, ஆனா நீங்கள் யாரை எதிர்த்து வசனம் பேசுவீங்கள்?, எவனிற்கு எதிராக போராடுவீர்கள்?



17.05.2009 அன்று முள்ளிவாய்க்காலில் முடிந்த போரில் எம் தமிழ் மக்களை படுகொலை செய்த இலங்கை இராணுவத்தின் தலைமைத் தளபதி சரத் பொன்சேகாவை ஆறுமாதத்தில் 26.01.2010 இல் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் உங்களது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆதரித்தது. தமிழ்மக்களை படுகொலை செய்த இராணுவத்தளபதியே உங்களது எதிரி இல்லை.

டேவிட் கமரோன் யாழ்ப்பாணம் வந்த போது உங்களது கூட்டமைப்புக்காரர்கள் யாழ்ப்பாண நூலகத்தில் பயபக்தியோடு கைகட்டிக் கொண்டு சந்தித்தீர்கள். அந்த யாழ்ப்பாண நூலகத்தை ரணில் விக்கிரமசிங்காவின் ஐக்கிய தேசியக்கட்சி தான் எரித்தது. எழுபத்தேழில், எண்பத்து மூன்றில் என்று தமிழ்மக்களிற்கு எதிரான இனக்கலவரங்களை ஐக்கிய தேசியக் கட்சி அரசுகள் தான் திட்டமிட்டு நடத்தின. இனக்கலவரங்களில் தமிழ் மக்களைக் கொன்ற ஐக்கிய தேசியக் கட்சியையும், அதன் இன்றைய தலைவரான ரணில் விக்கிரமசிங்காவையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்கிறது. அப்ப அவர்களும் உங்களது எதிரிகள் இல்லை.

இனப்படுகொலையாளி மகிந்த ராஜபக்சாவின் அரசில் கடைசிவரை மந்திரியாக இருந்த மைத்திரி சிறிசேனாவைவும், அவரது சுதந்திரக்கட்சியையும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்கிறது. «சிங்களம் மட்டும்» என்ற இனவாத சட்டம் தொடங்கி முள்ளிவாய்க்கால் படுகொலைகள் வரை தமிழ்மக்களை ஒடுக்கிய சுதந்திரக் கட்சியும் உங்களது எதிரிகள் இல்லை.

அண்ணே, இதிலே இருந்து ஒன்றை நான் கண்டுபிடிச்சேன். அதாவது தமிழ் மக்களிற்கு இலங்கை இராணுவம் எதிரி, ஐக்கிய தேசியக் கட்சி எதிரி, சுதந்திரக் கட்சி எதிரி. இவர்கள் உங்கள் கூட்டாளிகள். தமிழ்மக்களின் எதிரிகளின் கூட்டாளிகள் தமிழ்மக்களிற்கு எதிரிகளாக மட்டுமே இருக்க முடியும். அப்ப நீங்கள் தமிழ் மக்களின் எதிரிகள். உங்களது அரசியல் தமிழ் மக்களிற்கு எதிரானது என்பது எப்பவோ தெரிந்த விடயம் தான், இனி இந்த «பொறுத்தது போதும்» மாதிரியான வசனங்களை நேரடியாகவே உங்களது நிரந்தர எதிரிகளான தமிழ்மக்களைப் பார்த்து பேசுங்கள். உங்களது நண்பர்களான ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சுதந்திரக் கட்சிக்கும் எதிராகப் பேசி உங்களது நடிப்புத் திறமையை வீணாக்க வேண்டாம்.





வடக்குக்-கிழக்கு உட்டபட்ட நாட்டின் பல பகுதிகளில் உற்பத்தி நிறுவனங்களால் நீர்மாசடைவு, தவறான விவசாய முறைகள், போரில் பயன்படுத்திய ரசாயனம் போன்ற காரணிகளால் , சிறு நீரக கோளாறுமக்கள் பரவலாக் காணப்படுகிறது . இதற்கு அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கத் தயாராகவில்லை.பாதிக்கபட்ட மக்களை அணிதிரட்டவும், அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றவும், சிறு நீராக நோய்த் தடுப்பு மக்கள் இயக்கம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. அதன் செயற்பாடுகள் நாட்டின் பல பிர தேசங்களிலும் முன்னெடுக்கப் படுகிறது.



படிப்பகம்

# தண்ணீருக்குத் தவிப்போரும், தன்னாட்சி காணத் துடிப்போரும்

வடமாகாண சபையின் 2016 பெப்ரவரி மாத மாதாந்தக் கூட்டத் தொடர் அமர்வின் போது அச் சபையின் விவசாய அமைச்சருக்கு எதிராக சுமார் 20 புகார்கள் அடங்கிய தீர்மானம் முன் வைக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. அவற்றில் 6 புகார்கள் தண்ணீர் சம்பந்தப்பட்டவைகளாகும்.

(1) இரணைமடு நீர் விநியோகம்.

(4) சுன்னாகம் கிணற்று நீர் பிரச்சனை.

(5) மருதங்கேணி கடல்நீர் நன்னீராக்கும் திட்டம்.

(12) இரணைமடுக்குளத்து நீர் மருதங்கேணிக் கடலில் கலப்பதை தடுக்கத் தவறியமை.

(13) குடாநாட்டுக் கடலுக்குப் போய்ச் சேரும் மேலதிக நீரை சேகரிக்கத் தவறியமை.

(18) மத்திய அரசின் சிறியகுளங்கள் மீளமைக்கும் திட்டத்திற்கு ஒத்துழையாமை.

வடமாகாணத்தின் இந்த தண்ணீர் பற்றாக்குறை-நிலத்தடி நீர் உவர் நீராதல் ஆகியவற்றால் விவசாயம் பாதிக்கப்படுவதும், மக்கள் குடிநீரின்றி அவதிப்படுவதும் கடந்த சுமார் 60 ஆண்டுகளுக்கும் மேலாக காணப்படும் பிரச்சனையாகும். இன்றுவரை எமது அரசியல் தெரிவுகளால் இதற்கான தீர்வைக் காணமுடியவில்லை அல்லது தீர்வுகாண அவர்கள் நினைக்கவில்லை அல்லது தீர்க்க விரும்பவில்லை என்பதே இன்றைய யதார்த்தம். இதனை கடந்த சில ஆண்டுகளாக சுன்னாகம் கிணற்று நீரில் நஞ்சு(எண்ணெய்)கலந்திருப்பது தொடர்பாகவும், மகாவலி ஆற்றுநீரை வடக்குக்கு கொண்டு வரும் திட்டத்திலும் அவர்கள் கையாண்ட அணுகுமுறைகள் மேலும் உறுதிப்படுத்திக் காட்டுகின்றன.

**வன்னிப் பிராந்தியம் மிக நீண்டகாலமாகவே கடுமையான வரட்சிகளால் பாதிக்கப்பட்டு நீர் நிலைகள் வற்றி, விவசாயிகள் நீரின்றி அவதிப்பட்டு, பஞ்சத்தில் மக்கள் பட்டினியால் மடியும் ஒரு நிலப்பரப்பாகும். இலங்கை சுதந்திரம் பெற்ற நாள் முதல், காலத்திற்கு காலம் மக்கள் நல சிந்தனையுடையோர் பலர் இரணைமடுக்குளம் நீர்த் தேக்கம்~காடுகளில் தூ ர்ந்துபோன குளங்கள் திருத்தல்~மழை நீரைச் சேகரித்தல்~ஆனையிறவுக் கடலேரியை நன்னீர் ஏரியாக்குதல்~ யாழ்ப்பாணத்தின் நன்னீர் உவர்ப்படைதல் என்பவை பற்றி மிக அழுத்தமாகவும், ஆழ்ந்த மக்கள் கரிசனையுடனும் கட்டுரைகள் பல எழுதி அரசியல் தலைவர்களை ஆவன செய்யும்படி வேண்டியுள்ளனர். இவற்றின் மத்தியில் அவ்வப்போது மகாவலி கங்கையை திசை திருப்பும் ஆலோசனைகளும் முன் வைக்கப்பட்டடிருந்தன.**

1950களில் யாழ்ப்பாணக் கரையோரக் கிராமங்களில் அமைந்திருந்த நன்னீர் கிணறுகள் உவராக மாற்றமடைய ஆரம்பித்த போது, நீர் இறைக்கும் இயந்திரங்களின் பாவனையே காரணம் என்பது சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அதனை விவசாயிகளும், அரசியல் தலைமைகளும் கணக்கில் எடுக்கவில்லை. காரணம் உவர்நீரால் பாதிக்கப்பட்டவர்கள் கரையோரம் வாழ்ந்த மீன்பிடி சமூகத்தினரே.

சொந்த வீட்டுக் கிணறு உவரானபோது ஊரின் மத்தியில் உள்ள கிணற்று நீரை அள்ளுவதற்கு அவர்களுக்கு உரிமை இல்லாததால் பல மைல்கள் நடந்து பாழடைந்த கிணறுகளில் நீர் மொண்டு குடிக்க வேண்டி நேரிட்டது. இந்த சாதித் தடைச் சட்டம் அறியாத பாலகர்கள் பலர் தாகத்திற்காக சில கிணறுகளில் தண்ணீர் அள்ளியதால் கட்டி வைக்கப்பட்டு அடி வாங்கியதும், அதனால் ஊர் பிளவுபட்டு நின்று அடிபட்டதுமான சம்பவங்கள் கடந்தகால வரலாற்றில் நிறையவே உண்டு. இன்றைக்கும் அந்த நீர் தடை முற்றாக நீங்கவில்லை என்பது மிகவும் கசப்பான உண்மையாகும்.

அதுமட்டுமல்ல இன்று சுன்னாகம் கிணற்று நீர் மாசடைவதால் பாதிக்கப்படும் மக்களின் பிரச்சனை தீர்க்கப்படாமல் அது நீதிமன்றம் வரை சென்றதற்கான காரண காரியங்களை நன்கு ஆராய்ந்தோமானால் எமது அரசியல் தலைமைகளின் சாதீயப் பார்வையின் ஆழம் நன்கு புலப்படும். «அடைந்தால் தன்னாட்சி இல்லையேல் தற்கொலை» என்ற சிந்தாந்தத்தை வளர்த்து வாழ்த்தி தமது வளங்களை மேம்படுத்திக் கொண்ட எமது தமிழ் தேசியவாதிகளின் பூரண அதிகாரத்தின் கீழ் கிராமசபை-பிரதேசசபை-மாநகரசபை-மாகாணசபை இன்று இருந்தும் கடந்த பல வருடங்களாக கிணற்றுத் தண்ணீரில் எண்ணெய் உண்டா இல்லையா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை.

இன்று வரையும் தங்களைத் தமிழர்கள் என்று மார்தட்டிப் பெருமைப்படுபவர்கள் பெரும்பான்மை-சிறுபான்மை என்ற வாய்ப்பாட்டை உச்சரித்துக் கொண்டு அடிவாங்கி அழிபட்டுக் கொண்டிருப்பதற்கான அடிப்படைக் காரணம் இந்த «தண்ணீர்» பாவனையில்தான் தங்கியுள்ளது.

ஏனெனில் இந்தத் தண்ணீர் பிரச்சனை தமிழருக்குள்ளேயே ஒரு பெரும்பான்மை-சிறுபான்மை என்ற பாகுபாட்டு அடக்குமுறையின் வெளிப்பாடாகும். ஒரு சிறுபான்மை சமூகத் தமிழன் தனது வீட்டுவேலிக்கு அடுத்த காணிக்குள் உள்ள பெரும்பான்மை சமூகத்தவனின் கிணற்றில் உள்ள நீரைக் குடிப்பதற்காகக் கூட எடுக்கக் கூடாது என்பது தமிழருடைய நீதியான வாழ்க்கை நெறிப்பாடு என்றால் 7 நாட்களும் விரைந்த சேவையாக (நுஓிசநளள ஹுநடளைநசல) நடாத்தத் தொடங்கியுள்ளது. இதனை விட கடல் நீரை நன்னீர் ஆக்கும் தொழிற்சாலைகள் பற்றியும் விவாதிக்கப்படுகிறது.

மகாவலி நீரை மறுப்பதில் தமிழ்த் தேசியத்திற்கு ஒரு நியாயம் உண்டு. அது «சிங்களவன்ரை தண்ணியை நம்பி தமிழர்-நாங்க சீவிக்கறதோ?» என்ற தமிழ் வைராக்கியம். ஆனால் பேரினவாத பெரும்பான்மையினச் சிங்கள அரசாங்கம் சிறுபான்மையினத் தமிழருக்கு உரிமைகளைத் வழங்க மறுப்பதை தவறு என எவராவது வாதாடுவதில் நியாயம் உண்டா?



இலங்கையில் தமிழீழத்திற்கான வெற்றிகரமான ஆயுதப் போராட்டத்தில் ஒரு முக்கிய திருப்புமுனையாக அமைந்து அப்போராட்டத்தை வன்னிப் பேரழிவுக்கு இட்டுச் சென்றதும் தமிழ்த் தேசியம் தண்ணீரில் காட்டிய பாகுபாடே என்பதனை மாவிலாறு தண்ணீர் மறிப்பும் அந்த அரிய வாய்ப்பைச் சிங்கள ஆட்சியாளர்கள் பயன்படுத்தி அவர்கள் கையாண்ட தார்மீக-சர்வதேச ஆதரவு கலந்த யுத்தநடைமுறைகளும் சான்று பகர்ந்துள்ளன.

வன்னிப் பிராந்தியம் மிக நீண்டகாலமாகவே கடுமையான வரட்சிகளால் பாதிக்கப்பட்டு நீர் நிலைகள் வற்றி, விவசாயிகள் நீரின்றி அவதிப்பட்டு, பஞ்சத்தில் மக்கள் பட்டினியால் மடியும் ஒரு நிலப்பரப்பாகும். இலங்கை சுதந்திரம் பெற்ற நாள் முதல், காலத்திற்கு காலம் மக்கள் நல சிந்தனையுடையோர் பலர் இரணைமடுக்குளம் நீர்த் தேக்கம்-காடுகளில் தூர்ந்துபோன குளங்கள் திருத்தல்-மழை நீரைச் சேகரித்தல்-ஆனையிறவுக் கடலேரியை நன்னீர் ஏரியாக்குதல்-யாழ்ப்பாணத்தின் நன்னீர் உவர்ப்படைதல் என்பவை பற்றி மிக அழுத்தமாகவும், ஆழ்ந்த மக்கள் கரிசனையுடனும் கட்டுரைகள் பல எழுதி அரசியல் தலைவர்களை ஆவன செய்யும்படி வேண்டியுள்ளனர். இவற்றின் மத்தியில் அவ்வப்போது மகாவலி கங்கையை திசை திருப்பும் ஆலோசனைகளும் முன் வைக்கப்பட்டடிருந்தன.

கடந்த அரசாங்கத்தின் அனுசரணையின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கி மகாவலித் திட்டம் உட்பட வன்னியின் நீர்ப் பிரச்சனைகளைத் தீர்க்கும் வகையில் குளங்கள் அபிவிருத்தி வேலைகளுக்கு நிதி(கடன்) வழங்க முன்வந்திருந்தது. ஆனால் «இரணைமடுத் தண்ணீர் யாழ்ப்பாணம் போனால் வன்னி வரண்டு விடும்» என்று கூப்பாடுகள் போட்டதனால் சில திட்டங்கள் கைவிடப்பட்டுள்ளன. மகாவலி நீர் இரணைமடுக்குளத்தையும் நிரப்பிக் கொண்டு குடாநாடு போகும் போது வன்னி ஏன் வரண்டுவிடும் என விவசாயிகள் கேட்பதற்கு நமது தேசியச் சுதந்திரச் சிந்தனையாளர்கள் சிறிதும் இடம் வைக்கவில்லை.

ஆனால் அதேவேளை குடாநாட்டு உவர் நீர்-சுன்னாகம் நஞ்சு நீர் காரணமாக இன்று போத்தல் தண்ணீர் நிறுவனங்கள் தங்கள் கடைகளைப் கிளைவிட்டு பரப்பிக் கொண்டு வருகின்றன. அண்மையில் ஒரு நிறுவனம் தொலைபேசி அழைப்பின் ஊடாக போத்தல் நீர் விநியோகத்தை 24மணி நேரமும்-வாரத்தில்

தூர்ந்தழிந்த குளங்களைத் திருத்தி, பாவனையில் உள்ள குளங்களை அபிவிருத்தி செய்து, ஓடிப் போய் கடலில் விழும் மழைநீரைத் தேக்கி, அதனை மக்களுக்கு பயன்பட வைப்பதால் இந்த தமிழ் தேசியத் தலைமைகளுக்கு என்ன நஷ்டம் என்பதற்கான விடையைக் கண்டு பிடிப்போமானால் இவர்களின் தன்னாட்சிக்கான தாகம் பற்றிய உள் நோக்கம் நன்கு புலப்படும்.

வட மாகாணசபை ஆட்சிக்கு வந்து 16 மாதங்கள் முடிந்துவிட்டன. மக்களின் அமோக ஆதரவுடன் ஒரே சின்னத்தில்(வீடு) போட்டியிட்டு, அவர்களால் தெரிவு செய்யப்பட்டு, அறுதிப் பெரும்பான்மையுடன் அதிகாரத்தைக் கைப்பற்றி ஆட்சி நடாத்துவோர் மத்தியில் செயற்படும் ஒரு அமைச்சர்(விவசாய) விட்ட (மொத்தம் 20)தவறுகளை பெப்ரவரி மாதத்தில் சுட்டிக் காட்டிய சக ஆளும் கட்சி உறுப்பினர்கள் 29 பேரும் கடந்த இரண்டு வருடங்களுக்கும் மேலாக(21 செப்ரெம்பர் 2013லிருந்து )மக்களுக்கு ஆற்றிய சேவை யாவை? அதிகாரங்கள் இல்லை-போதாது எனக் கூக்குரல் போட்டபடிதானே மேற்குறிப்பிட்ட அமைச்சர் அதிகார துஷ்பிரயோகம் செய்து வந்துள்ளார். இதனை ஏனைய உறுப்பினர்கள் ஏன் கண்டு கொள்ளவில்லை? அறிந்திருக்கவில்லை? அறிந்திருந்தால் ஏன் வெளிப்படுத்தவில்லை? அரசாங்க சம்பளமும் மேலதிக அலவன்சுகளும் சலுகைகளும் எடுத்துக் கொண்டு இவர்கள் என்ன செய்தார்கள்?

இந்த இலட்சணத்துடன் தா! தா! என அடம் பிடித்தபடி கோரும் பொலிஸ்-காணி அதிகாரமும் கிடைக்குமானால் ஒரு பகுதி அதாவது ஐம்பது வீதமான தமிழ் மக்களின் நிலை «எண்ணைச் சட்டிக்குத் தப்பி எரி நெருப்பில் வீழ்ந்த கதையாகவே» அமையும்.

எனவே மாகாணசபையின் இந்தத் தீர்மானம் தண்ணீர் பிரச்சனையைச் சாட்டாக வைத்து நடாத்தப்படும் அரசியல் வியாபாரத்தினால் சுருட்டப்படும் பணத்தைச் தண்ணீராகச் செலவழிப்போர் மத்தியில் எழுந்த பணப் பங்கீட்டுப் பிரச்சனையால் கொண்டுவரப்பட்டதா, அல்லது மக்களின் நலன் கருதி முன் வைக்கப்பட்டதா என்பதனை தண்ணீரால் பாதிக்கப்பட்டு பரிதவிக்கும் வடமாகாண மக்கள்தான் கண்டறிய வேண்டும்.

தமிழர்களுக்குத் தன்னாட்சி வழங்கும் வகையில் அரசியல் சாசனத்திற்கு அவசர அவசரமாக ஆலோசனைகள் வழங்குபவர்கள் அதற்கு முன்னர் மக்களின் தண்ணீர் பிரச்சனையைத் தீர்க்க வேண்டும். அப்போதுதான் தன்னாட்சி பெற்றுக் கொள்வதற்கான தகுதி கிடைக்கும். அத்துடன் அதில் நீதி நியாயமும் இருக்கும்.



படிப்பகம்

# தேசத்தவரை விற்று தேசத்தை அடகு வைக்கும் தேசியம்




ஆங்கிலேயர் இலங்கைக்கு சுதந்திரம் வழங்க ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த காலப் பகுதிகளில் இன அடிப்படையில் அரசியல்வாதிகள் செயற்படத் தொடங்கிய போது இனவாதம் நாட்டை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும் என உணர்ந்த - மக்களை நேசித்த பல அறிவாளர்கள் தெற்கிலும் வடக்கிலும் இனவாதத்தை முளையிலேயே கிள்ளி எறிய தீவிரமாகச் செயற்பட்டார்கள். அந்த செயற்பாடுகளை வடக்கில் «யாழ்ப்பாணம் இளைஞர் காங்கிரஸ்» தொண்டர்களும் தெற்கில் இடதுசாரிச் தொண்டர்களும் இணைந்து நின்று முன்னெடுத்தனர்.

இந்த முன்னெடுப்புகளில் இவர்கள் ஒரே அணியில் இணைந்து நின்றமைக்கான காரணம் இலங்கை மக்களை நேசித்தமையே. இலங்கை மக்களை அவர்கள் மனிதர்களாக மண்ணின் மைந்தர்களாக மட்டுமே பார்த்தார்கள். மனித நேயமும் மனிதாபிமானமும் கொண்டிருந்த அவர்கள் இன-மத-பால்-சாதி-பிராந்திய-உயர்வு-தாழ்வுகளைக் கடந்து நின்று «எல்லோரும் இந்நாட்டு மன்னர்-சுதந்திரம் அனைத்து மக்களுக்கும் உரியதாக அமைய வேண்டும்» என்று கூறியே மக்களை அணிதிரட்டினார்கள். மக்கள் மத்தியில் சமத்துவம்-சம உரிமை நிலவவேண்டும் என்பதே அவர்களின் தாரகமந்திரம் ஆக இருந்தது.

ஆனால் தனது மக்களை மறந்து பிற மக்களை வெறுப்பதை முதன்மையாகக் கொண்டிருந்த சிங்கள-தமிழ் தேசியவாதக் கும்பல்களினால் மக்களை நேசித்தவர்கள் திட்டமிட்டுப் படிப்படியாகத் தோற்கடிக்கப்பட்டார்கள். அன்று அவர்களைத் தோற்கடிப்பதற்காக அந்தத் தேசியவாதிகள் பாவிக்கத் தொடங்கிய அரசியல் மொழிதான் இன்று வரை எமது நாட்டை இந்த அழிவு நிலைமைக்குக் கொண்டு வந்து சேர்த்துள்ளது. அதுமட்டுமல்லாமல் அந்நியரின் தலையீட்டையும் மிக ஆழமாக ஏற்படுத்தித் தந்துள்ளது. தேசியவாதம் இன்று அனைத்து இலங்கை மக்களின் சுய இருப்பை உலக ஏகாதிபத்திய சக்திகளின் கைகளில் கொடுத்து அதனை ஊசலாடும்படி செய்ய வைத்துள்ளது.

சிங்களவன் என்று உச்சரிக்கும் ஒரு தமிழர் ஒருபோதும் தமிழ்ப் பேசும் மக்களை நேசிப்பவராக இருக்க முடியாது. தமிழன் எனப் பேசும் ஒரு சிங்களவர் ஒருபோதும் சிங்கள மக்களை நேசிப்பவராக இருக்க முடியாது. இரு பக்கத்திலும் உள்ள இந்தத் தேசியவாதிகள் இன்று வரைக்கும் இலங்கை மக்களைக் கொன்று குவிக்கும் அரசியல் பாதையிலேயே நடை போட்டு வருகின்றனர். தொடர்ந்தும் அதே பாதையில் செல்வதற்கான அரசியல் மொழியைத்தான் இன்றும் பேசுகின்றனர்.

இந்த தமிழ்த் தேசியம் சிங்கள மொழியைப் படிக்காதே என்று சொல்லி பல்லாயிரக் கணக்கான தமிழர்களின் அரச உத்தியோகத்திற்கு ஆப்பு வைத்து அவர்கள் குடும்பங்களின் வாழ்க்கையை சீர்குலைத்தது. அதே தமிழ்த் தேசியம்தான் சிங்களத் தேசியத்தைச் சீண்டி விட்டு தென்னிலங்கையில் வாழ்ந்த தமிழர்களுக்கெதிரான கலவரங்களுக்குக் காரணமாக அமைந்திருந்தது. சிங்கள-தமிழ் தேசியங்களின் போட்டிதான் 15லட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்களை நாட்டை விட்டு ஓட வைத்தது. இன்னமும் ஓட வைப்பதற்கான முன்னெடுப்புகளில் ஈடுபட்டுள்ளது. தென்னிலங்கையில் வாழும் மக்களை தொடர்ந்து அச்சத்துடன் வாழும் சூழலை - இனவாதத் தணலை தொடர்ந்து தக்க வைத்தபடி உள்ளது.

தேசியம் தமிழ்நாட்டின் அகதிமுகாம்களில் நாயினும் கேவலமாக நடாத்தப்படும் தமிழர்கள் பற்றியோ அங்குள்ள சிறப்புமுகாம் சிறைகளில் வதைபடும் மக்கள் பற்றியோ கவலைப்பட்டது கிடையாது. அதற்கு இலங்கைச் சிறைகளில் வாடும் அரசியல் கைதிகள் விடயத்தில் கூட ஆழமான அக்கறை இல்லை. யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் - அகதிமுகாம்களில் வாழ்பவர்கள் - காணாமல் போனவர்கள் கடத்தப்பட்டவர்கள் இந்த தமிழ்த் தேசியத்தின் கண்ணுக்கு தெரியவேயில்லை.

தேசியத்தின் பெயரால் நடாத்தப்பட்ட யுத்தத்தினால் இருபக்கங்களிலும் கோடீஸ்வரர்கள்தான் உருவாகியுள்ளார்களே ஒழிய சாதாரண-ஏழை எளிய மக்கள் நாளாந்த கஞ்சிக்கு பாடாய் அலைகிறார்கள். இலங்கையின் இரு இனங்களிலும் தோன்றி மறைந்த ஆயுத மோதல்கள் யாவும் சிங்கள-தமிழ் தேசியத்தின் உற்பத்திகளே. தேசியவாதிகளால் ஏமாற்றப்பட்டு விரக்தி அடைந்த இளைஞர்கள்தான் ஆயுதத்தை கையில் எடுத்தனர். ஆனால் இன்று வரை தேசியம் தனது பிழைப்பைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்காக, தான் விட்ட தவறை மறைத்து இளைஞர்களின் செயற்பாடுகளைத் தனியே 'பயங்கரவாதம;» என்ற முத்திரை குத்தி சொந்த மக்களையே கொன்றழித்துவிட்டு சர்வதேச நிறுவனங்கள் இடும் கட்டளைகளை சற்றும் பிசகாமல் நிறைவேற்றி வருகிறது.

தேசியத்தின் அடி ஆதாரம் வெறுப்புணர்வாகும். வெறுப்பை ஊட்டி அதற்குத் தீயை மூட்டிச் சுவாலை விட்டு எரியச் செய்து அதில் குளிர் காய்வதொன்றே அதன் இயல்பாகும். இதே தேசியம்தான் «நூறு பேர் மிகுதியுடன் நாட்டை மீட்டெடுக்க நேர்ந்தாலும் அதனை மீளக் கட்டியெழுப்புவோம்» எனக் கூற அதனை ஆமோததித்தவர்கள் நாம். தொடர்ந்தும் இதன் பின்னால் நாமும் நமது சுயநலத்தைப் பாதுகாக்கும் சமூகக் கட்டுமானங்களைச் சுமந்து கொண்டு ஓடும் வரைக்கும் ஒப்பாரியும் ஓட்டமும் ஓலமும்தான் கிடைக்கும்.

தேசியத்தின் சிறப்பம்சம் யாதெனில் அது ஜனநாயகத்திலும் சரி, சர்வாதிகாரத்திலும் சரி தனது பிழைப்பை நிலைநிறுத்திக் கொள்ளும். தனது மக்களை விழிப்புணர்வு அடையவிடாமல் அவர்கள் மத்தியில் இன-மத-சாதி-பிராந்திய-வர்க்க குணாம்சங்களை ஊக்குவித்து அவர்களுக்குள் மோதல்களை உருவாக்கித் தனது அதிகாரத்திற்கு ஆபத்து வராத வண்ணம் பார்த்துக் கொள்ளும். ஏகாதிபத்தியம் தனது சுரண்டல் பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டி உலகம் பூராவும் இந்த தேசியத்தைக் உருவாக்கிப் பாதுகாப்பதற்காக ஜனநாயகம்-மனித உரிமைகள்-உதவி-ஒத்துழைப்பு-நட்புறவு என்ற வடிவங்களில் செயற்படுகிறது. இலங்கையில் தேசியங்களின் பெயரால் இன மோதலை வளர்த்ததும் - முடித்ததும் பின்பு பாதிப்புக்குள்ளான மக்களுக்கு உதவுவதும் அதே ஏகாதிபத்தியமே.

இந்தத் தேசியம் உலகம் பூராவும் கொடிகட்டிப் பறக்க விடப்பட்டுள்ளது. மக்களுக்காக எவராவது ஏதாவது நல்லது செய்யப் புறப்பட்டால் சிங்களவன்-தோட்டக்காட்டான்-மட்டக்கிளப்பான்-வன்னியான்-யாழ்ப்பாணத்தான்-தீவான்-எனத் தொடங்கி ஊர்வரைக்கும் சென்று கடைசியில் சாதிப் பட்டயங்களை அவர்கள் கழுத்தில் மாட்டித் அவர்களைத் துரோகியாக்கி ஒதுக்கித் தள்ளி விடும் இந்தத் தேசியம். «அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்» தொடக்கம் முதல் இன்றைய «தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு» வரை இதுவே வரலாறு. நாம் இனியும் பார்வையாளர்களாக இருப்போமானால் அதே வரலாறு தொடர்வது நிச்சயம்.

தேசியத்தின் இருப்பைக் கேள்விக்கு உள்ளாக்குபவர்களை கடத்துவதும்-காணாமல் போகச் செய்வதும்-கொல்வதும் அதன் முக்கிய குணாம்சங்களில் ஒன்றாகும். இன்று எமது நாட்டில் சிறைப்பட்டவர்கள்-கடத்தப்பட்டவர்கள்-காணாமல் போனவர்கள்-கொல்லப்பட்டவர்கள் தொடர்பாக கடைப்பிடிக்கப்படும் அணுகுமுறைகள் யாவும் தேசியத்தின் கோர முகத்தை எமக்கு காட்டி நிற்கின்றன.

கண்ணாடி பத்மநாதன் - துரையப்பா - மட்டக்களப்பு மைக்கல் - சுதுமலை பற்குணன் - சுந்தரம் - இறைகுமாரன் - உமைகுமாரன் என தமிழர்கள் கொல்லப்பட்ட போது இந்தத் தமிழ்த் தேசியம் பேசாமல் பார்த்து ரசித்துக் கொண்டுதானே தனது சுயலாப அரசியலைத் தொடர்ந்து கொண்டிருந்தது. 1980களில் இராணுவச் சிறைமுகாம்களில் வதைபட்டுக் குடும்பத்தினரின் சந்திப்புக் கூட மறுக்கப்பட்டு வாடி வதங்கிக் கொண்டிருந்த இளைஞர்களில் சிலரைத் தரிசித்தும் ஏனைய பலரை ஏனென்று ஏறெடுத்துப் பார்க்காமலும் போனதும் இது தேசியம்தான்..

இந்த உண்மைகள் எங்களில் ஒரு பகுதி மக்களுக்கு நன்கு புரிந்தும் புரியாதமாதிரி நடிக்கிறார்கள். புரிந்துகொண்ட ஒரு பகுதியினர் தங்கள் தங்கள் நலன்களைப் பாதுகாக்கும் அரண்களுக்குள் நின்று கொண்டு தாங்கள் தப்புவதற்கான காரணங்களை அவரவர் பாரம்பரிய குணாம்சங்களின் அடிப்படையில் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். புரிந்து கொண்டு போராடப் புறப்படும் சாமானிய மக்களை தேசியம் பல முனைத் தாக்குதல்கள் மூலம் அடக்கியொடுக்க முற்படுகிறது.

இந்த அடக்குமுறைகளை நாம் எதிர்கொள்வதற்கான ஒரேயொரு வழி நாம் ஒவ்வொருவரும் பரஸ்பர நம்பிக்கையுடன் இலங்கைத் தேசத்தவராக இணைந்து நின்று போராடுவதேயாகும்.

தேசியங்களை நொறுக்கித் தேசத்தை நிர்மாணிப்போம்.



படிப்பகம்

# ஒரு ஊடகவியலாளரின் ராஜினாமா கடிதம்!



டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக விவகாரத்தில் பல்கலை மாணவர்களின் கனவுகள், படிப்பு மற்றும் குடும்பங்களை அச்சுறுத்தும் விதமாக செய்திகளை தொடர்ந்து வெளியிட்ட ஜீ (ணநந நெறள) செய்தித் தொலைக்காட்சி சனலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தனது வேலையை ராஜினாமா செய்திருக்கிறார் ஊடகவியலாளர் விஷ்வா தீபக். அவருடைய ராஜினாமா கடிதம் தமிழில்.

ஊடகவியலாளர்களாகிய நாம் பிறரை கேள்வி கேட்கிறோமே அன்றி, நம்மை நாம் கேள்வி கேட்பதே இல்லை. பிறரின் கடமைகளை தீர்மானிக்கும் நாம் நம்முடைய கடமைகளை குறித்துக் கவலை கொள்வதில்லை. நாம் ஜனநாயகத்தின் நான்காவது தூணாக அறியப்படுகிறோம். ஆனால், நம்முடைய நிறுவனங்களோ, சிந்தனையோ, நம் செயல்முறைகளோ ஜனநாயகப்பூர்வமாக இருக்கிறதா? இந்த கேள்வி என்னுடையது மட்டுமில்லை, இது அனைவராலும் கேட்கப்பட்டுவரும் கேள்விதான்.

ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக மாணவர் சங்க தலைவர் கன்ஹையா குமார் மீது தேசியவாதத்தை முன்வைத்து நடத்தப்பட்ட ஊடக விசாரணைகள், அவரை தேசவிரோதி என்று தீர்ப்பெழுதியது, இது மிகவும் ஆபத்தான போக்காகும். ஊடகவியலாளர்களாக அதிகாரத்தை கேள்வி கேட்பதுதான் நம் கடமை, மாறாக அதிகாரத்தோடு கைகோர்த்து நடப்பது கிடையாது. இந்த கேள்விகள்தான் ஊடகவியலில் நிகழ்ந்த அழகான, நல்ல பல சாதனைகளை நிகழ்த்தியிருக்கிறது.

கேள்வி கேட்பதும், கேட்காமல் இருப்பதும் ஒருவருடைய தனிப்பட்ட விருப்பம் சார்ந்தது. ஆனால், என்னைப் பொறுத்தவரை ஒருவருடைய தனிநபர் வெளி என்பது அரசியலானதுதான். தன்னுடைய பணி சார்ந்த கடமை அல்லது சமூக-பொருளாதாரக் கண்ணோட்டம் ஆகிய இரண்டில் ஒன்றைத் தேர்வு செய்ய வேண்டிய காலம் என்பது வந்துவிட்டது. நான் இரண்டாவதைத் தேர்வு செய்திருக்கிறேன், ஜீ செய்தி தொலைக்காட்சி நிர்வாகத்தோடு இதனை முன்னிட்டு எழுந்திருக்கும் முரண் காரணமாக எனது பணியை ராஜினாமா செய்கிறேன்

தங்களுடைய கனவுகளுக்காக, தொடர்ந்து போராடி தியாகம் செய்ய தயாராக இருக்கிற லட்சக்கணக்கான கோடிக்கணக்கான கன்ஹையாக்களுக்கும், ஜேஎன்யூ மாணவர்களுக்கும் எனது ராஜினாமாவை சமர்ப்பிக்கிறேன்.

அன்பிற்குரிய ஜீ நியூஸ்,

ஒரு வருடம் நான்கு மாதங்கள் இந்த நிறுவனத்தோடு பின்னிப் பிணைந்து வேலை பார்த்த பின்பு, இன்று என்னை இந்த நிறுவனத்திலிருந்து விலக்கிக் கொள்வது என்ற முடிவுக்கு வர நேர்ந்திருக்கிறது. இந்த முடிவை நான் முன்னரே எடுத்திருக்க வேண்டும் என்பது தெரியும். ஆனால், இப்போதேனும் இந்த முடிவை எடுக்காவிட்டால், என்னை நானே மன்னிக்க முடியாது

நான் இப்போது சொல்லப்போவது உணர்ச்சிவசப்பட்டோ, கோபத்திலோ, எரிச்சலிலோ சொல்வதல்ல ஆழ்ந்து சிந்தித்துதான் இதை சொல்கிறேன். நான் ஒரு ஊடகவியலாளன் மட்டுமல்ல, இந்த நாட்டின் குடிமகனும் கூட. இந்த நாட்டின் பெயரால் குருட்டு தேசியவாதம் எனும் நஞ்சு பரப்பப்படுகிறது

ஒரு குடிமகனாகவும், வேலை சார்ந்த அறத்தின் அடிப்படையிலும் இந்த நஞ்சு மேலும் பரவாமல் இருக்கச் செய்வது எனது கடமையாகும். இது, சிறு படகில் பேரலைகளை கடக்கும் முயற்சி என்று நானறிவேன், ஆனாலும், இதை நான் தொடங்க விரும்புகிறேன். குருட்டு தேசியவாதத்தை பரப்புரை செய்து, கன்ஹையா சொல்லாததைச் சொன்னது போல தொடர்ந்து பரப்பி வந்த ஜீ நியூஸ் தொலைக்காட்சியின் செயல்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கவே எனது வேலையை ராஜினாமா செய்கிறேன்.

இதில் தனிப்பட்ட நலன் என்பது கொஞ்சம் கூடக் கிடையாது - பணி சார்ந்த அறம், சமூக பொறுப்பு மற்றும் நாட்டின் மீதான பற்றின் அடிப்படையில்தான் இதை நான் செய்கிறேன். இந்த மூன்று அம்சங்களில் ஜீ நியூஸோடு இணைந்திருந்த காரணத்தினால், பல தருணங்களில் நான் தோல்வி அடைந்திருக்கிறேன்.

திரு. நரேந்திர மோடி பிரதமரான காலத்தில் இருந்து, நாட்டின் ஒவ்வொரு செய்தி அறையும் மதவாதத்தை கண்டு உணர்ந்து வருகிறது என்பது உண்மைதான். ஆனால், இந்த நிறுவனத்துடன் இந்த போக்கை ஒப்பிடும்போது, அது கூடுதல் ஆபத்தானதாக இருக்கிறது. இவ்வளவு பெரிய சொல்லை பயன்படுத்துவதற்கு மன்னிக்க வேண்டுகிறேன். ஆனால், இதைவிட பொருத்தமான சொல் இல்லை. ஒவ்வொரு செய்திக்கும் 'மோடி கோணம்' கொடுத்து, மோடி அரசின் செயல்திட்டத்திற்கு ஊக்கம் சேர்க்க வேண்டிய தேவை எங்கிருந்து எழுகிறது?

இவற்றையெல்லாம் பார்க்கும் போது நாம் இன்னும் ஊடகவியலாளர்களாக இருக்கிறோமா என்ற சந்தேகம்தான் எழுகிறது. நாம் அரசின் ஊதுகுழல்களாக மாறிவிட்டோம் என்றுதான் நினைக்கத் தூண்டுகிறது. எனக்கும் சேர்த்து மோடிதான் இந்நாட்டின் பிரதமர். ஒரு ஊடகவியலாளனாக இந்த அளவு மட்டும்தான் மோடி புராணத்தை ரசிக்க முடியும். என்னுடைய மனசாட்சி எனக்கு எதிராகவே போர் தொடுக்க தொடங்கிவிட்டது. என்னை பற்றியே எனக்கு எரிச்சல் வரத் துவங்கிவிட்டது.

ஒவ்வொரு செய்திக்குப் பின்னாலும் மோடி அரசை போற்றி புகழும் ஒரு செயல்திட்டம், மோடி அரசை விமர்சிப்பவர்களை காலி செய்யும் யுக்தி. இவையனைத்தும் என்ன? இவற்றை பற்றி நின்று நிதானித்து சிந்தித்தால் பைத்தியம் பிடித்ததைப் போல உணர்கிறேன்.

நாம் ஏன் இவ்வளவு கேவலமானவர்களாக, அறமில்லாதவர்களாக, பூமியின் மேலுள்ள அழுக்குகளாக மாறிப் போனோம்? இந்தியாவின் சிறந்த ஊடகக் கல்வி நிலையத்தில் படித்துவிட்டு ஆஜ் தக், பிபிசி மற்றும் ஜெர்மன் அலை எனப்படும் ட்யூட்ஸ் வெல் போன்ற உயர்தர நிறுவனங்களில் பணி புரிந்துவிட்டு, நான் ஈட்டிய நற்பெயரை எல்லாம் 'ச்சீ' (அழுக்கடைந்த) ஊடகவியலாளன் என்னும் சொல் சிதைக்கிறது.

நமது நேர்மை கந்தலாகி கிடக்கிறது. இதற்கு யார் பொறுப்பாவது?

சொல்வதற்கு நிறைய இருக்கிறது. டெல்லி முதலமைச்சர் அர்விந்த் கெஜ்ரிவாலைக் குறித்து தொடர்ந்து எதிர் பிரச்சாரம் நடந்து வருகிறது ஏன்? அதிகாரம் மற்றும் தண்ணீர், கல்வி குறித்து அவர் கொண்டிருக்கும் நிலைப்பாடுகளை மட்டுமில்லாமல், அவர் செயல்படுத்த நினைக்கும் திட்டங்களையும் தீவிரமாக விமர்சிப்பது ஏன்? ஒரு ஊடகவியலாளனாக கெஜ்ரிவாலோடு முரண்படுவதற்கு அனைத்து உரிமைகளும் ஒருவருக்கு உண்டு. ஆனால், கோடாரியால் தாக்குவது உரிமை அல்ல. இதுவரை கெஜ்ரிவாலுக்கு எதிராக வந்த செய்திகளைத் தொகுத்தால், பல பக்கங்களை தாண்டும். பார்வையாளரை பொறுத்தவரையில் சார்பில்லாமல், நேர்மையோடு செய்திகளை எடுத்துச் செல்லும் அடிப்படை அறம் என்பதெல்லாம் என்னவானது, ஏதாவது மிஞ்சியிருக்கிறதா?

இதேபோன்ற அணுகுமுறைதான் தலித் ஆய்வு மாணவர் ரோஹித் வெமுலா விஷயத்திலும் நிகழ்ந்தது. முதலில் நாம் அவரை தலித் ஆய்வு மாணவர்கள் என்றோம், பின்னர் தலித் மாணவர் என்றோம். இப்படியெல்லாம் அழைத்தது கூட, செய்திகள் நேர்மையாக சென்றிருந்தால் பிரச்சினையாக இருந்திருக்காது. ரோஹித் வெமுலாவை தற்கொலைக்குத் தள்ளியதில் ஏபிவிபி தலைவர்கள் மற்றும் பண்டாரு தத்தாத்ரேயா போன்றவர்களுக்கு இருக்கும் பங்கைக் குறித்து விசாரணை நடந்து வருகிறது (என்ன சிக்கல் என்பது தெள்ளத் தெளிவாக தெரிந்தது). ஆனால், ஊடக நிறுவனமாக பிரச்சினையை நீர்த்துப் போகச் செய்வதில்தான் முனைப்பாக இருந்தோம். இதன் மூலம், யார் மீது கேள்வி எழுப்பப்பட்டதோ, அவர்களை காப்பாற்றும் வேலையை பார்த்தோம்.

«பாகிஸ்தான் ஜிந்தாபாத்» என்ற முழக்கமே இல்லாத காணொளியை மீண்டும், மீண்டும் ஒளிபரப்பி பற்ற வைக்க முனைந்தோம். இருட்டில் வெளிவந்த குரலை எப்படி கன்ஹையா மற்றும் அவருடைய நண்பர்களின் குரல் என்று நம்பினோம்.? முன்முடிவோடு அணுகியதால் நமது காதுகளுக்கு «பாரதிய கோர்ட் ஜிந்தாபாத்» என்பது «பாகிஸ்தான் ஜிந்தாபாத்» என கேட்டது

சகிப்புத்தன்மை பற்றிய விவாதம் மேலெழுந்த போது, மதிப்பிற்குரிய எழுத்தாளர் உதய் பிரகாஷ் மற்றும் அனைத்து மொழிகளின் முக்கியமான எழுத்தாளர்கள் தங்கள் விருதுகளை திருப்பி கொடுத்தனர். எப்போதும் போல நாம் அவர்களை பற்றி கேள்வி எழுப்பினோம். நமது மொழியின் பெருமை அவர். உதய் பிரகாஷை எடுத்துக் கொள்ளுங்கள், பரந்த வாசகர் வட்டம் கொண்ட அவரது எழுத்தில் நம் வாழ்க்கை இருக்கும், நம் கனவு இருக்கும், நம் போராட்டங்கள் இருக்கும். ஆனால், விருதை திருப்பித் தரும் அவரது எதிர்ப்புணர்வு என்பதை பணம் வாங்கிக் கொண்டு செய்யும் செயலாகவே பரப்புரை செய்தோம். அந்த காலகட்டம் மிகவும் வலி தருவதாக இருந்தது.

ஆனால், இது எவ்வளவு நாளைக்கு, ஏன் இது தொடர வேண்டும்?

என்னுடைய உறக்கமே தொலைந்து போயிற்று, நான் கடுமையான மன உளைச்சலுக்கு உள்ளாகியிருக்கிறேன்.. என்னுடைய குற்றவுணர்ச்சியின் விளைவாகத்தான் இப்படி இருக்கிறேன். தேசத்துரோக முத்திரை குத்தப்படுவதைவிட ஒருவருக்கு வேறெது இழிவாக இருக்க முடியும்? இது ஒருபுறம் இருக்க, அப்படி ஒருவர் மீது முத்திரை குத்துவதற்கு நாம் யார்? நீதிமன்றத்தின் வேலைதான் என்ன?

கன்ஹையாவையும், ஜேஎன்யூவின் பிற மாணவர்களையும் தேச விரோதிகள் என்று முத்திரை குத்துவதில் நாம் வெற்றியடைந்துவிட்டோம். ஆனால், நாளை ஏதாவதொரு மாணவர் கொல்லப்பட்டால், யார் பொறுப்பு? சிலரின் கொலைகளுக்கு மட்டுமல்ல, சில குடும்பங்களின் இருப்புக்கும் அச்சுறுத்தலை உருவாக்கியிருக்கிறோம். கலவரங்களை மட்டுமல்ல உள்நாட்டுப் போரையே உருவாக்கும் அளவுக்கு நஞ்சை மனித மனங்களில் விதைத்து வைத்திருக்கிறோம். இது எந்த வகையான நாட்டுப்பற்று? எந்த வகையான ஊடகவியல்?

நாம் என்ன செய்யவேண்டும் என்று தீர்மானிப்பதற்கு பாஜக, ஆர்.எஸ்.எஸ்-இன் ஊதுகுழல்களா நாம்? பாகிஸ்தான் வாழ்க என்ற குரல் இல்லவே இல்லாத காணொளியை பலமுறை ஒளிபரப்பினோம். இருட்டில் கன்ஹையாவின் குரல்தான் கேட்டது என்று உறுதியாக எப்படி நம்ப முடிந்தது? பாரதிய கோர்ட் ஜிந்தாபாத் என்னும் முழக்கத்தை பாகிஸ்தான் ஜிந்தாபாத் என்று திரித்து, அரசின் செயல்திட்டத்திற்கு அடிபணிந்து, சில இளைஞர்களின், குடும்பங்களின் கனவுகளை சிதைக்கும் நிலைக்கு சென்று இருக்கிறோம். காவல்துறை தனது விசாரணையை முடித்து, முடிவை சொல்லும் வரை காத்திருந்திருக்கலாம்.

உமர் காலித்தின் சகோதரியை வன்புணர்ச்சி செய்துவிடுவோம், ஆசிட் வீசி விடுவோம் என தொடர்ச்சியாக மிரட்டப்பட்டு, துரோகியின் சகோதரி என்று முத்திரை குத்தப்பட்டதில் நமக்கு பங்கில்லையா? ஒன்றுக்கு நூறு முறை தேசத்திற்கு விரோதமாக எந்த முழக்கத்தையும் ஆதரிக்கவில்லை என கன்ஹையா கூறும்போது, நாம் பற்ற வைத்தது பாஜக அரசின் திட்டத்திற்கு உதவியாக இருந்ததால், எவருமே கன்ஹையாவின் குரலை கேட்கவில்லை.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்



படிப்பகம்

# இலங்கையில் அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்!

## கனடா சமவுரிமை இயக்கம்

கனடா சமவுரிமை இயக்கம் முன்னெடுத்த இலங்கையில் அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலைசெய்யக் கோரும் போராட்ட நிகழ்வின் முதல் நிகழ்வாக அமைந்த ஊடகவியலாளர் மகாநாடு ஸ்காபுரே சிவிக் மண்டபத்தில் மாசி மாதம் 27ம் திகதி மாலை மூன்று மணியளவில் நடாத்தப்பட்டது. இலங்கையிலும் புலம்பெயர் ஐரோப்பிய நாடுகளிலும் இப்போராட்ட நடவடிக்கைகள் தெடர்ச்சியாக நடத்தப்பட்டுகொண்டிக்கும் இவ்வேளையில் புலம்பெயர் இலங்கையர் பெரும் தொகையாக வாழ்ந்து வரும் ரொறொன்ரோ நகரில் நடைபெற்றது. கனடா சமஉரிமை இயக்கம் கனடாவில் ஒன்றரை வருடங்களிற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது. கடந்த வசந்தகாலத்தில் «யாவரும் கேளிர்» என்ற கலை நிகழவினை வெற்றிகரமாக நடாத்திய அமைப்பினர் தொடர்ச்சியாக உலகளாவிய முஸ்லிம் மக்கள் மேல் வலுத்துவரும் வெறுப்புணச்சியை எதிர்த்து பொதுகூட்டம் ஒன்றையும் நடாத்தியது.

இக்கூட்டத்தில் ஊடகவியலாளர்கள் மற்றும் இணையத்தள ஊடகவியலாளர்கள் பலரும் கலந்து கொண்டதுடன் பல சமூகசெயற்பாட்டாளரும் பங்குபற்றி கருத்துக்களை பகிர்ந்து கொண்டதுடன் பல கேள்விகளை கேட்டு சமஉரிமை இயக்கத்தின் கொள்கைகளையும் புரிந்து கொண்டனர்.

கூட்டம் கனடா சமஉரிமை இயக்க பொறுப்பாளர் நேசன் ஒழுங்குபடுத்தினார். ஆரம்பத்தில் லண்டன் சமஉரிமை இயக்க செயற்பாட்டாளரான சீலன் இலங்கையில் நடை பெறும் நடவடிக்கைகள் மற்றும் ஜரோப்பிய




செயற்பாடுகள் பற்றியும் இவற்றால் எதிர்கொள்ளும் பிரச்சனைகளையும் விளக்கினார். அத்தோடு தற்போதய இலங்கை அரசும் கடந்த அரசும் எவ்வகையில் அடக்குமுறைகளை பிரயோகிக்கின்றன என்பதை எடுத்துக் கூறினார். அடுத்து கனடா சமஉரிமை செயற்பாட்டாளரான சமிந்த தனது உரையில் எதிர்கால நடவடிக்கைகளை எடுத்துக்கூறியதுடன் அதற்கான ஆதரவினை பார்வையாளர்களிடமும் ஊடகவியலாளர்களிடமும் கோரினார். மேலும் சிறைக்கைதிகளின் நிலவரங்களையும் அனாதரவான கைதிகள் அவர்களின் விடுதலைக்கான தாங்களே உண்ணாவிரதப்போராட்டத்தில் ஈடுபட்டதையும் சிறைக்கைதிகளின் புள்ளிவிவரம் விடுவிக்கப்பட வேண்டிய அவசியத்தினையும் கனடிய செயற்பாட்டாளரான விஜி முருகையா தெளிவுபடுத்தினார். கடைசியாக சம






உரிமை இயக்க தோற்றத்தினையும் அதன் அவசியத்தையும் சபேசன் கூறினார்.

கலந்துரையாடலில் பல ஆர்வலர்களும், சமூகச்செயற்பாட்டாளரும் பல கருத்துக்களை கூறினார்கள். கனடாவில் சிங்கள ஆர்வலர்ளை எப்படி அதிகரிப்பது என்றும் பெரும் எண்ணிக்கையில் ஊடகம்களை அணுகுவது என்பதையும் கனடிய ஆங்கில ஊடகம்களை நோக்கிய பிரச்சாரங்களை மேற்கொள்ளுவது என்றும் ஆலோசனைகளும் பெறப்பட்டன.

கூட்ட முடிவில் நேசன் கலாபம் சிறீனிவாசன், தமிழர் செந்தாமரை ரவி, தமிழன் வழிகாட்டி செந்தி, TVI, TET நிறுவனம், லங்கதாஸ் போன்றோருக்கு நன்றி கூறினார்.

---

## ஒரு ஊடகவியலாளரின்.... 13ம் பக்க தொடர்ச்சி

கன்ஹையாவின் வீட்டை பார்த்தீர்களா? அது வெறும் வீடல்ல, இந்நாட்டின் விவசாயிகள் மற்றும் சாதாரண மக்களின் துயர வெளிப்பாடு. இந்நாட்டில் புதைக்கப்படும் எண்ணற்ற கனவுகளின் புதைவிடம் அது. ஆனால், நாம் இவற்றையெல்லாம் பார்க்க கண்ணற்றவர்களாகவே இருக்கிறோம்!

இதை சொல்வதற்கு எனக்கு மிகுந்த வலியாகத்தான் இருக்கிறது, ஆனால், சொல்ல வேண்டும், நான் வசிக்கும் பகுதிகளிலேயே இதுபோன்ற ஏராளமான குடிசைகள் இருக்கின்றன. இந்தியாவின் கிராமப்புற வாழ்க்கை என்பது உண்மையாகவே துயர்மிக்கது, அசிங்கமானது. விளைவுகளை குறித்த எந்த கவலையுமில்லாமல் எளிய மக்களின் மனங்களில் விஷத்தைக் கலந்திருக்கிறோம். முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ள கன்ஹையாவின் தந்தைக்கு ஏதேனும் நேர்ந்தால், அதற்கு யார் பொறுப்பேற்றுக் கொள்வது? இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கை அவருடைய குடும்பத்தைப் பற்றி செய்தி வெளியிட்டிருக்காவிட்டால், விளிம்பு மக்களின் நலன்களுக்காக பேச வேண்டும் என்ற ஊக்கத்தை கன்ஹையா எங்கிருந்து பெற்றிருப்பார் என்று எவருக்கும் தெரிந்திருக்காது

ராம நாகா மற்றும் இதரர்களின் பின்புலமும், வறுமையை எதிர்கொண்டு போராடுவதுதான். ஜேஎன்யூவில் வழங்கப்படும் உதவித்தொகையின் வழியாகத்தான் அவர்கள் தங்கள் கல்வியை தொடர்வதோடு, வாழ்க்கையில் நெடுந்தூரம் பயணிப்பதற்கான உறுதியையும் பெறுகிறார்கள். ஆனால், டி.ஆர்.பி-க்காக அலையும் வக்கிரமான நமது மனநிலை ஏறக்குறைய அவர்களது வாழ்க்கையையே நாசப்படுத்தியிருக்கிறது

அவர்களது கருத்துக்களோடு நமக்கு முழுமையான உடன்பாடு இல்லாமல் இருக்கலாம், ஏன் அவர்களது கருத்துகள் தீவிரத் தன்மை கொண்டவை என்று கூட தோன்றலாம். இருந்துவிட்டு போகட்டும், இதனால் எல்லாம் எப்படி அவர்கள் தேசத்துரோகிகள் ஆவார்கள்? இந்த விவகாரத்தில் நீதிமன்றம் எப்படி செயல்பட வேண்டும் என்று தீர்மானிக்க நாம் யார்? டெல்லி காவல்துறையினர் இந்த விவகாரத்தில் ஜீ நியூஸை கை காட்டியிருப்பது தற்செயலானதா? நாம் டெல்லி காவல்துறையோடு கூட்டு வைத்திருக்கிறோம் என்று பேசப்படுகிறது. இதற்கு விளக்கமாக மக்களிடம் சொல்ல நம்மிடம் ஏதாவது இருக்கிறதா?

எந்த வகையிலும், ஜேஎன்யூ அல்லது அதன் மாணவர்களுடன் நாம் ஏன் வன்மம் கொண்டிருக்கிறோம். நவீன வாழ்க்கைக்கான கருத்துக்கள், ஜனநாயகம், பன்முகத்தன்மை, மாற்று கருத்துக்கள் என அனைத்தையும் உள்ளடக்கிய அழகான கலவைதான் ஜேஎன்யூ என்பது என் கருத்து. ஆனால், அது கிரிமினல்கள் மற்றும் தேசவிரோத சக்திகளின் கூடாரமாக பிரச்சாரம் செய்யப்படுகிறது.

ஜேஎன்யூ கிரிமினல்களின் கூடாரமா அல்லது நீதிமன்ற வளாகத்தில் வைத்தே இடதுசாரித் தொண்டர்களை தாக்கிய பாஜக எம்.எல்.ஏ ஓபி சர்மா கிரிமினலா? எம்.எல்.ஏவும் அவரது நண்பர்களும் சிபிஐ தொண்டர் அமீக் ஜமேய்யை கீழே தள்ளி தாக்கும்போது, காவல்துறையினர் வேடிக்கை பார்த்தனர். நம்முடைய தொலைக்காட்சியும் இதே காட்சியை காண்பித்து ஓபி. சர்மா தாக்கியதாக குற்றம் சாட்டியது. அது என்ன குற்றச்சாட்டு என்று நான் கேட்டேன். மேலிட உத்தரவு என்ற பதில் வந்தது. நமது மேலிடம் எப்படி இவ்வளவு அதள பாதாளத்தில் தள்ளப்பட்டது. மோடிக்கு ஆதரவாக எழுதுவதை கூட புரிந்து கொள்ள முடிகிறது. தற்போது ஓபி.சர்மா, ஏபிவிபிக்கும் கூட பரிந்துரைக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது என்பதை எப்படி புரிந்து கொள்வது?

என்னுடைய கையறு நிலையையும், என்னுடைய ஊடக செயல்பாட்டையும் எண்ணி வெட்கப்படுகிறேன். இதற்காகத்தான் அனைத்தையும் விட்டுவிட்டு ஊடகப்பணிக்கு வந்தேனா? கண்டிப்பாக இல்லை.

என் முன் இரண்டு தேர்வுகள் இருக்கின்றன - ஒன்று ஊடகப்பணியையே துறக்க வேண்டும் அல்லது தர்மசங்கடமான இந்த நிலையிலிருந்து விலக வேண்டும். நான் இரண்டாவதை தேர்வு செய்கிறேன். என்னுடைய வேலைக்கும், அடையாளத்திற்கும் சம்பந்தமுள்ள விஷயங்களை தாண்டி தேவையில்லாத எதையும் கேட்கவில்லை. சிறு துரும்பென்றாலும், ஏதோவொரு வகையில் நானும் இதற்கு பொறுப்புதான். இதை செய்வதின் வழியாக எனக்கு வேறு இடங்களில் வேலை கிடைக்காது என்பதை உணர்ந்து இருக்கிறேன்.

ஆனால், இதே வேலையில் தொடர்ந்து நீடித்தால் லட்ச ரூபாய் சம்பளத்தை விரைவில் எட்டிவிட முடியும் என்பதையும் தெரிந்து வைத்திருக்கிறேன். ஆனால், இந்த நல்ல சம்பளம் என்னிடமிருந்து கடுமையான விலையை கேட்கிறது. அதை இனிமேலும் என்னால் தர இயலாது. சாதாரண நடுத்தர வர்க்க குடும்ப பின்புலத்திலிருந்து வருகிறவன் என்ற முறையில், ஒரு மாதம் சம்பளம் இல்லையானாலும் கடுமையான பிரச்சினைகளை சந்திக்க நேரிடும் என்பது புரிந்தாலும், இனிமேலும் என் மனசாட்சியை நான் கொல்ல விரும்பவில்லை.

எனக்கு தனிப்பட்ட முறையில் யார் மீதும் எந்த வருத்தமும் இல்லை என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். என்னுடைய கேள்விகள் அனைத்துமே ஆசிரியர் குழு மற்றும் நிர்வாகத்தின் கொள்கைகளை குறித்துதான். இது சரியான பொருளில் புரிந்து கொள்ளப்படும் என்று நம்புகிறேன்.

தனது வலதுசாரி சாய்வை வெளிப்படுத்துவதற்கு ஊடகத்திற்கு உரிமை உண்டென்றால், தனிநபர் மட்டத்தில் எங்களுக்கும் எங்கள் அரசியல் சாய்வை வெளிப்படுத்துவதற்கு அனைத்து உரிமைகளும் உண்டு.

ஒரு ஊடகவியலாளனாக தனிநபர் கருத்து திணிப்பு இருக்கக் கூடாது என்பது பணி சார்ந்த கடமை. ஆனால், தனிப்பட்ட முறையில், விழிப்புற்ற குடிமகனாக எனது பாதை இடதுவயப்பட்டது - கட்சி அலுவலகத்தில் இருப்பதைவிட எங்கள் சொந்த வாழ்க்கையில் இருப்பதுதான் இடது மனநிலை. அது என் அடையாளம்

இறுதியாக, ஓராண்டு காலமாக தொடர்ந்து பயணம் செய்ய அனுமதித்த, ஜீ நியூஸில் நிறைய நண்பர்களை உருவாக்க வாய்ப்பளித்ததற்கு நன்றி.

அன்புடனும், மதிப்புடனும்

விஷ்வா தீபக்.



படிப்பகம்

# பேராசிரியர்கள் வெள்ளிக்கிழமைகளில் கோவணம் மட்டுமே கட்ட வேண்டும்

## யாழ் பல்கலைக்கழகம்

மாசி மாத இறுதி வாரத்தில் "தமிழ் காலாசாரத்தைக்" காக்கப் புதிய சட்டங்களை யாழ். பல்கலைக்கழகம் அறிமுகப்படுத்தியது. அச் சட்டங்களை நடைமுறைப்படுத்த எடுத்த முயற்சிகள், எதிர்ப்புகள் காரணமாக நிறுத்தப்பட்டது. ஆனாலும், "தமிழ் காலாசாரத்தைக்" காக்க உருவான புதிய சட்டங்களை எதிர்த்து எழுதப்பட்ட இப்பதிவு, காலத்தின் தேவை பிரசுரிக்கப்படுகிறது.

---

*மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்*
*பழித்தது ஒழித்து விடின்*

**– அய்யன் வள்ளுவன்**

தமிழ்ப்பண்பாட்டில் தனித்துவமான ஆராய்ச்சிகள் செய்து வரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இனி மேல் பேராசிரியர்கள் அனைவரும் வெள்ளிக்கிழமைகளில் கோவணம் மட்டுமே கட்டிக் கொண்டு பல்கலைக்கழகத்திற்கு வரவேண்டும் என்று அறிவித்திருக்கிறது. தமிழ்ப் பண்பாட்டை வளர்க்கும் தன் தலையாய பணியை கருத்தில் கொண்டு பேராசிரியர்கள் அனைவரும் பாரம்பரிய உடையான கோவணத்தை மட்டுமே கட்டிக் கொண்டு வெள்ளிக்கிழமைகளில் வர வேண்டும் என்றும் வரும் காலங்களில் மற்ற நாட்களிலும் கோவணத்தை மட்டுமே கட்டிக் கொண்டு வர திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன என்றும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

கூச்ச சுபாவம் உள்ள பேராசிரியர்கள் தமிழ்நாட்டில் வேட்டி, சாரம் என்பவற்றிற்கு அணியும் கோவணத்தை விட கொஞ்சம் நீளம் கூடிய லங்கோட்டை அணிந்து கொண்டு கவுண்டமணி படங்களில் வருவது மாதிரி பல்கலைக்கழகத்திற்கு வருவதற்கு சிறிது காலத்திற்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கோவணமோ, லங்கோடோ டெனிம் துணியில் தைக்கக் கூடாது என்றும் முன்பு கூட்டுறவுச் சங்கக் கடைகளிற்கு வந்த பூக்கள் அச்சிடப்பட்ட சீத்தை துணிகளிலேயே பூப்போட்ட கோவணங்கள் தைக்க வேண்டும் என்று விதி இலக்கம் ஐந்து தெரிவிக்கிறது. ஏனென்றால் பேராசிரியர்கள் காதிலே பூ வைக்க மறந்தாலும் அந்த இடத்திலே பூ இருப்பதன் மூலம் அக்குறை தீர்க்கப்படும் என்றும் அவ்விதி கூறுகிறது.

எங்கு மயிர் வளர்க்கலாம், எங்கு மயிர் வழிக்கலாம் என்று யாழ் பல்கலைக்கழக மயிரியல் துறை ஆராய்ந்து வருவதாகவும் அந்த ஆராய்ச்சிகள் விரைவில் வெளியிடப்படும் என்றும் மயிரியல் துறைத்தலைவர் தெரிவித்தார். மயிர் ஆராய்ச்சி முடிவுகள் வரும் வரை பேராசிரியர்கள் அசல் ஆனைக்கோட்டை நல்லெண்ணையை தில்லையம்பலம் கந்தையா கடையில் வாங்கி உடல் முழுக்க பூசிக் கொண்டு பளபளத்த படி வர வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். (இவை நமது கற்பனை, ஆனால் போகிற போக்கைப் பார்த்தால் இவை உண்மையாவதற்கு தமிழ் கூறு நல்லுலகில் சாத்தியம் இல்லை என்று கூறி விட முடியாது.)

பெண்கள் வெள்ளிக்கிழமைகளில் சேலை கட்ட வேண்டும் என்ற ஒரு வரியில் எத்தனை பிற்போக்குத்தனங்கள் அடங்கியிருக்கின்றன. வெள்ளிக்கிழமை





புனிதநாள் என்னும் இந்துத்துவம், சேலை கட்ட வேண்டும் என்னும் பெண்ணடிமைத்தனம் என்று ஒரு வரியில் ஒரு கூடை குப்பையை வாரிக் கொட்டியிருக்கிறார்கள். ஆனால் ஆண்கள் வேட்டி கட்ட வேண்டும் என்று இந்த பண்பாட்டுக்காவலர்கள் அறிக்கை விடவில்லை. ஆண்களை வெள்ளிக்கிழமை என்னும் இந்துமதப் புனிதத்தில் இருந்தும், பண்பாட்டு உடையான வேட்டியில் இருந்தும் விலக்கியது குறித்து வடிவேலோடும், வண்ணப்பொட்டுடனும் காட்சி தந்த அய்யா விக்கினேஸ்வரன், ஆறு திருமுருகன் போன்ற பக்த கோடிகள் பதறப் போகிறார்கள்.

ஏற்கனவே பழமைவாதப் பிற்போக்குத்தனங்களில் மூழ்கியிருக்கும் தமிழ் பல்கலைக்கழக மாணவர்களை இன்னும் பின்னுக்கு தள்ளும் தந்திர அரசியலே இந்த பண்பாட்டுக் காவலர்களின் உண்மையான நிகழ்ச்சி நிரல். மக்கள் விரோத இலங்கை அரசின் கல்வியை தனியாருக்கு விற்கும் கள்ளத்தனத்தை எதிர்த்து இலங்கை எங்கும் மாணவர்கள் போராடுகிறார்கள். அந்த முற்போக்குப் போராட்டங்களில் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் இணைந்து விடக்கூடாது என்பதற்காக இந்துமதப்புனிதம், தமிழ்ப்பண்பாட்டு உடை என்ற சகதிகளிற்குள் மாணவர்களை தள்ளி விடப்பார்க்கிறார்கள்.

இந்தியாவில் மோடியின் கேடிகளான இந்துமத வெறியர்கள் இந்துமதம், பாரதப்பண்பாடு என்று சொல்லிக் கொண்டு பல்கலைக்கழகங்களில் ஆடும் வெறியாட்டத்தின் பயங்கரவாத அரசியலால் மாணவர்கள் தற்கொலை செய்து கொள்கிறார்கள். சிறுபான்மை இனங்களை, மதங்களைச் சேர்ந்தவர்கள் ஒதுக்கப்படுகிறார்கள். முற்போக்கு அரசியல், மாணவர்களின் உரிமை, மக்களின் பிரச்சனைகளிற்க்காக போரடும் மாணவர்கள் குறிவைக்கப்படுகிறார்கள். கைது செய்யப்படுகிறார்கள். உலகம் முழுக்க மதம், பண்பாடு என்று சொல்லிக் கொள்ளும் பிற்போக்குவாதிகளின் முகமூடிகளிற்கு பின் மக்கள்விரோதம் என்னும் பயங்கரவாதமே ஒழிந்திருக்கிறது.

தெலுங்கு தேச கலப்பு சோழர்களின் காலத்திலேயே தமிழ்ப்பெண்களின் உடையாக சேலை அணியும் வழக்கு ஏற்பட்டிருக்கிறது. மத்திய கால சோழர்களின் காலத்திற்கு முற்பட்ட சிற்பங்களில் மார்புக்கச்சையும் இடுப்பிலே ஒரு பாவாடையுமே காணப்படுகிறது. இது சிற்பிகளின் கற்பனையல்ல. இன்றும் பழந்தமிழ் சொற்களையும், பண்பாடுகளையும் வைத்திருக்கும் மலையாள தேசத்தில் இதை ஒத்த உடைகளை பெண்கள் அணிவதை இன்றும் காணலாம். இரவிக்கை என்று இன்று அழைக்கப்படுவதை குப்பாயம் என்ற பழந்தமிழ் சொல்லின் மூலம் இன்றும் அவர்கள் அழைப்பதன் மூலம் தமிழரின் உடைகள் குறித்த வரலாற்றை அறிந்து கொள்ளமுடியும்.

இன்றைக்கு பெண்கள் சேலை கட்ட வேண்டும் என்று சொல்லும் பண்பாட்டுவெறியர்களின் முன் தோன்றிய மூத்த குடிகளான சாதிவெறியர்கள் ஒடுக்கப்பட்ட சாதிப்பெண்கள் சேலை கட்டுவதையோ, இரவிக்கை போடுவதையோ அனுமதிக்கவில்லை. திருவிதாங்கூர் சமஸ்தானத்திலே ஒடுக்கப்பட்ட சமுதாயங்களைச் சேர்ந்த பெண்கள் மார்பை மூட சாதிவெறி அனுமதிக்கவில்லை. பெண்கள் தமது மார்பகங்களை மூடுவதற்காக தோள்சீலைக் கலகம் என்னும் போராட்டத்தை பல ஆண்டுகளாக இந்து சாதிவெறியர்களிற்கு எதிராக நடத்த வேண்டி இருந்தது. இந்துமதப்புனிதம் என்னும் கேவலம் பெண்களை எப்படி நடத்தியது என்பதன் அவல வரலாறு இப்படித்தான் இருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் ஒடுக்கப்பட்ட சமுதாயப்பெண்கள் சேலையை மார்பு வரை கட்டினார்கள். அதைக் குறுக்குக்கட்டு என்று அழைப்பார்கள். ஆனால் சாதிவெறியர்களிற்கு அதைக்கூட பொறுத்துக் கொள்ள முடியவில்லை. ஆடு, மாடுகளிற்கு உயர்ந்த மரங்களில் குழை, தழைகளை ஒடிப்பதற்காக வைத்திருக்கும் கொக்குத்தடியால் (கொக்குப் போல உயரமான தடி, முனையில் இரும்பாலான கத்தி போன்ற சத்தகம் இருக்கும்.) வீடுகளில் ஒழித்து நின்று கொண்டு தெருக்களால் போகும் பெண்களின் குறுக்குக்கட்டுகளை அறுத்து எறிவார்கள்.


நமது ஆச்சிகள் குறுக்குக்கட்டுடன் புல்லுப் புடுங்கினார்கள் அரிசி புடைத்தார்கள். நமது பாட்டன்கள், பூட்டன்கள் வயலில் மண்வெட்டி பிடிக்கும் போது கோவணம் கட்டிக் கொண்டே மண்ணைக் கொத்தினார்கள். வள்ளத்தில் ஆறு முழத்து மரக்கலால் தாங்கும் போது கோவணமே கட்டியிருந்தார்கள். ஏறுபட்டி, தழைநாருடன் பனையிலும், தென்னையிலும் ஏறும் போது இடுப்பில் சிறு துண்டு தவிர வேறொன்றும் இருக்கவில்லை.

ஆதி மனிதர்கள் விலங்குகளின் தோல்களை அணிந்து கொண்டார்கள். அதிலிருந்து உடை என்பது காலநிலைக்கும், தொழில்களிற்கும் ஏற்ப வரலாறு முழுக்க மாறிக் கொண்டே வந்திருக்கிறது. ஒருவரது உடை என்பது அவரது சுதந்திரம், அதில் எவரும் தலையிட முடியாது.. மதவெறியர்களும், மண்டை கழண்ட பிற்போக்குவாதிகளுமே மற்றவர்களின் சுதந்திரங்களில் தலையிடுவார்கள். தலிபான்கள் தாடி வளர்க்காதவர்களை கொலை செய்தார்கள். தமிழ்த் தலிபான்கள் தாடி வழிக்கச் சொல்கிறார்கள். இவர்களிற்காகத் தான் இரண்டாயிரம் வருடங்களிற்கு முதல் அய்யன் வள்ளுவன் «ஆணியே புடுங்க வேணாம்» என்பது போல ஒரு குறளை சொல்லிப் போயிருக்கிறான்.



படிப்பகம்

# போராட்டம்



41-32 கெந்தஹேன வத்தை, தெபானம, பன்னிப்பிட்டிய
தொலைபேசி / தொலைநகல் : 094 113185692
mpssrilanka@gmail.com, http// www.peoplesstruggle.com

## கூட்டமைப்பு என்ற மக்களின் உரிமைகளை விற்கும் தரகுக் கும்பல்!

தமிழர் விடுதலைக் கூட்டணியில் இருந்தவர்கள் மற்றும் வேறு இயக்கங்களில் இருந்த பிரமுகர்களை ஒன்றிணைத்து, புலிகள் உருவாக்கிய தமிழத் தேசிய கூட்டமைப்பானது புலிகளின் அரசியல் தேவைக்கு ஏற்ப இயங்கியது. புலிகள் அழிக்கப்பட்டதும், இந்திய ஆட்சியாளர்களின் கைம்பொம்மையாக மாறி இந்திய அரசின் பொருளாதார அரசியல் தேவைக்கேற்றவாறு தமிழ் மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றது.

கடந்த பாராளுமன்றத் தேர்தலின் போது தமிழ் மக்களின் இனப்பிரச்சனைக்காகத் தாம் உலகநாடுகளிடம் நியாயம் கேட்டுத் தீர்வை பெற்றுத் தருவோம் எனவும், முள்ளிவாய்க்காலில் சரணடைந்து காணமல் ஆக்கப்பட்டவர்கள், அரசியல் கைதிகள் மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட பொது மக்களின் வாழ்விடங்களை விடுவிக்கப் போராடுவோம் எனவும் உறுதி மொழி வழங்கி, மக்களை நம்ப வைத்து பெருவெற்றி பெற்று பாராளுமன்ற கதிரைகளையும், அரச வசதிகளையும் சுகபோகங்களையும் பெற்றுத், தம்மை மேம்படுத்திக் கொண்டனர். மக்களிற்கு வழங்கிய உறுதி மொழிகளை குப்பைக்குள் வீசி எறிந்து விட்டனர் இந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர்.

இலங்கையில் நவதாராளவாத பொருளாதாரம் மிகத் தீவிரமாக அமெரிக்காவின் தலைமையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதற்கு எதிரான போராட்டங்களை மாணவர்களும் மக்களும் இடதுசாரிகளும் தெற்கில் பரவலாக முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றனர். இலவசக் கல்வி மற்றும் மருத்துவத்திற்கு சங்கூதும் முன்னெடுப்புகள் ஆரம்பித்துள்ளன. தொழிலாளர்களிற்கு சாதமாக இருந்த சில சட்டங்கள் கூட, முதலாளிகளிற்கு சாதகமாக மாற்றப்படுகின்றன. புதிதாக அரச வேவைகளிற்கு சேர்த்துக் கொள்ளப்படுபவர்களிற்கு ஓய்வூதியம் மறுக்கப்படுகின்றது. தனியார் துறை ஊழியர்களின் சேமலாப நிதியினைக் கொள்ளையிடும் நடவடிக்கை ஆரம்பித்துள்ளது. மொத்தத்தில் மக்களிடமிருந்து கோவணத்தைத் தவிர அனைத்தையும் பறித்தெடுப்பதற்கான, நவதாரளவாத பொருளாதாரக் கொள்கையினை நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் தொடங்கி விட்டன.

நாட்டின் பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சி தலைவர் பதவி வகிக்கும் சம்பந்தரோ மேற்கூறிய ஆபத்துக்கள் குறித்தோ, அன்றி போராடும் மாணவர் பொதுமக்கள் மீதான அரசின் அடக்குமுறை குறித்தோ இதுவரை அக்கறை கொண்டது கிடையாது. குறைந்த பட்சம் தமிழ் மக்கள் இன்று முகம் கொடுக்கின்ற பிரச்சினைகள் குறித்து பாராளுமன்றத்தில் பேசியதோ, மக்களுடன் இணைந்து நின்று போராட்டங்களை நடாத்தியதோ கிடையாது. அரசியல் கைதிகள் தமது விடுதலைக்காக போராடும் போதெல்லாம், அதனை மழுங்கடிக்கும் விதமாக செயற்படுகின்றது இந்த கூட்டமைப்பு. «போராடாதையுங்கோ நாங்கள் பேசிக் கொண்டிருக்கிறோம்» «உண்ணாவிரதமிருந்து கெடுத்து விடாதையுங்கோ» என்று குழப்பிக் குழப்பி இன்று, மைத்திரி – ரணில் அரசு, அரசியல் கைதிகள் கிடையாது, சிறையில் இருப்பவர்கள் கிரிமினல் குற்றவாளிகள் என்று சொல்லும் நிலைக்கு வைத்துள்ளனர்.

அமெரிக்கா மற்றும் இந்திய ஆட்சியாளர்களினால் நவதாராளவாத பொருளாதாரத்தை தீவிரமாக முன்னெடுப்பதற்கும், மைத்திரி – ரணில் ஆட்சிக்கு இடையூறு வராமல் இருப்பதற்காகவும், நாட்டில் இன்னமும் எரிந்து கொண்டிருக்கும் தேசியப்பிரச்சினை மீள எழுற்ச்சி பெறாமல் இருப்பதற்காகவும் தமது விசுவாசிகளாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பினருக்கு கொடுக்கப்பட்ட ஒரு பதவியே இந்த எதிர்க்கட்சித் தலைவர் பதவி.

பலாலியிலிருந்து மையிலிட்டி வரை இந்திய நலன்களிற்க்காக, பொது மக்களின் காணிகள் வீடுகள் மீள கையளிக்கப்பட போவதில்லை என்பது உறுதியாகி உள்ளது. இந்நிலையில் அண்மையில் மூதூருக்கு ஆடை தொழிற்சாலை ஒன்றினை திறந்து வைக்க சென்ற சம்பந்தர், அங்கு சம்பூர் அனல் மின்னிலைத்திற்கு எதிராக போராடிய மக்கள் மத்தியில் «இந்தியா இதனை அமைக்கவில்லை என்றால் சீனா இந்த இடத்தில் அனல் மின்னிலையம் அமைத்திருக்கும்» என இந்திய அரசின் செயற்பாட்டை நியாயப்படுத்திப் பேசித் தனது இந்திய விசுவாசத்தை வெளிப்படுத்தியுள்ளார். இந்த அனல் மின்னிலையத்தால், இப்பகுதியில் எதிர்காலத்தில் ஏற்படவுள்ள மக்கள் உடல்நல குறைபாடுகள் குறித்தோ, கடல்வள அழிவுகள் குறித்தோ சம்பந்தருக்கும் அவர் கட்சியினருக்கும் அக்கறை கிடையாது என்பதே உண்மை.

தென்பகுதியில் நாட்டை கொள்ளையிடும் சுதந்திரக்கட்சியையும், ஐக்கிய தேசிய கட்சியையும் மாறி மாறி பதவியில் அமர்த்தி, சாதாரண உழைக்கும் மக்கள் தமது வாழ்க்கையில் எந்த மாற்றத்தையும் காணாதது போல, வடக்கு கிழக்கில் தேர்தல் காலங்களில் மேடை மேடையாக ஏறித் தமிழ்த் தேசியம் பேசி மக்களை உசுப்பேத்தி உசுப்பேத்தி, பாராளுமன்றத்துக்கு போய் எந்தச் சிங்கள அரசு- தமிழின எதிரி என்றார்களோ, அவர்களிடம் அனைத்து சலுகைகளையும் வசதிகளையும் பெற்று தம்மை மேம்படுத்துபவர்களிடம் தொடர்ந்தும் மக்கள் ஏமாந்து கொண்டிருக்கின்றனர். தமிழ் தலைமைகள் என்று தம்மைக் கூறிக் கொள்பவர்கள், தமிழ் மக்களை அடைவு வைத்துத், தமது சொந்த வாழ்வை மேம்படுத்த யார் காலையும் நக்கக் கூடியவர்களாகவே, அன்று தொட்டு இருப்பது இரகசியமான விடயமல்ல.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மற்றும் ஏனைய தமிழ்க் கட்சிகள் எல்லாம் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளே. எனவே மக்கள் தமது போராட்டங்களில் இவர்களின் தலையீட்டுகளிற்கு எதிராக போராடுவதும், தமது நியாய பூர்வமான கோரிக்கைகளுக்காக விட்டுக் கொடுக்காத போராட்டங்களை நாடாத்துவதும், நாட்டிலுள்ள உழைக்கும் சிங்கள, முஸ்லீம், மலையக மக்களின் போராட்டங்களுடன் தம்மை இணைத்துக் கொள்வதும் தான், இந்தக் கயவர்களிடம் இருந்து மீள்வதற்க்கான வழியாக அமையும் .




16.்.02.்.2016 அன்று கொழும்பில், ஒன்றிணைந்த அகில இலங்கை வேலையற்ற பட்டதாரிகள் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாபெரும் கண்டன பேரணி இடம்பெர்றது .இந்த போராட்டத்தில் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் வேலையற்ற பட்டதாரிகள் பல கோரிக்கைகளை முன்வைத்து, அரசியல்வாதிகளால் விதைக்கப்பட்ட இன-மத வேறுபாடுகளை கடந்து ஒன்றினைந்து கலந்து கொண்டனர். போராட்டக் காரர்கள் மீது போலீஸ் கண்ணீர் புகைக்குண்டுகளையும் , அதி வேகதண்ணீர் தீயணைப்புக் கருவிகளையும் பிரயோகித்தனர். பல போராட்டக்காரர் காயமடைந்துள்ளனர்.

**எந்த வகை ரத்தமானாலும்,**
**மிதிபடுவது சேர்ந்தே நித்தம்**

«எந்த வகை ரத்தமானாலும், மிதிபடுவது சேர்ந்தே நித்தம்» என்ற தலைப்பிலான துண்டுப் நாடு முழுவதும் இரு மொழிகளில் விநியோகிக்கப்பட்டது. இத்துண்டுப்பிரசுர விநியோகத்தையும், மக்களுடனான இனவாதத்திற்கு எதிரான கலந்துரையால்களையும், தெருமுனைக் கூட்டங்களையும் மாசி மாத இறுதி வாரம் முழுவதும் சமவுரிமை இயக்கம் நாடாத்தியது.







"உங்களுக்குக் கொண்டாட்டம்- எங்களுக்குத் திண்டாட்டம்" முன்னிலை சோசலிசக் கட்சியின் மைத்ரி-ரணில் அரசின் மக்கள் விரோத அரசியலுக்கு எதிரான பிரச்சாரக் கூட்டங்கள் மாசி மாதம் முழுவதும் பல பிரதேசங்களில் நடத்தப்பட்டது.

**எதிர்காலத்திற்காகப் போராடுவோம்!**

41- 32 கெந்தஹேன வத்தை, தெபானம, பன்னிப்பிட்டிய வசிக்கும் ஜீட் சில்வா புள்ளே ஆகிய என்னால் கடவத்தை, கோனஹேன பாதை, சத்தர்மதிலகாராம மாவத்தையில் அமைந்துள்ள ஸ்பெக்டரா எட்வடைவிங் நிறுவனத்தில் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது.

படிப்பகம்